# ஞானச்சுடர்




சித்திரை 2020

268ஆவது மலர்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**
**தானம் செய்வாரின் தலை.**

**பொருள் :** ஒருவன் மனமார மெய் சொல்வானாயின் அவன் தவத்தோடு தருமத்தையும் செய்வாரினும் சிறந்தவனாவான். (295)

**பொய்யாமை யன்ன புகழில்லை எய்யாமை**
**எல்லா அறமுந் தரும்.**

**பொருள் :** ஒருவனுக்குப் பொய் பேசாமலிருப்பதுபோல் புகழுக்கு ஏதுவேறு யாதும் இல்லை; அது அவன் வருந்தாமல் இருக்க எல்லா நலங்களையும் கொடுக்கும். (296)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முக்தி நல்குமே

### இன்பம் ஏது

**கலிவிருத்தம்**



எல்லாம் நீயென எண்ணுதல் இன்பமே
எல்லாம் நானென எண்ணுதல் இன்பமே
எல்லாஞ் சிவன்செயல் என்பதும் இன்பமே
எல்லாம் என்செயல் என்பதும் இன்பமே 01

குருபரன் அடியிணை ஏத்துதல் இன்பம்
குருபரன் அருட்பணி ஆற்றுதல் இன்பம்
குருபரன் அருள்வாக் காக்கிடும் இன்பம்
குருபரன் சரண்புகக் கூடிடும் இன்பமே 02


மோனத் தாழுதல் முடிவிலா இன்பம்
ஞானத் துயருதல் நவையறு மின்பம்
மானமார் நற்றவம் மதிப்பரு மின்பம்
யானென தற்றிடல் எல்லையில் இன்பமே 03

# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 268

2020 **பொருளடக்கம்** சித்திரை


| | | |
|---|---|---|
| பாவ புண்ணியங்களை... | கே.எஸ். சிவஞானராஜா | 01 - 03 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 04 - 08 |
| வாய்விட்டுச் சிரித்தால்... | பு. கதிரித்தம்பி | 09 - 10 |
| ஆனந்தக் கிருஷ்ணனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 11 - 13 |
| பைரவியார் சுவாமிகள் | முருகவே பரமநாதன் | 14 - 18 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 19 - 21 |
| அவர் இவர் என்னாது... | ஆர்.வீ. கந்தசுவாமி | 22 - 23 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 24 - 25 |
| திருவைந்தெழுத்தின் சிறப்பு | இ. ஜெயந்திரன் | 26 - 32 |
| பல்வேறு நாமங்கள்... | ச. சஜீவன் | 33 - 38 |
| காவலனாக வந்து காத்தருள... | கி. குலசேகரன் | 39 - 40 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 41 - 42 |
| பக்தி வலையில் பெண்மணிகள் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 43 - 44 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 45 - 48 |
| தவப்பயன், மேலுலக இன்பம்... | க.கு.க. சிவபாலன் | 49 - 51 |
| ஊரடங்கு வேளையிலும்... | வல்வையூர் அப்பாண்ணா | 52 - 57 |
| கதிர்காம யாத்திரை | செல்வி சி. நிலா | 58 - 60 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# சுடர் தரும் தகவல்

கதிர்காமக் கந்தனின் வருடாந்த மகோற்சவம் யூலை 21இல் ஆரம்பமாகி, ஆகஸ்ட் 04இல் நிறைவுக்கு வரவுள்ளது. இந்த மகோற்சவமானது சைவ மக்களுக்கு மட்டுமல்லாது இலங்கையில் உள்ள அனைத்து மக்களுமே எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற ஒரு பொது மகோற்சவமாகும்.

கதிர்காமக் கந்தனின் மகோற்சவத்தை முன்னிட்டு நாட்டின் பல பாகங்களில் இருந்தும் - பல மாதங்களுக்கு முன்னரே - பல்வேறு குழுக்களும் பாத யாத்திரையாகப் புறப்பட்டு, கொடியேற்றத்தன்று கதிர்காமக் கந்தன் வாசலில் யாத்திரையை நிறைவு செய்வது காலம் காலமாக நடைபெற்றுவரும் ஒரு சம்பிரதாயபூர்வமான நிகழ்வாகும்.

இந்த யாத்திரை நிகழ்வினில் வட பகுதியிலிருந்தும், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு வருகைபுரிந்து குழுக்களாக முருகனை மனதில் இருத்தி பாத யாத்திரையாகப் புறப்பட்டுச் செல்வது வழமையானது. வைகாசி மாதம் வரும் வற்றாப்பளை அம்மன் பொங்கல் விழாவிற்கு ஒரு வாரத்திற்கு முன்னரே செல்வச் சந்நிதியிலிருந்து புறப்பட்டு பொங்கலன்று அம்பாள் தரிசனம் காண்பர். தொடர்ந்து



புல்மோட்டை, சல்லி, திருகோணமலை, வெருகல், வாகரை, மட்டக்களப்பு, பொத்துவில், பாணமை வழியாக வழி நெடுகிலும் உள்ள கோவில்களைத் தரிசித்து உகந்தை முருகன் ஆலயம் வரை செல்வர்.

வழமைக்கு மாறாக நாட்டில் ஏற்பட்ட கொரோனாத் தாக்கத்தின் விளைவும், அதனால் ஏற்பட்ட கட்டுப்பாடுகளும் இம்முறை கதிர்காமம் பாத யாத்திரைக் குழுவினரையும் பாதித்தது. வழமைபோல வற்றாப்பளை அம்மன் பொங்கலுக்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகச் செல்வச்சந்நிதியிலிருந்து புறப்பட்ட முதற் குழுவினர் பன்றித்தலைச்சி அம்பாள் கோவிலுடன் தங்கள் பயணத்தை நிறுத்தும்படி ஆயிற்று. கால சூழலுக்கேற்ற சுகாதார நடைமுறைக் காரணங்களால் தங்கள் நடைப் பயணத்தை அவர்களால் தொடரமுடியவில்லை. ஆனாலும் இக் குழுவினர் பேருந்தில் புறப்பட்டு வற்றாப்பளை சென்று, பொங்கல் முடிந்ததும் தங்கள் நடைப்பயணத்தைத் தொடர்ந்து தற்போது மட்டக்களப்புப் பகுதியில் தங்கியுள்ளனர்.

வற்றாப்பளை அம்மன் பொங்கல் முடிந்து நான்கைந்து நாட்களின் பின்னர் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து புறப்பட்ட இரண்டாவது குழுவினர் எவ்வித தடங்கலுமின்றி தங்கள் பாத யாத்திரையினைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டம் சென்றடைந்துள்ளனர்.

இந்த நடைப்பயணக் குழுவினர் அனைவரும் உகந்தை முருகன் ஆலயம் சென்றடைந்தபின் - அப்பால் காட்டுப்பாதை திறக்கப்படுவதை எதிர்பார்த்துக் காத்திருப்பர். யூலை 13 அளவில் காட்டுப் பாதை திறந்தால் மட்டுமே - நான்கைந்து நாட்கள் தொடர்ச்சியான நடைப்பயணத்தின் பின் கதிர்காமக் கந்தனின் கொடியேற்ற நாளன்று கந்தன் வாசலைச் சென்றடைய முடியும்.

பசி - தாகம் - தூக்கம் மறந்து, பாதம் நோக நடந்து கதிர்காமக் கந்தன் காலடியினை மனதில் நிறுத்தித் தொடரும் இந்தப் பாத யாத்திரையானது எவ்வித இடையூறுமின்றி - தடங்கல்கள் எதுவுமின்றி நிறைவெய்த கந்தன் அருள் கிடைக்க வேண்டும்.

அவ்வாறு அவர்களது பாத யாத்திரைப் பயணத்தினால் விளையும் நன்மையானது அவர்களுக்கு மட்டுமல்லாமல் அனைத்து மக்களுக்கும் இன்றைய இன்னல்கள் அனைத்தும் நீங்கி - நிறைவான நல்வாழ்வு கிட்ட ஏதுவாகும்.

அனைத்தும் இனிதே நிறைவேற கதிர்காமக் கந்தன் அருள் வேண்டிப் பிரார்த்திப்போம்.

வைகாசி மாத மலரில் வரவேண்டிய பாத யாத்திரை பற்றிய மேற்குறித்த விபரமானது, காலம் பிந்திய வெளியீடு காரணமாக சித்திரை மாத ஞானச்சுடர் மலரில் வெளியாகியுள்ளது.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 16. சிந்து வகுப்பு

வெகுளி வென்ற வேள்வி முநிவர் சங்க மேற
விரவு மிந்த்ர லோக வழிதி றந்த மீளி
மிகவிருது கூறு மேலார்கள் கண்டன்
விகட வசுரேசர் சாமோது சண்டன்
மேக வாகன மிகுமத வெண்கய
பாக சாதன னகரி புரந்தவன்
விபுத தாரகன் விபுத திவாகரன்
விபுத தேசிகன் விபுத சிகாமணி
விபரித கஞ்ச விரிஞ்ச பராமுக
னபினவ கந்த னடைந்தவர் தாபரன்
மேருவை யிடிபட மோதுஞ் சங்க்ரம
தாரகன் மகுட விபாடன் புங்கவன்
வெயிலுமிழ் கொடியொடு வினைமு கத்தினின்
மயில்மிசை வருமொரு வரத னிர்ப்பயன்
வித்தகன் சுவாமி நிர்ப்பாவகன்
சத்தியன் ப்ரதாப வித்யாதரன்
விரத நட்பாளர் பரியும சஞ்சல
னிருத நிட்டூர னிருதர் பயங்கரன்
வீரமத லோக வேள் காங்கெயன்
சூரரண சூர சூராந்தகன்
வினைப்பகை யறுப்பவ னினைத்தது முடிப்பவன்
மனத்துயர் கெடுத்தென்னை வளர்த்தருள் க்ருபைக்கடல்
சீல மேத்திய சித்தப்ர சித்தரே.

# சித்திரைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**திருமதி எழில்மதி ஜெயநாதன்**
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி தெமட்டகொட, கொழும்பு)

**திருமதி S. லோஜினி**
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, வெள்ளவத்தை)

**அப்பர்சாமி கோபாலகிருஷ்ணன்**
(இளை. முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)

**நா. உமாசங்கர்**
(கயூரி வீடியோ விஷன், அச்சுவேலி)

**நா. குகன்**
(குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை)

**பொ. பாலசிங்கம்**
(பத்தமேனி, அச்சுவேலி)

**இராசையா சற்குணதாஸ்**
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)

**திருமதி ஸ்ரீனிவாசன்**
(பழம்றோட், கந்தர்மடம்)

**Dr R. பாக்கியநாதன்**
(பொன்னையா வைத்தியசாலை, திருநெல்வேலி)

**திருமதி T. ராமச்சந்திரன்**
(யாழ்ப்பாணம்)

**திருமதி சிவராஜா**
(நல்நடத்தை உத்தியோகத்தர், கொழும்பு)

**செல்வி சாவித்திரி செல்வரெத்தினம்**
(யாழ்ப்பாணம்)

**வீ. கிருஷ்ணராஜா**
(ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி)

**சி. கனகசபாபதி**
(சிவன் கோயிலடி, ஆவரங்கால்)

**ச. மனோகரி**
(சுண்ணாகம்)

**ஐயாத்துரை முருகதாசன்**
(யாழ். போதனா வைத்தியசாலை பரிசாரகர்)
**செ. மகேஸ்வரன்**
(கோப்பாய் வடக்கு)
**செ. சிவராசா**
(வாசிகசாலையடி, உடுப்பிட்டி)
**S. தர்மபாலகிருஷ்ணன்**
(தும்பளை பருத்தித்துறை)
**த. நடேசன்**
(உரும்பராய் தெற்கு, உரும்பராய்)
**க. கிரிதரன்**
(திரு இல்லம், கரவெட்டி)
**வீரையா சிவஞானம்**
(நவக்கிரிமேற்கு, புத்தூர்)
**க.கு. கிருபாகரராசா**
(பிரதானவீதி, ஆவரங்கால்)
**இ. மனோகரன்**
(மனோ லைற், கோப்பாய்)
**சி. நந்தகுமார்**
(வங்கி ஊழியர், உரும்பராய்)
**ச. கனகராசா**
(யாழ்ப்பாணம்)
**சின்னத்தம்பி கிருஷ்ணானந்தன்**
(உமாபதி தொலைத்தொடர்பகம், உரும்பராய்)
**வ.க. சாம்பசிவம்**
(வில்லூன்றி, யாழ்ப்பாணம்)
**சி. அமிர்தசாகரன்**
(அம்பாள் மோட்டோர்ஸ், ஆவரங்கால்)
**தி. பாலசிங்கம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**சி. சுகிர்தலிங்கம்**
(புலோலி கிழக்கு, பருத்தித்துறை)
**T. இரவீந்திரதாஸ்**
(சாமியன் அரசடி, கரவெட்டி)
**சி. குமாரவேல்**
(தலைவர், சுண்ணாகம் ப.நோ.கூ. சங்கம்)
**உரிமையாளர்**
(ஏகாம்பரம் ரெக்ஸ், யாழ்ப்பாணம்)

க. ஞானச்சந்திரன்
(நாகலிங்கம்வீதி, கொக்குவில்)
இ. ஸ்ரீஸ்கந்தராம்
(உப தபாலதிபர், உரும்பராய்)
வே. சந்திரசேகரம்பிள்ளை
(சிறுப்பிட்டி, நீர்வேலி)
K. இராமச்சந்திரன்
(சங்கானை)
த. இராஜசிங்கம்
(நீர்வேலி)
ம. புலேந்திரன்
(கரணவாய், கரவெட்டி)
கி. தவராசா
(காந்தியூர், புலோலி)
ஐ. சத்தியபாலன்
(பலாலி வீதி, உரும்பராய்)
க. இராஜேஸ்வரி
(சுண்ணாகம்)
செ. ஸ்ரீனிவாசன்
(அல்வாய்)
ஜெயகாந் மாதுமை
(இன்பர்சிட்டி, பருத்தித்துறை)
சுப்பிரமணியம் சுரேஸ்குமார்
(மயிலணி வீதி, சுண்ணாகம்)
க. கணேசதேவா
(மாதகல்)
அதிபர்
(தமிழ்க் கந்தையா வித்தியாலயம், கந்தரோடை)
வி. செல்வரெத்தினம் J.P
(அராலிமத்தி, வட்டுக்கோட்டை)
ஐ. குகேந்திரராணி
(ஐயனார் கோயிலடி, சுண்ணாகம்)
N. பாலசுப்பிரமணியம்
(நீர்வேலி வடக்கு)

ம. கந்தையா
(சிவன்கோவிலடி, சாவகச்சேரி)
க. மகேந்திரன்
(சங்கத்தானை, சாவகச்சேரி)
தங்கராசா கலாஜோதி
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
செல்வி பாலாம்பிகை கந்தசாமி
(கட்டைவேலி, கரவெட்டி)
S. தங்கேஸ்வரா
(காட்டுப்புலம்)
ம. சிவானந்தம்
(நாவலர் றோட், யாழ்ப்பாணம்)
எஸ்.ரி. குமரன்
(மல்லாகம்)
பொ. காசிலிங்கம்
(கொக்குவில்)
கா. செல்லத்துரை
(உடுவில், சுண்ணாகம்)
வீ. புஸ்பநாதன்
(உரும்பராய் வடக்கு)
சந்திரசேகரம் மகிந்தன்
(சிறுப்பிட்டி மேற்கு)
தர்சினி பகீரதன்
(உப தபாலதிபர், நீர்வேலி)
கு. குணரூபன்
(மீசாலை கிழக்கு)
வ. ஆறுமுகம்
(இளை. அதிபர், ஆவரங்கால்)
கி. வரதராசன்
(அச்சுவேலி தெற்கு)
அ. சந்திரகுமாரன்
(சந்திரகோட்டம், சுழிபுரம்)
வி. நாகம்மா
(பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்)
சர்மிளா இராசலிங்கம்
(கோப்பாய்)

# பாவ புண்ணியங்களை ஆவணப்படுத்தும் கணக்குப்பிள்ளையே சித்திரபுத்திர நாயனார்

– **திரு கே.எஸ். சிவஞானராஜா** அவர்கள் –

இவ்வுலகம் மிகவும் தூய்மையாகவும், ஒழுங்காகவும், ஒழுக்கமாகவும், உபகாரமாகவும் இயங்குவதற்கு மூலகாரணமாக இருப்பவரும் இயக்குபவரும் வேறு யாருமல்ல. இறைவனாலும் காமதேனுவாலும், இந்திரன் இந்திராணியாலும் பேறாக்கப்பட்ட சித்திர குப்தரே ஆவார். எவரையும் சரி பிழை சொல்லி நிறுத்துப் பார்ப்பவர். சகல ஜீவராசிகளிலும் மனிதகுலம் ஆற்றுகின்ற பாவ புண்ணியங்கள் எண்ணிலடங்காதனவாய் அதிகரித்த நிலையில் "யமதர்மராஜன்" அவர்களை யம சாம்ராஜ்ஜிய உலகிற்கு அழைத்து வருவதில் பாரிய கஷ்டங்கள் இருப்பதனை எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானிடம் முறையிட, சிவபெருமானும் அதற்கு இலகுவாக அவரவர் செய்த, செய்கின்ற பாவ புண்ணிய நன்மை தீமைகளின் பிரகாரம் கணக்கு வழக்கு ஒன்றினை எழுதுகின்ற முறையினை யமதர்மராஜனுக்கு அறிமுகப் படுத்திப் பார்வதியிடம் பரோபகாரம் செய்யுமாறு வேண்டிக்கொள்ள, பார்வதியும் பிரம்மாவின் அனுக்கிரக வாலாயமுடன், ஓவியம் ஒன்றைப் படைத்திடவே, சிவபிரானும் தனது மூச்சுக் காற்றினை அந்த ஓவியத்திற்கு வழங்கி உயிர் கொடுத்தார். ஓவியம் குழந்தையானது.

யமதர்மராஜனும், பார்வதியும், பிரம மனும் மகிழ்ந்தனர். புதிதாகத் தோன்றிய குழந்தைக்குச் சித்திரகுப்தன் எனப் பெயரிட்டு கல்வியறிவு கணக்கு வழக்கு மேம்பட நாளிலும் பொழுதிலும் விநாயகப் பெருமான் பார்வதி, பிரம்மன் ஆகியோர் அறிவூட்டி ஆளாக்கினர். அவரே கணக்குப்பிள்ளையானார். பார்வதியார் ஓவியம் வரையும்போதே வலது கையில் எழுத்தாணியும் இடது கையில் ஏடும் கொண்டதாக வரைந்தமையால், சித்திர குப்தன் எந்நேரமும் சகலரது வரவு செலவு கணக்கு வழக்கினை எழுதுகின்ற பணியினை வலு கச்சிதமாகச் செய்து முடிப்பதில் வல்லவரானார்; வெல்பவரானார். நீதி பிசகாத நெறியாளனாக இன்றும் பிரகாசிக்கின்றார்.

## நீதி பிசகாதவர்

ஒவ்வொரு ஜீவராசிகளும் ஆற்றுகின்ற செயற்பாடுகளில் நன்மையுமுண்டு. தீமையும் உண்டு. இலாபமும் உண்டு. நட்டமும் உண்டு. பாவமும் உண்டு. புண்ணியமும் உண்டு. சோதனையும் உண்டு. சாதனையும் உண்டு. எனவே, நாம் நாம் செய்த பாவ புண்ணியங்களுக்கேற்பவே இந்த மனிதப் பிறப்பினை நாம் எடுத்துள்ளோம். ஆனால் ஒவ்வொரு நாளும் மனிதநேய மாண்புகளுடன், நீதிநெறி பிறழாது, நிதி மோசடிகளில் சம்பந்தப்படாது, ஏனையவர்களை நோதல்படுத்தாது எவரொருவர் இப் பூவுலகில் பணிந்து தத்தம் கடமையை ஆற்றுகிறாரோ அவர் சித்திர குப்தரால் சிபார்சு செய்யப்பட்டு எந்தவித தண்டனையுமின்றி சுவர்க்கத்துக்கு கௌரவமாக யமதர்மராஜனால் அழைத்துச் செல்லப் படுவார். இவ்வாறானவர்களின் உயிர்கள்

*நம்பிக்கை மட்டும் இருந்தால் போதாது. சிந்திக்கவும் தெரிய வேண்டும்.*

பறிக்கப்படுவதில்லை. இதனை விடுத்து நீதிநெறியில் நின்றும் வழுவி, தவறுகளையும், தப்புக்களையும், குற்றங்களையும், கொலை களையும், கொள்ளைகளையும், பலாத்காரங் களையும், மற்றும் மது, மாது போதையில் திளைப்பவர்களையும் சித்திரகுப்தனார் அவரவர் செய்த குற்றங்களை அடிப்படை யாகக் கொண்டு தண்டனையை எழுதி யம தர்மராஜனிடம் கொடுக்க யமதர்மராஜனும் குற்றவாளிகளை உரிய முறையில் தண்டித்து உயிரை எடுப்பார்.

குற்றவாளிகள் சில வேளைகளில் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பினாலும்கூட சித்திரகுப்தனாருடைய தீர்ப்பிலிருந்து தப்பவே முடியாது.

ஆகவேதான் சித்திரை மாத பௌர் ணமி நாளன்று சித்திரகுப்தன் பிறந்தமையால் அன்றைய தினம் அவரை வணங்கி அவருக் குப் பிடித்த கஞ்சியைக் காய்ச்சி அடியவர் களுக்கு வழங்கினால் சித்திரகுப்தன் மனம் இரங்கி குற்றங்களை மன்னிப்பான் என்ற ஐதீகம் நிலவுவதால் சித்திரா பௌர்ணமி அன்று சித்திரைக் கஞ்சி காய்ச்சி யாவர்க்கும் கிடைக்கும்படி கஞ்சி வார்த்து நம் தவறு களையுணர்ந்து இனிமேலாவது நல்லபடி உய்வோமாக.

மேலும் பெற்ற தாயைப் போற்றும் அனைவரும் இதன்பேறாக சகல பேறுகளை யும் பெறுவர். சிவபதப் பேறடைந்த குரவர் களில் தந்தைக்கு ஆடி அமாவாசைபோல், தாய்க்கு சித்திரா பூரணையாகும். தாயை இழந்து வருடா வருடம் பிதிர்க்கடன் செய் பவர்கள் தாயின் ஆத்ம சாந்திக்காகவும் பேரின்பப் பெருவாழ்வுக்காகவும் அவரவர் குலதெய்வங்களைப் போற்றி கஞ்சி வார்த்து மகிமைப்படுத்துவர்.

தீட்டல் பச்சை சிவப்பரிசி வெந்து வரும்போது தேங்காய்ப்பாலும் உப்பும் சேர்த்து கஞ்சி சுடச்சுடக் குடிப்போரைக் கெஞ்ச வைக் கும். சித்திரைக் கஞ்சி குடிக்கும் ஒவ்வொரு வருக்கும் உடம்பிலும் சரி, உள்ளத்திலும் சரி ஒரு வெளிச்சமும், பிரவாகிப்பும் ஏற்படும். காரணம் கஞ்சியின் ஒவ்வொரு அரிசிப் பருக் கையிலும் சித்திரபுத்திரனாரின் கதையும், கணக்கு வழக்கும் உண்டு. கஞ்சி உடலிலே சமிக்கும்போது உடம்பு தூயவுடம்பாக மாறி நல்ல பாதைக்குத் தன்னை வடிவமைக்கும்.

குறிப்பாக, சிறைகளில் வாடும் சிறைக் கைதிகளுக்காகச் சிறைக்கூடங்களில் சித் திரைக் கஞ்சி காய்ச்சப்பட்டு கைதிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். 2020ஆம் ஆண்டிலிருந்தாவது இந்த நடவடிக் கையை ஆரம்பிக்கவும். ஆரம்பித்து அனு சரணை வழங்கவும் இந்துமத நிறுவனங்கள் உதவவேண்டும்.

ஏனென்றால் அவரவர் தாம் செய்த குற்றங்களிலிருந்து நல்லவர்களாகி விடுதலை பெறுவதற்காகவேயாகும்.

சித்திரைக் கஞ்சியும் சித்திரபுத்திர னாரின் கதையும், பத்திரமாகவும், பயபக்தி யோடும் நாம் அனுசரித்து பேறாக்கினால் நித்திரையிலும் ஒருவித தொந்தரவின்றி, யம பயமின்றி, நோயணுகாமல் நீடு வாழலாம் என்பது சான்றோரின் முடிந்த முடிபாகும். இவ்வாறு சைவ சமயிகள் உணர்ந்திருந்தும், அன்றைய தினம், கஞ்சி குடிக்க வருகிறார் களேயன்றி கதை கேட்க எவரும் முன் வருவதில்லை. கதையால் தமிழ், இலக்கியம், இலக்கணம், கேள்வி ஞானம், தோஷ நிவா ரணம், ரோக நிவாரணம், துன்ப நிவாரணம், துக்க நிவாரணம், யமபய விடுதலை யாவும் வரமாகிறது.

*எதற்கும் தயாராக இருப்பவனை நோக்கித்தான் வாய்ப்புகள் வந்து குவியும்.*

உண்மையிலே ஒவ்வொருவருடைய மனச்சாட்சியின்படி எம்மை நாம் ஆராய் வோமாக இருந்தால், சித்திரபுத்திர நாயனார் எம்மில் கருணைகொள்ளுமாறு நாமும் சித்திரைக் கஞ்சியைக் காய்ச்ச வேண்டிய வர்களாகின்றோம். இந்திரனும் இந்திராணியும் தம்மிடம் உள்ள திரவியங்களனைத்தையும் தான தர்மங்கள் செய்து தவமிருந்து பெற்ற தனயனான சித்திரபுத்திரனின் கதையாதலால் அந்த அதிசயமான கதையினை நாம் அதி சிரத்தையோடு படித்துப் பாலிதம் பெறு வோமாக.

## கருங்கடல் காட்சியாய் கதிர்காமருளம் பூத்த சக்திபாலனே செல்வச் சந்நிதி வேலவனே!

நித்தியமாய் நின்மலமாய் நிர்க்குணமாய் நீள்சுடராய்
தத்துவமாய் தத்துவத்துக்கப்பாலாய் அதற்கு மேலாய்
பத்துவிதமான வகப்பொருளே நினக்கடியேன்
சித்தமுவப்பத்திருக் காட்சிதந்தாள்பவனே வேலா!

தண்ணார் மதியத்தாங்குஞ் சங்கரன் பாலனே!
உண்ணாரமுதே உலவாச் சுகக்கடல் தொண்டையூற்றே
விண்ணோரறியாத வித்தகா எனையாளப் பொறுப்பதேன்!
கண்ணாரக் காட்சிகொடுத்தனையே செல்வமே!

ஆக்காமே ஆக்கி அழியாதழித் தெவையும்
போக்காமே போக்கி மலம் பொன்று வித்தானும்
தாக்காது நின்றதனிமுதலே நீயடியேனை யாளாதவிராயே
வாராயெனக் கூறுமாங்கூர்வேல் நின்றதுவே பாலா!
எண்பத்துநான்கு நூறாயிரமாமியல் பிறப்பிலுயர்
பண்புற்ற மானிடபிறவிசேர் பவமரிது மானிட
நெறியினாச்சிரமதான மோகனசுவாமி செய்கை பேணலும்
பெறுமதக்குரு மயில்வாகனசுவாமி சிந்தை யேமோகனன்நெஞ்சு!

கதிர்காமரைக் கண்ணுற்றபாலன் ஞானமுத்திசூழ சந்நிதியாக வைத்தார்
இச்சிவஞான ஆலயம் செந்தில்வேல் கந்தனாகியது தொண்டையூற்றில்
பக்தர்கள் பயில்பூஜை திகழ்தானம் பலவோசைகானம் நிலையாயது
மேலேழு லோகம்போல் மோகனசுவாமியின் நித்தியதானம் மிளிர்கிறது!
எம்பெருமான் ஸ்தலத்தில் எழுந்தருளிய வலைஞருள் ஞானவேல் துலங்கிடுதே
மும்பர் முதலனைவர்க்கும் கடும்சிரமதுழைக்கும் வலைகடல்வேல் சந்நிதியே
கரந்துழைக்கும் ஏழுமலைதானம் மோகனன் செயலூட்டிய சக்திவேல் சந்நிதியே
உரந்துழைத்த சத்துருசங்காரவேல் கொண்ட விளையவனையுளத்தில் வைப்பாம்!

-க. தெய்வேந்திரம்-

*விடாமுயற்சியைத் தொடர்ந்து செய்வதே மேதைத்தனம்.*

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## நீத்தல் விண்ணப்பம்

### பிரபஞ்ச வைராக்கியம்

(உத்தரகோச மங்கையில் அருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

105. கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின் றோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேனெம் பிரானென்னைத் தாங்கிக் கொள்ளே.

**ப-ரை:**

கடையவனேனை கருணையினால் கலந்து ஆண்டு கொண்ட- கடைப்பட்டவனாகிய என்னை நின் பேரருளினால் வலிய எழுந்தருளி வந்து என்பால் இயைந்து ஆட்கொண்டருளிய, விடையவனே- இடபவாகனனே, விட்டிடுதி கண்டாய்- அடியேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்; விறல் வேங்கையின் தோல் உடையவனே- வலிய புலியின் தோலை உடையாகக் கொண்டவனே; மன்னும் உத்தர கோச மங்கைக்கு அரசே- நிலைபெற்ற திருவுத்தர கோசமங்கை என்னும் தலத்துக்கு அரசனே, சடையவனே- சடையையுடையவனே, எம்பிரான்- எங்கள் தலைவனே, தளர்ந்தேன் என்னை தாங்கிக் கொள்- நின் திருவுருவக் காட்சி பெறாமையானும் இவ்வுலகப் பற்று நீங்காமையானும் சோர்வடைந்தேன், அடியேனை அணைத்துப் பாதுகாத்துக் கொள்வாயாக.

கடையவனாகிய என்னை நின் பேரருளினாற் கலந்து ஆண்டு கொண்டருளிய விடையவனே, அடியேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். வலிய வேங்கையின் தோல் உடையவனே, உத்தர கோசமங்கைக்கு அரசே, சடையவனே, எம்பிரான், தளர்ந்தேன் என்னைத் தாங்கிக் கொள்வாயாக.

அடிகள் தம்மைக் கடையவன் என்றது ஆணவ முனைப்பு நிகழாமைப் பொருட்டும் எவ்விடத்தும் தம்மைத் தாழ்த்திக் கூறும் முறைமை பற்றியுமாகும். கருணையினால் ஆண்டு கொண்ட- பேரருளினால் ஆண்டு கொண்டருளிய:

"வன்னெஞ்சக் கள்வன் மனவலியன் என்னாதே
கன்னெஞ் சுருக்கிக் கருணையினால் ஆண்டுகொண்ட"

கோத் 11.

*உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை கிடைக்கிறது.*

"கன்னா ருரித்தென்ன என்னையுந்தன் கருணையினால்
பொன்னார் கழல்பணித் தாண்டபிரான்"

தெள் 9.

"உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக் கருணையினா லாண்டு கொண்ட
திருத்துருத்தி மேயானை"

கண்டபத்து 3.

"பூத்தானே புகுந்திங்குப் புரள்வேனைக் கருணையினால்
பேர்த்தே நீ யாண்டவா றன்றேயெம் பெருமானே"

ஏசறவு 8.

என அடிகள் பிறாண்டும் அருளியமை காண்க. கலத்தல் - மனத்திற் பொருந்துதல். கலந்தாண்டமை.

"கயன்மாண்ட கண்ணிதன் பங்கனெனைக் கலந்தாண்டலுமே"

(தெள் 11)

என்பதனாலுமறிக. கலத்தற்கும் கருணையே காரணமாதலின் கருணையினாற் கலந்து என்றார். "கற்போலு நெஞ்சங் கசிந்துருகக் கருணையினால், நிற்பானைப் போலவென் னெஞ்சினுள்ளே புகுந்தருளி" (தோணோ 4) என அடிகள் அருளியமையுங் காண்க. கலந்து என்ற வினையினால் தானே வலிய எழுந்தருளி வந்தமை பெறப்பட்டது.

"தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்,
வான் வார்கழல்..."

திருவெம்பா: 6.

"பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு"

அம்: 1.

"இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி
எந்தரமும் ஆட்கொண்டு"

அம்: 3.

"அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்தன்றி நின்ற சிவம் வந்து நம்மை
உருக்கும் பணிகொள்ளும் என்பது கேட்டு"

தெள்: 3.

"அரையாடு நாகம் அசைத்தபிரான் அவனியின் மேல்
வரையாடு மங்கைதன் பங்கொடும்வந் தாண்டதிறம்"

தெள்: 6.

என இத்திருவாசகத்தும்,

"பொருளா வெனைப் புகுந்தாண்டு" (73)

எனத் திருக்கோவையாரினும் வருவன காண்க.

இறைவனுக்குரிய தரும வெள்விடையும் மால்விடையுமாகிய எருது வாகனங்கள் இரண்டனுள் ஈண்டு விடையென்றது அறவடிவாகிய தரும வெள்விடையேயாகும். விட்டிடுதி என்பது எதிர்கால முணர்த்துவதாயினும் ஈண்டு விடுகின்றனையோ என நிகழ்காலத்தில் குறிப்பினால் விரைப் பொருளில் வந்தது. கண்டாய் என்னும் முன்னிலையசை விட்டுவிடாதொழிய வேண்டும் என்பதைக் குறிப்பினால் உணர்த்தியது.

விறல் வேங்கை தாருகா வனத்து இருடிகளால் இறைவனைக் கொல்லுமாறு அபிசார வேள்வியிலிருந்து தோற்றுவித்து விடப்பட்டதாகும். இறைவன் அதனைக் கொன்று உரியை உடையாகக் கொண்டனன் என்க.

"கருத்தில்விழி சிவந்தமுனிக் கணங்கத்தி லுதிப்பித்த
வெரித்ததிரு முழுவையநே ரேவுதலு மெந்தைபிரான்
சிரித்தருளி யதுபிடித்துத் திருக்கரத்தி னகநுதியால்
உரித்தவுரி பசும்பட்டா வுடை தொடைமே லுறவுடுத்தான்"

(பதஞ் 32) எனக் கோயிற் புராணத்து வருதலுங் காண்க.

உத்தரகோச மங்கை என்பது பாண்டி நாட்டிலுள்ள ஒரு சிவ தலம். இது தத்துவங் களிலுண்டாகும் வினாக்களுக்கு விடை கூறும் தொகையாகிய நூலினை இறைவன் மெய்யடியார் களுக்கும் இறைவிக்கும் உபதேசஞ் செய்து அவ்விறைவியோடு இருக்கும் தலம் எனப் பொருள் கொள்ளத்தக்கதாகவுள்ளது. தளர்ச்சியுற்ற பிறையைச் சடையிற் றாங்கி பாதுகாத்த நீ தளர்ந்த என்னையும் தாங்கிப் பாதுகாத்தல் கடனாம் என்பது தோன்றச் "சடையவனே" என்றார். சடையவன்- சடையையுடையவன் "தில்லைச் சிற்றம்பலத்துப் பொற்பத்தியன்ன சடையவன்" (305) எனத் திருக்கோவையாரினும் வருதல் காண்க.

தளர்தல்- ஞானாசாரியத் திருவுருவைக் காணப் பெறாமையாலும் பொய்யுலக வாழ்விற் பற்று அறாமையாலும் உளதாகிய தளர்ச்சி.

"மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போல் தளர்ந்தேன்" (அடைக் 6)

என வருதலுங் காண்க. தாங்குதல்- அணைத்துக் கொள்ளுதல்.

இதன்கண் விட்டிடுதி கண்டாய்; தளர்ந்தேன் என்பவற்றால் நீத்தல் விண்ணப்பமும் பிரபஞ்ச வைராக்கியமும் புலப்படுதல் காண்க.

இப்பதிகம் அந்தாதித் தொடையாக அமைந்துள்ளது.

106. கொள்ளேர் பிளவக லாத்தடங் கொங்கையார் கொவ்வைச் செவ்வாய்
விள்ளே னெனினும் விடுதிகண் டாய்நின் விழுத்தொழும்பின்
உள்ளேன் புறமல்லேன் உத்தர கோசமங் கைக்கரசே
கள்ளே னொழியவுங் கண்டுகொண் டாண்டதெக் காரணமே.

ப-ரை:

உத்தர கோசமங்கைக்கு அரசே- திருவுத்தர கோசமங்கை தலத்திற்கு அரசனே, கள்ளேன் ஒழியவும்- மாயையின் தொடர்பால் களவுடைய மனத்தையுடையேனாகிய யான் நின்னை நீங்கிச் செல்லும் குறிப்புடையேனாகவும், கண்டு கொண்டு ஆண்டது எக்காரணம்- அதனை அறிந்துகொண்டும் என்னை ஆட்கொண்டது யாது காரணத்தாலோ? நின் கருணையினாலன்றோ? அதனால், நின் விழு தொழும்பின் உள்ளேன்- நினது சிறந்த திருத்தொண்டின்கண் அகத் தொண்டனானேன், புறம் அல்லேன்- புறத்தே னல்லேன்; ஆதலால், கொள் பிளவு அக்லா ஏர் தடம் கொங்கையர்- கொள்ளின் பாகத்தின் அளவு இடை வெளியில்லாத அழகிய பெரிய தனங்களையுடைய மகளிரின், கொவ்வை செவ்வாய் விள்ளேன் எனினும்- கொவ்வைக் கனி ஒக்கும் சிவந்த வாயிதழின் அமுதுண்டலினின்றும் நீங்கேனாயினும், விடுதி கண்டாய்- என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

உத்தரகோச மங்கைக்கு அரசே, கள்ளேன் நின்னை நீங்கும் குறிப்புடையோனாகவும், என்னை ஆட்கொண்டது நின் கருணையினாலன்றோ? அதனால் யான் நின் விழுத்தொண்டின்கண் அகத்தொண்டனானேன்; புறத்தேனல்லேன், ஆதலால் தடங் கொங்கைகளையுடைய மகளிரின் செவ்வாய் விள்ளேன் எனினும் என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

கொள்- ஒருவகைத் தானியம், பிளவு- பிளந்த பாதி. கொள் பியவு அகலாக் கொள்கை, ஏர்கொங்கை, தடங்கொங்கை எனத் தனித்தனி இயையும். கொள் பிளவகலாத் தடங்கொங்கை என்றது, கொள்ளின் பாகமளவும் இடைவெளியில்லாத மிகவும் நெருங்கிய தனங்களையுடையார் என்றபடி "புடைபரந் தீர்க்கிடை போகா இளமுலை மாதர்" (போற்றி 30-4) என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க. பிளவு- பாகம் மாமதியின் பிளவு- பெரிய மதியின் பாகம் எனப் பேராசிரியர் பொருளுரைத்தமையும் (திருக்கோவை 10 உரை) காண்க. "பிறைப் பிளவார் சடையோன் (கோயில் திருப்பண்ணி 24) எனப் பதினொராந் திருமுறையில் வருதலும் காண்க. கொள்ளின் பிளவு சிறுமைக்கு எடுத்துக் காட்டப்பட்டது. "தினைப் பிளந்தன்ன சிறுமையரேனும்" எனத் திருமந்திரத்து (2667) வருதலும் ஈண்டு அறியற்பாலது. ஏர்- அழகு.

கொவ்வைச் செவ்வாய்- கொவ்வைக் கனியை ஒக்கும், சிவந்த வாயிதழ் "கொவ்வைச் செவ்வாய்" "கோவை வந்தாண்ட செவ்வாய் (108,200) எனத் திருக்கோவையாரினும் வருவன காண்க. விள்ளுதல்- நீங்குதல். செவ்வாய் விள்ளேன் எனினும் என்றது அதரபானஞ் செய்தலை வெறுத்து நீங்குதற்கு முயலும் யான் அங்ஙனம் நீங்கமாட்டேனாயினும் என ஆற்றலாற் பொருள் கொள்ளுமாறு நின்றது.

விடுதி விடுவாய் என எதிர்காலப் பொருள் தரும். முன்னிலையேவல் ஒருமை வினைமுற்றாயினும் இங்கே குறிப்பினால் விடுகின்றனையோ என நிகழ்காலத்திலும் வினாப் பொருளிலும் வந்தது. விழு என்னும் உரிச் சொல் சிறப்பு என்னும் பொருளது. தொழும்பு- தொண்டு. "என்னைத் தன்றொழும்பிற் கழியா தருள் வைத்த சிற்றம்பலவன்" (கோவை 261) என்புழி தொழும்பின் என்பதற்குத் தொண்டுபடுதற்கண் எனப் பேராசிரியர் உரைத்தமையுங்

காண்க. இனித் தொழும்பினுள்ளேன் என்பதற்கு அடியார் கூட்டத்தினுள்ளேன் எனினுமாம் தொழும்பு என்பது அடிமை என்னும் பொருட்டாதலை "என்னைத் தன் தொழும்பிற் படுத்த நன்னீள் கழலீசர்" (267) என்னும் திருக்கோவையார் உரையில் தொழும்பிற்படுத்த- தன் அடிமைக்காட்படுவித்த என்னும் (பேர்) உரையானுமறிக.

அடிகள் தம்மைக் கள்ளேன் என்றது ஞானாசாரியரைக் கண்டபோது புறத்தே வணங்காமையாலும், ஒரு வினாவை நிகழ்த்தி அதற்கு நின்னாற் கூறப்படும் விடை பொருத்தமுடைத்தாயின் ஆட்படுவேன் என்றமையாலுமென்பது.

"தொண்டுபடு மடியார்க ணூற்றொன் பான்மேற்
றொண்ணூற்றொன் பானென்னுந் தொகுதிசூழ
வொண் டொடிபங் கினனிருப்ப விருப்பா லெய்தி
யுடனுரைத்துச் சிவஞான முணர்வா ரன்பு
மண்டியநெஞ் சினில் வணங்கி வணங்கார்போல
மந்திரியா மேன்மையுடன் வந்து நின்றார்"

திருப்பெருந் 34.

"என்றலுமே சிவமேது ஞான மேதிங்
கிலங்கி யிடும் போதமே தியம்பு வீரேல்
அன்றுவட நீழலில் வந் திருந்தார் நீரே
யடியேனு முமக்கடிமை யாவே னென்ன"

திருப்பெருந் 36.

எனத் திருவாதவூரடிகள் புராணத்து வருவன காண்க.

கள்ளேன் ஒழியவும் கண்டு கொண்டு ஆண்டது என்றது கள்ளேன் நீங்கிச் செல்லும் குறிப்புடையேனாகவும் அதனைக் கண்டு கொண்டு ஆண்டது என்றவாறு.

"வளர்கின்ற நின்கரு ணைக்கையில் வாங்கவும் நீங்கியிப்பால்
மிளிர்கின்ற என்னை....."

நீத்:4

"அழுமடி யாரிடை யார்த்துவைத் தாட்கொண் டருளி"

நீத் 27.

"நம்மை யகப்படுத் தாட்கொண் டருமை காட்டும் மெய்ம்மை"

பொற் 12.

என்பன நன்கு அறியற்பாலன. கண்டு கொண்டும் என உம்மை விரிக்க. எக்காரணம் என வினாப்பொருளில் இருப்பினும் ஆண்டுகொண்டது நின்கருணையினாலேயாம் என்பது அருத்தா பத்தியாற் பெறப்படும். "கடையவனேனைக் கருணையினாற் கலந்தாண்டுகொண்ட விடையவனே" (நீத் 1) என அடிகள் அருளியவாறு காண்க.

இதன்கண், கொங்கையர் கொவ்வைச் செவ்வாய் விள்ளேன் எனினும், அதனை விடுதி கண்டாய் என்பதனால் உலக வாழ்வில் பற்றுடையேனாயினும் நீக்கி என்னைக் கைவிடாது காத்தல் வேண்டும் என்பது பெறப்படுதலின் பிரபஞ்ச வைராக்கியமும் கைவிடா தொழிதல் வேண்டும் என்பதும் பெறப்பட்டவாறு காண்க. (தொடரும்...

*எல்லோரையும் நம்புவது ஆபத்து, ஒருவரையும் நம்பாதிருப்பது பேராபத்து.*

# வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டு அகலும்

– **திரு பு. கதிரித்தம்பி** அவர்கள் –

"வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டு அகலும்" என்பது பழமொழி, தெய்வீக மொழி. மனித உள்ளத்தில் சந்தோசம் இருந்தால் நோய் அவனது உடலைப் பீடிக்காதென்பது ஆராய்ச்சியாளர்கள் கண்ட உண்மை. எனவே மனிதன் நோய் இன்றி நீடுழி காலம் வாழ சந்தோசம் மிகவும் இன்றியமையாதது.

இறைவனால் மனிதன் படைக்கப்படு கின்றான். இறைவனால் படைக்கப்பட்ட உடலில் இறையருள் இருக்கவேண்டும். இந்த உண்மையை பண்டைய காலத்தில் வாழ்ந்த மக்கள் நன்கு உணர்ந்து இறைவழிபாட்டுடன், அறுசுவை மூலிகைத் தாவர உணவுகளை உண்டு நோயின்றி நெடுங்காலம் வாழ்ந்தார்கள். தான தருமங்களையும் மனப்பூரிப்புடன் செய்து வந்தார்கள். தண்ணீர்ப் பந்தல்களையும், அன்னம் வழங்கும் அறச் சாலைகளையும் கட்டி, வரும் அடியார்களுக்கு தாக சாந்தியை நீக்கியும், பசியைப் போக்கியும் அறக் கைங்கரியங்களைச் செய்தும் அற வாழ்வு வாழ்ந்தார்கள். அரசனும் கோவில்களையும் அன்ன சாலைகளையும் கட்டி மக்களை சந்தோசமாக வாழ வைத்தான். இதனால் இப்போதுள்ளது போல் வைத்தியசாலைகள் அன்று கட்டப்படவில்லை. இதனால் அன்று கற்புடை மாதர்களுக்கும் வேதம் ஓதும் அந்தணர்களுக்கும், செங்கோல் ஓச்சிய அரசனுக்கும் என மாதம் மும்மாரி பொழிந்தது. நாட்டில் நீர் வளம் பெருகியது. சகல உயிரினங்களும் சந்தோசமாக வாழ்ந்தன. அன்று உள்ள மனிதன் மனம்விட்டுச் சிரித்து, இறை நம்பிக்கையுடன் வாழ்ந்தானென்று வரலாறு கூறுகின்றது.

அன்று வாழ்ந்த பண்டைய தமிழ் மக்கள் காலை விழித்தெழும்பொழுது இறைவன் நாமத்தை உச்சரித்துக்கொண்டே எழும்புவார்கள். எழுந்தவுடன் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, இறைவனை வழிபட அறைக்குச் சென்று விபூதி தரித்து இறைவன் பாடல்களை என்புருகிப் பாடுவார்கள். தமது குழந்தைகளுக்கு இறைவன் தேவாரங்களையும் சொல்லிக் கொடுப்பார்கள். அதன்பின் தம்மைப் பெற்ற தாய் தந்தையர்களுக்குப் பணிவிடைசெய்து, அதன் பின்புதான் தங்கள் கருமங்களுக்குச் செல்வார்கள். மாதா, பிதா கண்கண்ட தெய்வம் என்பதை பிள்ளைகளுக்கு உணர வைப்பார்கள். அத்துடன் குரு, தெய்வம் எம்மை வழிநடத்துவன என்பதையும் அறிய வைப்பார்கள். இறைபக்தி, அன்பு, பாசம், பணிவு, இன்சொல் பேசுதல் என்பவற்றையும் கடைப்பிடிக்க வழிகாட்டுவார்கள். இதனால் குடும்பத்தில் சந்தோசம், அன்பு நடமாடும். வாய்விட்டு அவர்கள் சிரிப்பதால் நோய்கள் விட்டு அகலுகின்றன. அன்று வாழ்ந்த பண்டைய மக்கள் மதிய உணவை கணவன், மனைவி, பிள்ளைகள், பாட்டன், பாட்டி வரிசையில் இருந்து, அம்மா

*செலவுகள் யாவற்றிலும் காலத்தை வீணாக்குதலே அதிக செலவும் ஊதாரித்தனமுமாகும்.*

சமைச்ச அறுசுவை உணவுகளை, வாழை இலைகளில் படைத்து தேவாரம் பாடி "அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்" என்னும் முதலையுடைய பாடலைப் பாடி, குதுகலப்புடன் உணவை அருந்துவார்கள். அமுதும், தேவாவமுதமாக இனிக்க வயிறு குளிர அருந்துவார்கள். இரசம், தயிர், மோர் என்பவற்றுடன் உண்டால் உடலுக்கும் உள்ளத்துக்கும் ஆரோக்கியத்தைக் கொடுக்கும் என்பது திண்ணம். மனிதரின் வாழ்க்கை சிறப்புற அமைய பண்டைய சைவ தாவர உணவுகளை இன்று வாழும் மக்கள் கடைப்பிடித்தல் நன்று. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பார்கள். எனவே பண்டைய தமிழ் மக்கள் பின்பற்றிய முறையை இன்றைய தமிழ் மக்கள் பின்பற்றினால் வைத்தியசாலை செல்லத் தேவையில்லை. வைத்தியசாலைகள் கட்டத் தேவையில்லை.

இன்று வாழ்கின்ற மக்கள் விஞ்ஞானத்தால் ஈர்க்கப்பட்டு எதையும் விஞ்ஞானத்தால் செய்யலாமென எண்ணுகிறார்கள், அதன் வழி நடக்கிறார்கள். விஞ்ஞானம் இன்று அதி உச்ச நிலையில் இருப்பதால் பழையதை மறந்து, தற்கால நிலையில், நவீன உடுநடை பாவனை கொண்டு, தற்போதைய உணவு வகைகளையும், குளிர்பானங்களையும், மாமிச உணவு வகைகளையும், கொழுப்புப் பொருள்களையும் உண்டு உடல் பருத்து, நோய் மிகுந்து வைத்தியர்களை நாடிச் செல்கின்றனர். அவர்கள் கொடுக்கும் குளிசைகளை உணவுக்கு முன்னும், பின்னும் உண்டு காலத்தை ஓட்டுகிறார்கள். உணவிலும் பார்க்க, வாயில் போடுகின்ற குளிசைகள் எண்ணில் அடங்காது. விஞ்ஞான வளர்ச்சி, கண்டுபிடிப்புகள் நாளுக்கு நாள் வேறுபட்டு செல்கின்ற நிலையில், மனிதன் முழுக்க முழுக்க முழுக்க விஞ்ஞானத்தை நம்பினால், நோயற்ற சந்தோச வாழ்வை வாழ முடியாது. பண்டைய மூலிகைத் தாவர உணவுகளை, கிருமி நாசினி தெளிக்காத தாவர காய்கறிகளை உண்ணுங்கள். கொழுப்பு மாமிச உணவுகளை தவிர்த்துக் கொள்ளுங்கள். உடல் பருமன் அடையாது என்பதைத் தெரிந்தும், வாய்க்குச் சுவையான மாமிச உணவுகளையும், றொட்டிகளையும், நிறக்கலவை செய்த குளிர்பானங்களையும் தவிருங்கள். உடல் பயிற்சி செய்யுங்கள். நோய் அகல வாய் விட்டுச் சிரிப்பீர்கள் என்பது திண்ணம்.

நோய்விட்டு நீங்க செல்வச்சந்நிதியான் இருக்கிறான். உங்களுக்கு அருள்புரிய ஆற்றங்கரையில் காத்திருக்கிறான். மாறாத நோய்களையும் மாற்றும் வல்லமையுடையவனாக விளங்குகின்றான். அவன் ஆற்றில் நீராடுங்கள். நோய்கள் கழுவப்பட்டுவிடும். கோவிலை வலம் வந்து வணங்கி, கண்ணீர மல்க வேண்டுங்கள். வேண்டும் முழுதும் தருவான். நிம்மதியையும் அளிப்பான். வீட்டில் வாய்விட்டுச் சிரித்து, நோய் அகல வாழ்வீர்கள்.

**வலம்புரிச் சங்கின் சிறப்பு**

வலம்புரிச் சங்கு வைத்திருக்கும் வீட்டில் வற்றாத செல்வம் வந்து சேரும். ஏனெனில் வலம்புரிச் சங்கில் மகாலட்சுமி வாசம் செய்கிறாள் என்பது பெரியோர்களின் கருத்தாகும். அதனால் அனைத்துச் செல்வங்களும் வலம்புரிச் சங்குள்ள இடத்தில் நீங்காமல் நிறைந்து வளரும். ஐஸ்வர்யங்களை அள்ளி வழங்க வல்ல வலம்புரிச் சங்கு கிடைப்பது அரிது. ஆயிரத்திற்கும் மேலான மகோன்னதம் ஒரு வலம்புரிச் சங்கிற்கு உண்டு.

*உயர்ந்த லட்சியங்களைக்கொண்ட வாழ்க்கையே தலைசிறந்த பெருமையுள்ள வாழ்க்கை.*

# ஆனந்தக் கிருஷ்ணனின் அற்புத லீலைகள் (தொடர்ச்சி...

– **திருமதி சிவனேஸ்வரி** பாலகிருஷ்ணன் அவர்கள் –

## விஸ்வரூப தரிசனம்

தீராத விளையாட்டுப் பிள்ளையாகிய கண்ணன், ஆதிமூலமே என அழைத்த ஆனையின் துயர் தீர்த்த அருளாளன், சபையினிலே துச்சாதனன் துகிலுரிந்தபோது, இரு கைகளையும் தலைமேல் கூப்பி "ஹரி கோவிந்தா" எனக் கதறிச் சரணடைந்த பாஞ்சாலியின் மானம் காத்த அருளாளன், துவாரகா நாதன், கோவிந்தன் அருளால் புடவைகள் சுரந்தன. வண்ணச் சேலைகள் வளர்ந்தன. பஞ்ச பாண்டவர் தூதனாகத் திருவடி நோக நடந்து விதுரன் வீட்டுக்குச் சென்று, "என்ன மாதவம் செய்தது இச்சிறு குடில்" என விதுரரால் வரவேற்கப்பட்டு, விருந்துண்டு அடுத்தநாள் துரியோதனன் பேரவைக்கு எழுந்தருளினார். பாண்டவர்களுக்கு நாடு வேண்டும் எனக் கேட்கிறார். வணங்காமுடியோன் ஈ இருக்கும் இடம்கூடத் தரமுடியாது என்கிறான். சூழ்ச்சியான நிலவறை தயாரித்து அதிலே கிருஷ்ணரை அமரச் சொல்கிறான். அவரும் ஆசனத்தில் அமர்ந்தார். நிலவறையை மூடிய மூங்கில்கள் நெறு நெறுவென்று முறிகின்றன. ஆசனம் நிலவறைக்குள் கொண்டு செல்கிறது. கிருஷ்ணர் எல்லா உலகங்களிலும் பொருந்தும்படி திருப்பெரு வடிவம் எடுக்கிறார். உலகத்து உயிர்களெல்லாம் மயங்கி, தேவர்களெல்லாம் அஞ்சி, முனிவர்களும், தேவர்களும் பெருமானைப் போற்றித் துதித்தார்கள்.

**"கண்ண பொறுத்தருள் வெண்ணெய் அருந்தியகள்வ பொறுத்தருள் கார்**
**வண்ண பொறுத்தருள் வாம பொறுத்தருள் வரத பொறுத்தருள் நீ**
**திண்ண மனத்துணர் வொன்றுமிலாதவர் செய்த பெரும்பிழையென்**
**றண்ணல் மலர்க்கழல் சென்னியில் வைத்தெதிரன்று துதித்தனரே"**

அனைவரும் அன்போடு வணங்கவே கிருஷ்ணன் கோபம் நீங்கி அண்டத்தை அளாவிய திருமேனியை ஒடுக்குகிறான். "துரியோதனா, போரிலே படைக்கலம் தொடேன் என்று சொன்ன வாக்கைக் காப்பாற்றவும், பாண்டவர் சபதம் நிறைவேறவும் இன்று உன்னைக் கொல்லாமல் விடுகிறேன்" என்று கூறி அமைகிறான் கிருஷ்ணன். இது துரியோதனன் சபையில் காட்டிய திருப்பெருவடிவம்.

"தர்மம் அழிந்து அதர்மம் தலை தூக்கும்போதும், நல்லோரைக் காத்து, தீயவர்களை அழிப்பதற்கும், தர்மத்தை நிலைநாட்ட நான் யுகங்கள்தோறும் அவதரிக்கிறேன்" என்ற கண்ணன் கருத்தை அன்றைக்கே சகாதேவன் சொல்லிவிடுகிறான்.

ஆம், அது என் வேலை. பாரதப் போர் வராமல் தடுக்க வழி இருந்தால் சொல் என்று சகாதேவனைக் கேட்கிறான் மணிவண்ணன்.

*நல்லொழுக்கம் மட்டுமே புயலுக்கும் அசையாமல் உறுதியாக நிற்கும்.*

"பாராளக் கர்னன் பார்த்தனை முன் கொன்றணங்கின்
காரார் குழல் களைந்து காலில்தளை பூட்டி
நேராகக் கைபிடித்து நின்னையும் யான் கட்டுவனேல்
வாராமல் காக்கலாம் மாபாரதம் என்றான்"

நீ பாரதப் போரிலே துஷ்டர்களை அழித்துப் பூபாரம் தீர்க்கப் போகின்றாய். அது உன் சங்கற்பமாயின் அதனை நீக்க யார் வல்லவர்? பாரதப் போர் தீர்க்க வழியுண்டு. கர்னனிடம் பூமியை ஆளும் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும். அவன் பகைவன் அர்ச்சுனனைக் கொல்ல வேண்டும். திரௌபதையின் கூந்தலைக் களைய வேண்டும். உன்னுடைய கால்களிலே விலங்கு பூட்டிக் கட்ட வேண்டும். இதனைச் செய்தால் பாரதப் போர் வராது என்றான்.

கண்ணனுக்கு வியப்பாக இருந்தது. காலிலே விலங்கு பூட்டி என்னைக் கட்டி விடலாமா? உன்னால் முடியுமா? என சகாதேவனைக் கேட்டார். "கண்ணா, உன்னை நீயே அறிய மாட்டாய். உன்னுடைய வடிவத்தை எனக்குக் காட்டுக. நான் கட்டி விடுகின்றேன்" என்று திடமாகச் சொன்னான். "இதோ கட்டு பார்க்கலாம்" என்று பதினாறாயிரம் திருவுருவங்களை ஒருங்கே எடுத்துக் கொள்கிறான் கண்ணன்.

மூல வடிவத்தை தன் பெரும் ஞானத்தினாலே அறிந்து எவ்வுலகங்களிலும் தாவி நிற்கின்ற இரண்டு பாதங்களையும் தன் அன்பாகிய பாசத்தினாலே கட்டிவிடுகிறான் சகாதேவன். "சகாதேவனே, என்னை அறிந்து அளப்பிலா அன்பினால் கட்டிவிட்டாய். இனி என் பாதத்தை விட்டுவிடு" என்றார் கிருஷ்ணர். "கண்ணா! இதோ விட்டுவிடுகிறேன். ஆனால் பாரதப் போரிலே தஞ்சமென்று ஐவரும் உன்னை வந்தடைந்தோம். எங்களைக் காத்தருள வேண்டும்" எனும் பெரும் வரத்தினையும் கேட்டு விடுகிறான் சகாதேவன். பக்தர்களுக்குப் பகவான் அடிமைதான். அன்பெனும் பிடியில் அந்த மலை அகப்பட்டு விடுகிறது. இது சகாதேவனுக்கு கண்ணன் காட்டிய மாபெருங் காட்சி.

பாலப் பருவத்தில் அக்கிரமங்களை ஒழிக்க அற்புதங்கள் புரிந்த கண்ணன், பின்பு கிருஷ்ண பரமாத்மாவாகப் பாரதப் போரிலே கீதோபதேசம் செய்கிறான். சிறையிற் பிறந்து பக்தர்களைச் சிறைப்பிடித்த சீராளன், இருளிற் தோன்றி நானிலத்துக்கு ஒளி வழங்கிய பேராளன் ஆயிற்றே! ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஒருத்தி மகனாய் ஒளித்து வளர்ந்த நந்த கோபன் குமரன், வெண்ணெயைத் திருடிக் கொண்டே, அத்தனை உள்ளங்களையும் திருடிய தெய்வக் கள்வன், தன் வாய்க்குள்ளேயே அண்ட சராசரங்களையும் காட்டித் தாய்க்கு விளக்கம் செய்த தாமோதரன், தாய்க்கு அடங்கிய சின்னப்பிள்ளையாக உரலில் கட்டுண்ட அதே சின்னக் கண்ணன்தான் பின்பு பார்த்தனுக்கு தன் விஸ்வரூப தரிசனம் காட்டித் தன் பரத்துவத்தைப் பறைசாற்றிய ஓங்கி உலகளந்த உத்தமனாகவும் திகழ்கிறான்.

குருஷேத்திரப் போர் ஆரம்பமானது. உற்றார், உறவினர்களைக் கண்டு துவள்கின்ற மனத்தினனாய், சோர்வின் உச்சிக்கே சென்று விட்ட அர்ச்சுனனைப் பார்த்துக் கண்ணன் கூறியதே கீதோபதேசம். இது தெய்வம் மனிதனுக்குச் சொன்ன அருள்வாக்கு. உபநிடதங்களின் சாரம். வேத வேதாந்தங்களின் பொருட்செறிவை இனிய மாத்திரைகளின் வடிவில் கொடுக்கும் அருமருந்து. கொஞ்சிக் கொஞ்சி

*பணத்தால் பசியைப் போக்க முடியும். துக்கத்தைப் போக்க முடியாது.*

மோகம் தீரா ஏக்கத்துடன் கோபியர்கள் சுற்றிச் சுற்றி வந்தார்களே அந்தக் குழந்தை, அர்ச்சுனா! அஞ்சாதே! அனைத்துக்கும் நானே கர்ப்பநாயகன். கடமையைச் செய் என்று ஐந்தாம் வேதம் தந்த கீதாசிரியன் அந்த ஞானக்குழந்தை. "எல்லாவற்றையும் விட்டு, என்னையே சரணாக அடைவாயாக. நான் உன்னை எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிக்கிறேன்" என்று கீதையிலே முழங்கினான்.

காமதேனு என நின்ற கண்ணன் விசயக் கன்றினுக்கு சேமமுறவே அருள் அமுது, சிறந்திந்நாளில் உலகெலாம் தீமையகல, ஞானமுறத் திறம்பா இன்ப வாழ்வடைய வழியீதென்றுணர்த்தினான். கீதை அமுதம் ஞானக் களஞ்சியம் அருச்சுனன் என்ற கன்றுக்காகச் சுரந்தபால் நமக்கும் பயன் தருகிறது. சிந்திக்க சிந்திக்க அமுதமாக மரணத்தைப் போக்கும் மருந்தாக, மரணமிலாப் பெருவாழ்வைப் பெற நமக்காக அருளிய அற்புத அமுதம், அந்த கானாமுதத்தினை நாமும் பருகி, அதன் வழி நடந்து பரமாத்மாவை அடைவோமாக!

**கண்ணன் சொன்ன தென்ன கீதையிலே அதைக்**
**கருத்தில் கொள்வாய் உன்றன் வாழ்க்கையிலே.**
**கண்ணான கண்ணனின் கழல் சேர்வதே என்தாகம்**
**உன்பாதம் காண்பதற்கு உருகுதே என் உள்ளம்**
**குருவாயூர் அச்சுதனே ஒருகாலும் உனைமறவேன்**
**உன் காலைப்பிடித் தால்கடைத் தேறிவிடுவேன்**
**உனையன்றி வேறு துணையேது கிருஷ்ணா**
**உன் நினைவன்றி எனக்குச் சுகமேது கண்ணா**
**உன் கனிவான முகம் காணகவலைகள் பறந்திடுமே**
**நெஞ்சினில் நீ நிறைந்தாய் நான் என்னை மறந்தேன்.**

(தொடரும்...

## கொடுக்க வழியா இல்லை?

தொடர்ந்து பல நாட்களாக மழை பெய்துகொண்டே இருந்தது. அந்தணன் ஒருவனுக்கு அடுப்பு எரிக்க விறகு கிடைக்கவில்லை. பல இடங்களிலும் தேடி அலைந்தான். பயன் இல்லை. அரண்மனைக்குள் நுழைந்த அவன் தருமரைக் கண்டு வணங்கினான். "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார் அவர். "காய்ந்த விறகு வேண்டும்" "அரண்மனையில் சிறிதளவு விறகே உள்ளது. அதையும் தந்துவிட்டால் அரண்மனையில் உள்ளவர்கள் தவிக்கவேண்டி வரும்" என்பதை உணர்ந்தார் தருமர். "இங்கே விறகு இல்லை வேறு எது வேண்டுமானாலும் கேள் தருகிறேன்" என்றார். அடுத்ததாக அந்த அந்தணன் கர்ணனின் அரண்மனைக்குள் நுழைந்தான். "விறகு வேண்டும் என்றான்" அங்கேயும் விறகுப் பஞ்சம் இருப்பதை உணர்ந்தான் கர்ணன். இல்லை என்று சொல்ல அவனுக்கு மனம் வரவில்லை. அருகில் இருந்த பெரிய தூணைப் பார்த்தான். அந்தத் தூணைக் கீழே தள்ளினான். "அந்தணனே! உனக்கு விறகுதானே வேண்டும். இந்தத் தூணை எடுத்துச் செல்" என்றான். தூணை எடுத்துக்கொண்டு அந்தணன் மகிழ்ச்சியுடன் சென்றான். கர்ணனின் கொடைப் பண்பை அறிந்த தருமர் வியப்பு அடைந்து நின்றார்.

*வருத்தமோ, துன்பமோ இன்றி எவராலும் எளிதில் புகழைப் பெறமுடியாது.*

# வைரவியார் சுவாமிகள்

– **முருகவே பரமநாதன்** அவர்கள் –

பாதியாய் அழுகிய கால் கையரேனும்
பழிதொழிலும் இழிகுலமும் படைத்தாரேனும்
ஆதியாய் அரவணையாய் என்பராகில்
அவர்கண்டீர் யாம்வணங்கும் கடவுளாவர்
சாதியால் ஒழுக்கத்தாற் தக்கோரேனும்
சதுர்மறையால் வேள்வியாற் மிக்கோரேனும்
போதில் நான்முகனும் பணியப்
பொன்னரங்கம் போற்றாதார் புலையராமே.

-அஷ்டப்பிரபந்தம். பிள்ளைப் பெருமானையங்கார்.

சைவத்தின் மேற் சமயம் இல்லை, சிவனுக்கு மேலான தெய்வம் இல்லை என்று பலர் பாடியும், எழுதியும், கைக்கொண்டும் வருகிறார்கள். சிவச் சமயத்தை விட்டு இந்து மதம் என்ற பெயரைப் பாவிப்பது சமயம் புரியாதவர். விவேகானந்தர் யாழ்ப்பாணத்தில் நிலவும் சமயம் சைவமென அறுத்துறுத்திப் பேசியிருக்கிறார். சேர் பொன். இராமநாதனும் இதை வெள்ளைக்காரருக்கு எடுத்தியம்பி உள்ளார். நம் காலக் காஞ்சிப் பெரியவரும் குறிப்பிடுகிறார். சிந்துநதி நாகரிக மக்களைப் பாரசீகர் சிந்து எனப் பேச முடியாமையால் இந்து என்றனர். சிந்து இந்துவானது பிற மதத்தவர் கொடுத்த பெயரேதான். சிவசம்பந்த மான சைவ சமயிகள் ஊர்கள்தோறும் வயிர வர் ஆலயங்களை அமைத்து வழிபடுகிறார் கள். சிவாலயம் முருகனாலயங்களிலும் வைரவ சந்நிதானங்கள் உண்டு. சிவனது அதிஷ்டான நிலையில் வந்தவரே வைரவப் பெருமான். வடுகனென்றொரு திருநாமம் வழக்கமாய் அமைந்துள்ளது. வைரவிப் பிள்ளையென நம்முன்னோர் பிள்ளைகட்குப் பெயரிட்டனர். இந்த வழக்காற்றில் வந்து, வைத்த பெயரே வைரவியென்ற பெயர். என் குருதேவர் திருவாசகப் பேரூற்று- ஞான வள்ளல் சபாரத்தினம் சுவாமிகளோடு மிக்க ஈடுபாடுடைய இவரை வைரவியார் என்றே அழைப்பார். இக்கௌரவம் அனைவரின் ஆன்மீக நிலையால் வந்தது. ஆர்விகுதி பண் பைக் குறிக்கும். இளமுருகனார், கந்த முருகேசனார், அரசன் சண்முகனார் இதற்கு எடுத்துக்காட்டாகும். இவரை என் குருதேவர் மறவன்புலோவில்- சின்னத்தம்பி சுவாமிகளின் குருபூசை நிகழ்வின்போது அவர் சமாதி யிலேயே அறிமுகம் செய்தார்கள்.

இடுப்பிலே வெள்ளை வெளேறென்ற நான்குமுழ வேட்டி, உடம்பில் ஒரு வெண் துண்டு. கையிலே கறுத்த நூல் கட்டி இருந் தார். சிரித்த முகம் காலிலே வெயிலுக்காகப் பழைய பாட்டாச் செருப்பு. ஞானம் பொழியும் நா, அன்போடு பழகும் பண்பு நிறைந்த ஆத் மீக ஞானம். இவர் அன்று உள்ளே போகாமல் வாசற்படியிலே நின்று பூசைகளைப் பார்த்தார். வெளியிலே இருந்துதான் சாப்பிட்டார். ஏனென்று

*பணத்தை இழந்தால் சொற்ப நட்டம், நேரத்தை இழந்தால் எல்லாமே நட்டம்.*

அப்புவைக் (சபாரத்தினம் சுவாமிகளைக்) கேட்டேன். இவர் ஒரு சிறுபான்மை இனத்தவர் என்று சொன்னார். இதை எழுத என் மனமும் நாவும் கூசுகிறது. நந்தனைப் போலொரு பார்ப்பானில்லை எனப் பாடிய பாரதி யோகிகள் சித்தர்களைப்பற்றி இப்படிக் குறிப்பிடுகின்றார்.

**நந்தனைப் போலொரு பார்ப்பான் - இந்த**
**நாட்டில் இல்லை; குணம் நல்லதாயின்**
**எந்தக் குலத்தின ரேனும் - உணர்**
**வின்பம் அடைதல் எளிதெனக் கண்டோம்.**

-உயிர் பெற்ற தமிழர் பாட்டு 4 (ஜாதி)

**உற்றவர் நாட்டவர் ஊரார் - இவர்க்கு**
**உண்மைகள் கூறி இனியன செய்தல்**
**நற்றவம் ஆவது கண்டோம் - இதில்**
**நல்ல பெருந்தவம் யாதொன்றும் இல்லை.**

**பக்கத் திருப்பவர் துன்பம் - தன்னைப்**
**பார்க்கப் பொறாதவன் புண்ணியமூர்த்தி**
**ஒக்கத் திருந்தி உலகோர் - நலம்**
**உற்றிடும் வண்ணம் உழைப்பவன் யோகி.**

**ஊருக் குழைத்திடல் யோகம் - நலம்**
**ஓங்கிடு மாறு வருந்துதல் யாகம்**
**போருக்கு நின்றிடும் போதும் - உள்ளம்**
**பொங்கல் இல்லாத அமைதி மெய்ஞ்ஞானம்**

-தவமும் யோகமும் 15-16-17.

இப் பெருமகனாரின் சென்மபூமி இணுவில். நல்ல கமக்காரராய் வாழ்ந்தவர். இவர் எங்கே படித்தார் என்று பூர்வாங்கம் தெரியவில்லை. ஆனால் பாரதம்- இராமாயணக் கதை தெரியும். சித்தர் பாடல்கள் பட்டினத்தார் பாடல், தேவார திருவாசகம், தாயுமானவர், வள்ளலார் பாடல்கள், திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தர் அலங்காரத்தில் நல்ல ஆட்சியுள்ளவராய் வாழ்ந்தார். எல்லாம் இறைவன் செயலென்று வாழ்பவர்க்கு இல்லறம் துறவறம் இரண்டும் மேன்மையே என்ற உண்மையை உணர்ந்த மகான் இவர்.

**சாட்டையில் பம்பரஜாலம் போலெலாம்**
**ஆட்டு வான் இறையென அறிந்து நெஞ்சமே!**
**தேட்டம் ஒன்று அறஅருள் செயலில் நிற்றியேல்**
**வீட்டறம் துறவறம் இரண்டும் மேன்மையே.**

-ஆசையெனும் 3 - தாயுமானவர்.

சாட்டை- கயிறு, பம்பரஜாலம் போல்- பம்பரமாயம் போல, தேட்டம் ஒன்று அற- கவலை ஏதும் இல்லாது, வீட்டறம்- இல்லறம், துறவறம்- சந்நியாசம்.

இல்லறமே இய வறமாய்க் கொண்ட இவர் பக்திப் பெருக்காற் பல அருளாளர்களோடு

*கடந்து வந்த பாதையைக் கவனி, வாழ்வின் அனுபவச் சுவடுகள் தானே தெரியும்.*

தொடர்புடையவர். செல்வச்சந்நிதி முருகுப்பிள்ளைச் சுவாமிகள் ஆனந்தா ஆச்சிரமம் மயில் வாகனம் சுவாமிகள், கிளிநொச்சி வடிவேற் சுவாமிகள், திருக்கேதீசுவரம் சபாரத்தினம் சுவாமிகள், கோண்டாவிற் கந்தையா சுவாமிகள்- யோகர் சுவாமிகள் இவர்களிற் சிலர். நீண்டகாலம் திருக்கேதீஸ்வரத்தில் அப்புவோடு இருந்து கமம் செய்ய உதவியாளராய் இருந்து அவரையே குருவாகக் கொண்டார். ஒருமுறை பொயிலை (புகையிலை)த் தோட்டம் செய்தார்கள். அதை வெட்டிக் காயவிட்டு, குடிலில் தூக்கி உணர்த்தினார்கள். அப்போ தீப்பற்றிப் புகையிலையும் குடிலும் எரிந்துகொண்டிருந்தது. வயிரவியார் திகிலடையவில்லை. நெருப்புச் சுவாலையைச் சுற்றிச்சுற்றி கெக்கட்டம் விட்டு சிரித்து கந்தரநுபூதியைப் பாடிப்பாடிக் களித்துச் சுற்றிவந்ததாக அப்பு சொன்னார். மணிவாசகர் அடியார் செயலை இப்படிப் பாடியுள்ளார்.

**சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு**
**திரண்டுன் திருவார்த்தை**
**விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வேறு**
**இருந்துன் திருநாமம்**
**தரிப்பார் பொன்னம் பலத்தாடும் தலைவா**
**என்பார் அவர் முன்னே**
**நரிப்பாய் நாயேன் இருப்பேனோ நம்பி**
**இனித்தான் நல்காயே.**

-கோயில் மூத்த திருப்பதிகம் 9.

தேனிப்பார் - தேன்போல் அனுபவிப்பார், நரிப்பு- இகழ்ச்சி, களிப்பார்- மகிழ்வார்.

இப்படியான போக்கமைந்த வைரவியார் போலித் துறவிகளை விரும்பார். களையம் (துவராடை) உடுத்துக் கொண்டு உள்ளத்திலொன்றும், உதட்டிலொன்றுமாய்த் திரிவோரை விரும்பமாட்டார். இவர்கள் பற்றிக் கூறும்போது "வேப்பெண்ணெய்ப் போத்தலில் தேன் என்று எழுதியிருப்பது போல்" எனச் சொல்வார். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டுமென வள்ளலார் இதைப் பாடியுள்ளார். உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கிலொளி உண்டாகும் என்பது பாரதி வாக்கு. இதற்கு இலக்கணமாய்த் திகழ்ந்தவர் வைரவியார் சுவாமிகள். தனக்கும் இறைவன் அருள் கிட்டுமோ- தனக்கு அத் தகுதியுண்டோவென்ற ஆதங்கத்தின் அடிப்படையிலே, தாயுமானவரின் ஒரு பாடலைப் பாடித் தனக்குள் விசாரணை செய்வார்.

**அழுக்கு ஆர்ந்த நெஞ்சு உடையேனுக்கு, ஐ**
**யாநின் அருள் வழங்கின்**
**இழுக்கு ஆகும் என்று எண்ணி யோஇரங்**
**காத இயல்பு கண்டாய்,**
**முழுக்காதல் ஆகி, விழிநீர்**
**பெருக்கிய முத்தர் எனும்**
**குழுக்காண நின்று நடம் ஆடும்**
**தில்லைக் கொழுஞ்சுடரே!**

-பாயப்புலி 34.

*அனுபவத்தைப் பெறும்போதுதான் வாழ்வின் சிக்கல்கள் புலப்படுகிறது.*

அழுக்கு ஆர்ந்த- மாசு படிந்த, குழுக்காண- ஞானியர் கூட்டம் தரிசிக்க, நெஞ்சு- மனம், இழுக்கு- குற்றம், காதல்- அன்பு.

பெரிய அருளாளர்கள் தம்மைக் குறைத்தே மதிப்பிடுவர். இதைத் தன்னிழப்பு என்று சொல்வர். சில பாடல்களுக்குத் தன் சொந்தக் கருத்தையும் கூறுவார். உதாரணம்:

**அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது எனும் பெரிய**
**பகர் மொழி என்று கண்டால்**

-எங்கும் நிறைந்த பொருள் 1.

அசையாது எனும் பெரியவா- பகர்மொழி யொன்றுகண்டால் எனப் பிரித்து பொருள் சொல்வர். அது அற்புதமாய் இருக்கும்.

வைரவியார் சுவாமிகளுக்கு அப்பர் சுவாமிகளிலே நல்ல ஈடுபாடு. அந்த வெள்ளாள னைக் கீழே வைத்து விட்டார்களே என்ற மன நினைவு அவரை எவ்வளவு உயர்த்திக் காட்டு கிறது. ஞானசம்பந்தரிலும் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டியவர் அப்பர் சுவாமிகள் என்பது அவரது கருதுகோள். அவருக்குள்ளே ஒரு விசாரம் எந்த நேரமும் ஒரு வினாவை எழுப்பிக்கொண்டே இருக்கும். அப்பருக்குக் கிடைத்த ஆன்ம விடுதலை, சிவப்பேறு எனக்கும் கிடைக்குமே எனத் தான் காணும் மகான்கள் இடமே கேட்பார்கள். பற்றற்ற பெருந்துறவி அவர். கசாயமோ- துளசிமாலையோ அணியாதவர். போலி வேடங்களை விரும்பாதவர்.

**காவியுடுத்தும் தாழ்சடை வைத்தும்**
**காடுகள் புக்கும் தடுமாறி**
**காய் கனிதுய்க்கும் காசினி முற்றும் திரியாதே**
**சீவனொடுக்கம் பூத ஒடுக்கம் தேற உதிக்கும் பரஞானம்**

என்பது அருணகிரியார் திருவாக்கு.

தகரமடம், கடையொன்றில் வாசம் செய்தவர் கடவுட் சுவாமிகள். இவரை வெளியே நின்று- சாஷ்டமாக விழுந்து பல முறை வணங்குவார். அவரின் செவ்விதான் என்னே. ஆனந்தாச்சிரமம் மயில்வாகனம் சுவாமிகளிடம் போவார். அவரும் வைரவியார் சுவாமிகளை நன்கு மதிப்பார். பிரயாணத்துக் குப் பணம் கொடுப்பார். யாரும் காசு கொடுத் தால் பஸ்சுக்குத் தேவையான பணத்தை எடுத்துக்கொண்டு மீதியை உரியவரிடம் ஒப்படைத்து விடுவார். மனத்துறவு உள்ள அனுபூதிச் செல்வர்தான் இவர். எமது வீட்டுக்கு வந்தால் வெளி ஃபோட்டிக்கோவில் நிற்பார். உள்ளே வரமாட்டார். ஒருமுறை எங்கள் வீட் டிற்கு (ஊரெழு) வந்திருந்தார். பொழுதுபட்டுப் போய்விட்டது. மழையும் கொட்டத் துவங்கி விட்டது. எனவே அவர் தன் வீட்டுக்குப் போக முடியாது. வீட்டிலே தங்கவேண்டிய நிர்ப்பந் தம் ஏற்பட்டுவிட்டது. வெளியிலே தான் படுக் கப் போகிறேன் என வைராக்கியமாய் நின்றார். நானும் எனது மனைவியாரும் மிகப் பரிந்து விடாப்பிடியாகக் கேட்டபின் சம்மதித்து உள்ளே படுத்திருந்தார். சாதி குலப் பிறப் பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலி நாயேனை யெனப் பொழிந்து தள்ளிய மணி வாசகர் ஈற்றிலே சாதிவிடாத குணங்கள் நம் மோடு சலித்திடும் ஆகாதே (திருப்படையாட்சி 8) எனப் பாடினார். சாதியாவதேதடா - சமய மாவது ஏதெடா என்பதும் சிவவாக்கியர் கூற்று. சாத்திரமும் கோத்திரமும் பேசும்

சளக்கர்காள் எனச் சாதி பேசியவரை விரட்டினார் அப்பர் பெருமான். எல்லாரும் ஓர்குலம், எல்லாரும் ஓர் நிறை, சாதிகளில்லையெடி பாப்பா என்றவர் பாரதி. அம்பேத்காரும், காந்தியடிகளும் அவர்கள் ஹரிகுலம் என்றனர். நம் சமயத்துக்கு ஏற்பட்ட ஒரு சதா இதுதான். இன்று எல்லாரும் கோயில் சென்று ஆண்டவனை வணங்குகிறார்கள். எவ்வளவு பெருமை எமக்கு. வைணவத்தில் திருப்பாணாழ்வாரும் நம் சமயத்தில் நந்தனும், திருநீலகண்ட யாழ்ப்பாணரும் மதிப்புக்குரியவர்கள். கிறீத்தவம் இன்றும் சண்டமாருதமாய் ஊடுருவும் இற்றை நாளிற்கூட, அன்றுதொட்டு இன்றுவரை சைவம் பேணும் இவர்களே பெரியவர்கள். இப்படிப் பார்க்கும்போது வைரவியார் உயர்ந்தவர்களில் உயர்ந்தவர் என்றே என் மனதிற்படுகிறது. என் குருதேவரால் மதிக்கப்பட்டவர் இப் பெரியவர்.

இவர் ஒருமுறை பரமேசுவராச்சந்திப் பக்கம் போய்க்கொண்டிருந்தார். கோண்டாவிற் கந்தையாச் சுவாமிகள் தெற்கேயிருந்து வடக்கு நோக்கி நெடுஞ்சாலை ஓரமாக நடந்து வந்தார். வீதியைக் கடக்க குறுக்காக நடந்தார். அதைக் கண்ட வைரவியார் சுவாமிகள் ஓடிப்போய்ச் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினார். வாகனங்கள் ஸ்தம்பிதமாயின. இவர்கள் போனதும் ஊர்திகள் சென்றன. கழறிற்றறிவார் சிவனடியார்களை மதிப்பதுபோல வைரவியாரும் போற்றுவார். அப்பாலுமடி சார்ந்த அடியார்க்கும் அடியேன் என்பது சுந்தரர் வாக்கு. இந்த அனுபூதிச் செல்வர் ஈழத்துப் பக்தர் பரம்பரையில் ஒரு துருவ வெள்ளியாய்த் திகழ்கிறார். இவர் மற்றவர்க்குத் தெரியாமலே கரந்து வாழ்ந்தார். இப்படியான பெரியவர்களின் வரலாற்றை ஏடுகளிலே பொறித்து வைக்கவேண்டியது அறிஞர்களின் தலையாய கடமையாகும்.

சித்தம் தெளிந்து சிவம் ஆனோர் எல்லோர்க்கும்
கொத்தடிமையான குடிநான் பராபரமே.

-தாயுமானார், பராபரக்கண்ணி 148.

---

## தானியங்களை வீணாக்கலாமா?

ஒருநாள் இரமண மகரிஷி அவர்கள் ஆசிரமத்தின் சமையல் அறைக்குள் நுழைந்தார். அங்கே தரையில் அரிசி இறைந்து கிடப்பதைக் கண்டார். கீழே அமர்ந்த அவர் ஒவ்வொரு அரிசியாகப் பொறுக்கத் தொடங்கினார். அங்கு வந்த அவருடைய சீடர்கள் இந்தக் காட்சியைக் கண்டார்கள். கடவுளுக்காகத் தன் வீட்டையும் உறவினர்களையும் துறந்து வந்த பெருந்துறவியான இரமண மகரிஷி அரிசியைப் பொறுக்குவதைப் பார்த்து வியப்பு அடைந்தார்கள். இறைந்து கிடக்கும் சில அரிசிக்கு இவ்வளவு முதன்மை தர வேண்டுமா என்று நினைத்தார்கள். தங்கள் ஆர்வத்தை அடக்கமுடியாத அவர்கள், "துறவியாரே! நம் சமையல் அறையில் அரிசி மூட்டைகள் பல உள்ளன. சில அரிசிகளைப் பொறுக்குவதற்காகத் தாங்கள் இவ்வளவு துன்பப்படலாமா?" என்று கேட்டார்கள். அவர்களை மேலும் கீழும் பார்த்த துறவி, "சீடர்களே! நீங்கள் இவற்றை வெறும் அரிசியாகப் பார்க்கிறீர்கள். இந்த அரிசிக்குள் என்ன உள்ளது என்று பாருங்கள்? உழவர்களின் கடும் உழைப்பு இல்லையா? மழை, நீர், கதிரவனின் ஒளி இல்லையா? இனிமையான காற்று, மென்மையான மண் இருப்பதை நீங்கள் உணரவில்லையா? இவற்றை எல்லாம் நீங்கள் உணர்ந்தால் ஒவ்வொரு தானியத்திற்கு உள்ளும் இறைவனின் அருள் இருப்பதை உணர்வீர்கள். உங்கள் கால்களால் மிதித்து வீணாக்கமாட்டீர்கள். நீங்கள் உண்ண விரும்பாவிட்டால் பறவைகளுக்குத் தாருங்கள்" என்றார். இதைக் கேட்ட சீடர்கள் அமைதி ஆனார்கள்.

*விடாமுயற்சி உள்ளவர்களிடம் இறைவன் இருக்கிறார்.*

# திருவிளையாடற் புராண வசனம்

(ஒன்பதாவது)

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

## எழுகட லழைத்த படலம்

வேதங்களாலும் அளவிடப்படாத முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் பாண்டியராகி, உலகமெல்லாம் வெண்குடை நிழற்றி, செங்கோல் செலுத்து நாளிலே, வேத வேதாந்தங்களை உணர்ந்த இருடிகள் முறையோடும் அவரைச் சந்தித்து வருவார்கள். கௌதம முனிவர் ஒருநாள் சந்தித்துத் திரும்பும் பொழுது, காஞ்சனமாலையுடைய வீட்டுக்குப் போனார். அவள் அவரை எதிர்கொண்டு அழைத்து, ஆசனத்தில் இருத்தி, அஞ்சலி செய்து, "வேத சிரசாகிய உபநிடதங்களிலே விளங்கும் பொருள் பரமசிவமே என்று தெளிந்த முனிவரே! அடியேனுடைய பிறவித் துன்பத்தை நீக்கவல்ல தவம் யாது? அருளிச் செய்யும்" என்று விண்ணப்பஞ் செய்தாள்.

கருணைக்கு உறையுளாகிய கௌதம முனிவர், திருமுக மலர்ந்து, "மலயத்துவ பாண்டியனுக்கு வாய்த்த பெருங்கற்பினை உடைய பத்தினியே! நீ உலக மாதாவாகிய தடாதகைப் பிராட்டிக்கு மாதாவானாய்; பிரம விட்டுணுக்களாலும் அறியப்படாத சிவபெருமானை மருமகனாகப் பெற்றுக்கொண்டாய்; நீ அறியாத தவம் இப் பூமண்டலத்திலே வேறு யாவர் அறிவார்! ஆயினும் சொல்வோம், கேள்:- மானதம், வாசிகம், காயிகம் எனத் தவம் மூவகைப்படும். அவற்றுள் மானதமாவது வாய்மை, இரக்கம், பொறை, ஐம்பொறி அடக்கல், சிவத்தியானம், தரும தானங்களிலே சிந்தை வைத்தல் முதலியனவாம். வாசிகமாவது பஞ்சாட்சரசெபம், சதருத்திர பாராயணம், தோத்திரம், தருமங்களை எடுத்துச் சொல்லுதல் முதலியனவாம். காயிகங்களாவன சிவனைப் பூசித்தல், சிவாலயங்களை வலஞ்செய்து வணங்குதல், சிவ தலங்களுக்குச் சென்று வணங்குதல், அங்கங்குத் திருப்பணிகளை நிறைவேற்றல், சிவ தீர்த்தங்களிலே ஸ்நானஞ் செய்தல் முதலியனவாம். இம் மூவகைத் தவங்களுள் காயிகங்களே சிறந்தன. அவைகளுள் தீர்த்த யாத்திரைகள் சிறந்தன. அவைகளுள் கங்கை முதலிய நதிகளிலே தனித் தனி போய்த் தீர்த்தமாடுதல் சிறந்தது. அந்நதிகளிலே தனித்தனி போய்த் தீர்த்தமாடல் அரிது. அந்நதிகளெல்லாம் வந்து சமுத்திரத்திலே நிறைதலினால், சமுத்திரத்திலே தீர்த்தமாடுதல் எல்லாவற்றினுஞ் சிறந்தது" என்றார்.

அதுகேட்ட காஞ்சனமாலை சமுத்திர ஸ்நானத்திலே மிக்க விருப்புடையவளாய், தன் கருத்தைத் தன் புதல்வியாகிய தடாதகைப் பிராட்டிக்குத் தெரிவித்தாள். எம் பெருமாட்டி திருவுள்ளஞ் சிறிது தளர்ந்து, "இதனை என் பிராண நாயகருக்கு விண்ணப்பஞ் செய்வேன்" என்று எம்பெருமான் திருமுன் சென்று, கைகுவித்து, ஒதுங்கி நின்று, "குண்டோதரன் பொருட்டு அன்று அன்னக்குழியும் வையையும் அழைத்த கருணைக் கடலே! இன்று என் மாதா சமுத்திர ஸ்நானஞ் செய்ய விரும்புகின்றாள்" என்று விண்ணப்பஞ்

*இடைவிடாத ஊக்கத்திற்கு எந்தத் துன்பமும் இல்லை.*

செய்தாள். சுந்தர பாண்டியர், "சமுத்திரம் ஒன்றோ! ஏழு சமுத்திரங்களையும் ஒருங்கு வர அழைப்போம்" என்று திருவுளங் கொண்டருளினார். உடனே ஏழு கடல்களும் கீழ்த் திசையிலுள்ள ஒரு வாவியினிடத்தே ஏழு வண்ணத்தோடும் வந்து அடங்கின.

## பத்தாவது
## மலயத்துவசனை அழைத்த படலம்

சுந்தர பாண்டியர் தடாதகைப் பிராட்டியோடும் வந்து, ஏழு கடலும் நிறைந்த வாவிக் கரையில் இருக்கும் நந்தவனத்திலே சிங்காசனத்தின்மேலே எழுந்தருளியிருந்தார். தம்முடைய மனைவியாரை நோக்கி, "நாம் உன் பொருட்டு ஏழு கடல்களையும் இந்நகரத்திலே அழைத்தோம்; நீ போய் உன் மாதாவை ஸ்நானம் பண்ணும்பொருட்டு அழைத்துக்கொண்டு வருவாயாக" என்றார். பிராட்டி தன் மாதாவாகிய காஞ்சனமாலையை அழைத்துக் கொண்டு வாவிக்கரையை அடைந்தாள்.

காஞ்சனமாலை சிவபுராணங்களிலே வல்ல சற்பிராமணர்களைப் பார்த்து, "சமுத்திர ஸ்நானஞ் செய்யும் முறைமை எங்ஙனம்? சொல்லுங்கள்" என்றாள். பிராமணர்கள் அவளை நோக்கி, "கணவனுடைய கை, புத்திரனுடைய கை, பசுக்கன்றின் வால் என்னும் இம் மூன்றினுள் ஒன்றைக் கையினாலே பற்றிக்கொண்டு ஸ்நானஞ்செய்தலே முறை" என்றார்கள். காஞ்சனமாலை அது கேட்டு, தன் மகளை நோக்கி, "முன்னே தவத்தைக் குறைவறச் செய்யாத கொடிய பாவியேனுக்குக் கணவனும் புத்திரனும் இல்லையே; இனி யான் பெறுவது கன்றல்லது பிறிதுண்டோ! ஆதலால் கன்றின் வாலைப் பற்றிக்கொண்டு ஸ்நானஞ் செய்யக் கடவேனோ? என்றாள். எம்பெருமாட்டி தன் பிராண நாயகர் திருமுன் சென்று தன் மாதாவின் குறையை விண்ணப்பஞ் செய்ய, எம்பெருமான் சுவர்க்கத்திலே ஓராசனத்தில் இந்திரனோடு ஒருங்கிருந்த மலயத்துவச பாண்டியன் மேலே திருவுளஞ் செலுத்தினார்.

பாண்டியன் சிவபெருமானுடைய திருவுளத்தை அறிந்து, இந்திரனுடைய ஆசனத்தை நீத்து, விமானத்தின்மேல் ஏறி வந்து, "ஏழ் கடலும் நிறைந்த வாவிக் கரையிலே, மனோ வாக்குக் கெட்டாத பரமானந்தப் பழங்கடலை யான் பெண் பேற்றினாற் பெற்ற பெரும் பேறு இது" என்று எதிர்கொண்டு, திருவடிகளை வணங்கும் பொருட்டு வந்தான். அவன் வணங்குமுன்னே, சுந்தர பாண்டியர் தமது மாமன் என்னும் முறையினாலே திருக்கரத்தினால் அமைத்து, அவனை எதிர்ந்து, தழுவி, திருவருணோக்கஞ் செய்து, "நீ உன் மனைவியோடு போய்த் தீர்த்தமாடுவாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினார். பாண்டியன், தான் முன்னைப் பெருந் தவத்தினாலே பெற்ற தடாதகைப் பிராட்டி எதிர்வந்து தழுவ, தானுந் தழுவி, மலையரையன் போல எண்ணில்லாத பெரு மகிழ்ச்சியை அடைந்தான். "பிராட்டி உடைய திருக்கல்யாணத்தை என் தவக் குறைவினாலே கண்டேனில்லையே" என்று உள்ளத்திலே கவலை உண்டன்றோ, அக் கவலையை, இம் மகிழ்ச்சியாகிய தேனை உண்டு, மறந்துவிட்டான். காஞ்சனமாலை தன் கணவனெதிரே நாணத்தோடு சென்று வணங்கினாள். பின்பு தன் கையிலே பவித்திரஞ் சேர்த்து, பிராமணர் முன்னே சங்கற்பஞ்செய்து, பஞ்சாட்சரத்தை உச்சரித்து, தன் கணவனாகிய மலயத்துவச பாண்டியனுடைய கையைப் பற்றிக் கொண்டு, பேருவகையோடு சமுத்திர ஸ்நானஞ் செய்தாள். பாண்டியனும் காஞ்சனமாலையும் ஸ்நானஞ்செய்து கரையேறினவுடனே,

*உண்மையான அறிவு என்பது தயக்கமற்ற உறுதி.*

சிவபெருமானுடைய திருவருளினாலே அவர்களுடைய திருவுருவத்தைப் பெற்றார்கள் உடனே சிவ லோகத்தினின்றும் ஒரு தேவவிமானம் இழிந்து வந்தது. இருவரும் சிவபிரானுடைய திருவருளினாலே அவ்விமானத்தின் மேல் ஏறி, தேவர்கள் கற்பகப் பூமாரி பொழிய, தேவ துந்துபிகள் ஒலிப்ப, அரகரவொலி தழைப்ப, சோமசுந்தரக் கடவுளுடைய திருக்கோயிலை அணுகி, தங்கள் மருமகனாகிய சுந்தர பாண்டியரும் மகளாகிய தடாதகைப் பிராட்டியாரும் அத் திருக்கோயிலினுள்ளே புகுந்து வீற்றிருக்கக் கண்டு, "இருவினை வயத்தினாலே சரீரத்தைப் பொருந்தும் மனிதரைப்போல முன்னை வடிவம் மாறி உலகத்திற்கெல்லாம் மாதாவாகிய உமாதேவியே மகளும், பிதாவாகிய சிவபெருமானே மருமகனும் ஆகும் வண்ணம் நாம் என்ன தவஞ் செய்தோம்! இத் தவம் பிறரொருவரோடு செய்தல் அரிது! அரிது!" என்று வியந்தார்கள். பின்பு சிவபெருமானுடைய திருவடிகளிலே ஒன்றிய அன்பு ஈர்த்தெழச் சென்று, இரு கண்களும் அடிக்கடி திரும்பி நோக்க, விமானத்தை அஞ்சலி செய்து கொண்டுபோய், புவர் லோகத்தையும் சுவர் லோகத்தையும் மகர் லோகத்தையும் சன லோகத்தையும் தபோ லோகத்தையும் சத்திய லோகத்தையும் வைகுண்ட லோகத்தையுங் கடந்து, சிவலோகத்தை அடைந்தார்கள்.

அதன்பின் தடாதகைப் பிராட்டி சுந்தர பாண்டியருடைய திருவடிகளை வணங்கித் துதித்து, "எண்ணில்லாத தேவர்களுக்கும் மற்றை யாவருக்கும் பயன் சுரக்கும் காம தேனுவின் கன்றுக்குக் குறைவு யாது? என்னுடைய மாதா எண்ணியது கடலொன்றே! அவ்வாறாகவும் என் பொருட்டு ஏழு கடலையும் இங்கே அழைத்தருளினீர். அவள் கைப்பற்றி ஆடும் பொருட்டுத் தேவருலகத்திருந்த கணவனையும் அழைத்தருளினீர். இருவருக்கும் உம்முடைய சாரூப்பியத்தைக் கொடுத்தருளினீர். பாண்டிய குலம் இறந்ததென்று பழிக்கப்படா வண்ணம் முடிசூட்டிச் செங்கோல் நடாத்தி வருகின்றீர் போலும். இனி இந் நிலைமைக்கு இடையூறு இன்றே" என்று விண்ணப்பஞ் செய்தாள். சுந்தர பாண்டியர் தமது நாயகியுடைய உட்கோளைத் திருவுளங் கொண்டு மகிழ்ந்திருந்தார்.

---

## மகிழ்ச்சி அடைந்த தேரோட்டி

ஒரு நாட்டை ஆண்டு வந்த அரசன் எங்கே சென்றாலும் நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேரில்தான் செல்வான். ஆனால் அந்தத் தேரோட்டி எப்பொழுதும் கவலை தோய்ந்த முகத்துடனே இருந்தான். அரசனிடம் அளந்துதான் பேசுவான். திடீரென்று அவன் மகிழ்ச்சியாக இருக்கத் தொடங்கினான். இந்த மாற்றம் எப்படி ஏற்பட்டது என்று அவனைக் கேட்டான் அரசன். "அரசே! என் மனைவியால் நான் மாறினேன்" என்றான் அவன். "நீ மகிழ்ச்சியாக இருப்பதற்குக் காரணம் உன் மனைவியா? அப்படி அவள் என்ன செய்தாள்?" "அரசே! என் மனைவி என்னிடம், நான் இனி உங்களுடன் வாழ மாட்டேன். என் அம்மா வீடு போகிறேன்" என்றாள். நான் அவளிடம் காரணம் கேட்டேன். "நம் அரசருக்கு எவ்வளவு இன்றியமையாத வேலைகள் உள்ளன? அவர் எப்பொழுதும் நகருலா வந்தாலும் மகிழ்ச்சியுடன் காட்சி அளிக்கிறார். மக்களைப் பார்த்துப் புன்முறுவல் பூக்கிறார். நீரோ தேரோட்டும் வேலையைச் செய்கிறீர். எப்பொழுதும் கவலை தோய்ந்த முகத்துடன் உள்ளீர். எப்பொழுதும் கவலையுடன் இருக்க வேண்டியவர் மகிழ்ச்சியாக இருக்கிறார். மகிழ்ச்சியாக இருக்கவேண்டிய நீர் கவலையுடன் இருப்பதால் என்ன பயன்?" என்று கேட்டாள். மகிழ்ச்சியுடன் இருக்கத் தொடங்கினேன். இதுதான் என் மாற்றத்திற்குக் காரணம்" என்றான் அவன்.

*நம்பிக்கையே சகல நோய்களுக்கும் செலவில்லாத ஒரே மருந்து.*

# அவர் இவர் என்னாது ஆர்க்கும் இடுமின்

– **ஆர். வீ, கந்தசுவாமி** அவர்கள் –

நமது முன்னோர்கள் சிவனடியார்கள், துறவிகளுக்கு உணவு அளித்து மகிழ்விப் பதையே பெரும் பேறாகக் கருதினார்கள். எத்தகைய வறுமையோ, இடரோ வரும் நிலையிலும் பிறருக்குக் கொடுத்த பின்பே மீதம் இருப்பதைத் தங்கள் உணவாகக் கொண்டு மகிழ்வார்கள். உணவு தேடி வீட்டிற்கு வருபவர்களை சிவபெருமானாகவே கருதினார் கள். அவர்களை மகேஸ்வரர்கள் என்று அழைத்துப் பெருமைப்பட்டார்கள்.

சிறுத்தொண்டர் நாயனார், இளையான் குடி மாற நாயனார் போன்றவர்களுடைய வரலாறுகள் நமது உள்ளத்தை உருக்கும் சான்றுகளாகும். கொடுப்பதில் தராதரம் பார்ப்பது பெரும் சிவபாதகமும் தவறும் ஆகும். யார் வந்தாலும் நம்மால் இயன்றவற்றைக் கொடுக்கும் மனப்பான்மை இருக்கவேண்டும். அதனால் "ஆர்க்கும் இடுமின்" என்றார் திரு மூல நாயனார்.

கலிக்கம்ப நாயனார் என்னும் ஒரு அருளாளர் இருந்தார். அவர் சிவனடியார் களுக்கு மிகவும் அன்புடன் உணவு படைத்து மகிழ்வித்துத் தானும் மகிழ்ச்சியடைவார். அவர்களுக்கு வேண்டிய பொருட்களை எல் லாம் கொடுத்துத் தொண்டு செய்வார். அவருடைய மனைவியார் அவருக்கு உறு துணையாக இருந்தார். ஒரு நாள் கலிக்கம்பர் தனது இல்லத்தில் அடியார்களை மரபுப்படி உபசரித்து வந்தபோது முன்பு அவரிடம் வேலை செய்து வந்த ஒருவர் துறவியாகி, சிவபெருமானிடம் அன்பு பூண்டவராக அமுது உண்ண வரிசையில் அமர்ந்திருந்தார். அவரை அடையாளம் கண்டு கொண்ட அம்மையார் அவருடைய பாதங்களை நீரால் கழுவுவதற் குத் தயங்கி நீரை விடாமல் இவர் நம்முடைய பணியாளர் என்று சொல்லி நின்றார்.

கலிக்கம்பருக்கு பெரும் கோபம் வந் தது. சிவனடியார்கள் யாராயினும் வழிபட வேண்டியவர்கள் அவர்களை உபசரிப்பதும் உணவு அளிப்பதும் சிவபக்தர்களுடைய பொறுப்பாகும். அவர், இவர் என்று சொல்வது பெரும் சிவபாதகமாகும் என்று கலிக்கம்பர் உணர்ந்தார். மனைவியே ஆனாலும் அடியார் ஒருவரை ஏதோ ஒரு காரணம் காட்டி உபசரிக் கத் தவறிவிட்டதால் குற்றத்திற்கு ஆளானாள் என்று கலிக்கம்பர் முடிவிற்கு வந்தார். அவர் ஒரு வாளைக்கொண்டு வந்து மனைவியின் கைகளைத் துண்டித்தார். தானே அந்தப் பழைய வேலைக்காரருக்கு, தகுந்த மரியாதை யும் செய்தார்.

இது நமக்கு ஒரு கடுமையான தண்டனையாகத் தோன்றும். ஆனால் அக்காலத்தில் சிவப் பரம்பொருளிடம் மனம், வாக்கு, காயம் ஆகியவற்றை அர்ப்பணித்த அருளாளப் பெருமக்கள் இதுபோன்ற நியதி களை எளிதாக கைக்கொண்டார்கள்.

*விசுவாசமான நண்பன் தெய்வத்தின் சாயலானவன்.*

"ஆர்க்கும் இடுமின் அவர்இவர் என்னன்மின்" என்கிறார் திருமூலநாயனார்.

உணவு கேட்டு வந்தவர்களுடைய பசியைத் தீர்த்தபிறகே சிவனடியார்கள் உணவு அருந்துவார்கள். விருந்தினர்கள் சரியானபடி கிடைக்கவில்லை என்றால் தாங்களே தேடிச் செல்வார்கள். கிடைக்காவிட்டால் அவர்களே பட்டினியும் கிடப்பார்கள்.

தற்போது நமது வீடுகளில் நாம் சாப்பிட்டு மிகுதியான சாப்பாட்டை குளிர்சாதனப் பெட்டியில் வைக்கின்றோம். சில நாட்கள் சென்றபின் சூடு காட்டிச் சாப்பிடுகின்றோம். இதில் ஏராளமான கிருமிகள் வளருகின்றன. இதனால் எங்களுக்கு வேலை சுலபமாகின்றது. ஆனால் உடல் நலக்குறைவு ஏற்படுவதை நாம் தெரிந்துகொள்வதில்லை. அத்துடன் நமக்கு இறைவன் வேளாவேளை கொடுக்கும் உணவைத் தேவையுள்ளவர்களுடன் பகிர்ந்து கொண்டால் எவ்வளவு மன நிறைவு உண்டாகும் என்பதை நாம் உணர்வதில்லை. ஆகவே பழைய பொருட்களைப் போற்றாதீர்கள்.

பழம் பொருள் போற்றமின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணமின்
என்கிறார் திருமூலர்.

காக்கைகளே கா... கா... என அழைத்து பகிர்ந்து உண்பதை பார்த்து நாம் அதைக் கற்றுக்கொள்ள வேண்டாமா? என்கின்றார் திருமூலர்.

ஆனபடியால் நாம் அடியார்களுக்கு அன்னம் இட்டு, பின்பு உண்போம்.

ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன் மின்
பார்த்திருந்து உண்மின் பழம் பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன் மின்
காக்கை கரைந்து உண்ணும் காலம் அறிமினே. -திருமூலர்.

---

## இறைவனை நினைப்பதே ஆனந்தம்

இறைவனைப்பற்றி யார் பேசுகிறார்களோ அவர்களைப் பக்தன் தன் நண்பர்களாக நினைக்கிறான். பிறவற்றைப் பேசுபவர்களை விரோதியாகக் கருதுகிறான். இந்த நிலைக்கும் மேலானதொரு நிலைமை உயரிய அன்பைப் பக்தன் அடைகிறான். இந்த இறை அன்பினால் தன் வாழ்வே இன்பமயமாகவும் வாழத் தகுந்ததாகவும் விளங்குகின்றது என்று கருதும் நிலை உருவாகும்போது மேலானதொரு அன்பை அவன் அடைகிறான். இந்த அன்பு இல்லாமல் அவனால் ஒரு நொடிகூட உயிர் வாழ முடியாது. வாழ்க்கை இன்பமயமாகத் தோன்றுகிறது. இதற்குக் காரணம் அங்கு இடைவிடாமல் இறைவனை நினைக்க முடிவதால்த்தான். பக்தி சாஸ்திரப்படி பக்தன் ஒருவன் முழுமை நிலையை அடைகிறான். அதாவது இறைவனுடைய அருட்காட்சி கிடைத்ததும் அவனுடைய திருவடித் தாமரைகளை தீண்டப் பெற்றதும் இறைவன் ஒருவனுக்கேதான் சொந்தம் என்ற பெருநிலையை அடைகிறான். இந்த நிலையை அடைந்ததன் பயனாக பக்தன் முற்றிலும் தூயோனாக மாறிவிடுகிறான். இதன்மூலம் வாழ்க்கையின் நோக்கம் நிறைவேறி விடுகிறது என்றாலும் பக்தர்களில் பலர் இறைவனை வழிபடுவதற்கென்றே உலகில் வாழ்ந்து வருகிறார்கள். இதுவே ஆனந்தம்.

-சுவாமி விவேகானந்தர்-

*சாதுரியத்தால் நீங்கள் எதையும் கற்றுக்கொள்ளலாம்.*

# வழித்துணை 34

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 கரும்போடு கனிச்சாறும் கசக்கிப் பிழிந்தெடுத்து
விருப்போடு படைத்திட்டு விரும்பியதைக் கேட்டிட்டால்
ஊனினை உருக்காமல் உள்ளொளியைப் பெருக்காமல்
தேடியெமை வந்திறைவன் கேட்டதனைத் தருவானோ.

02 சூரியனும் ஒன்றுதான் சந்திரனும் ஒன்றுதான்
பூமியும் ஒன்றுதான் வானமும் ஒன்றுதான்
மனிதமும் ஒன்றுதான் என்றெண்ணும் எண்ணம்தான்
இனிவரும் நாட்களில் உலகினைக் காக்குமாம்.

03 மேலிருந்து கீழ்ஊத கிளர்ந்தெழுந்து எரியாத்தீ
கீழிருந்து மேலூத கிளர்ந்தெழுந்து எரிதல்போல்
மானிடமும் மேலோங்க மேல்நின்று உரைக்காமல்
கீழிறங்கிச் சேவைசெய்வீர் மேலோங்கும் மானிடமாம்.

04 உழைக்காமல் வளர்வதெல்லாம் தளைக்காத மரத்தளிராம்
மழையிலோ வெய்யிலிலோ மறுகணமே வாடிவிடும்
இளைத்தாலும் களைத்தாலும் உழைத்துண்ணும் வாழ்க்கை
துளைத்தாலும் வளைத்தாலும் தளைத்தெழுமாம் பாரில்.

05 மின்னொளியும் கண்ணொளியும் இருந்திட்டால்போதும்
வழித்துணைக்கு அதுபோதும் என்றுமட்டும் எண்ணாதீர்
நல்வழியும் அறிவொளியும் இருந்தாலே நீங்கள்
குறிக்கோளை அடைவதற்கு அவை வழித்துணைகளாகும்.

06 கைப்பிரம்பும் கண்டிப்பும் இருந்திட்டால் போதும்
வழிப்படுத்த அவைபோதும் என்றுமட்டும் எண்ணாதீர்
அன்புவழி அரவணைப்பும் இருந்தாலே நீங்கள்
மற்றோரை வழிப்படுத்த அவை வழிவகைகளாகும்.

*பிறரிடம் குற்றம் காணாமல் நீ உன்னை ஒழுங்குபடுத்திக்கொள்.*

07 கைப்பொருளும் கனவளவும் இருந்திட்டால்போதும்
வாழ்வாங்கு வாழ்வதற்கு என்றுமட்டும் எண்ணாதீர்
மெய்ப்பொருளை அறிந்திடலும் மேன்மைகளைப் புரிதலுமே
வாழ்வாங்கு வாழஅவை வழித்துணைகளாகும்.

08 கற்றோற்கு அணிகலம் கற்றபடி ஒழுகலைப்போல்
உற்றோற்கு அணிகலம் உறவோடு கலத்தலாகும்
விற்போற்கு அணிகலம் விலைமதிக்கும் தன்மையைப்போல்
பெற்றோற்கு அணிகலம் பிள்ளைகளின் சிறப்பேயாம்.

09 எக்கருமம் ஆனாலும் எடுத்தொருவர் தொடுக்கையிலே
அக்கருமம் தவறென்று அடித்துரைக்கக் கூடாது
தக்கபடி சென்றுஅது தவறின்றி முடிந்திட்டால்
துக்கமது உமக்கேதான் தூயபுகழ் அவற்கேயாம்.

10 சுயநலமும் பொறாமையும் முற்கோபம் தானதுவும்
பயவாழ்வை பாரதனில் பயக்கும் ஆதலினால்
தயவோடு தாட்சண்ணிய மயமாக உமைமாற்றும்
கயமையும் உமைக்கண்டால் தயவாக மாறும்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னபணிக்கும்**
**மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்**
**பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர்**
**கீழே உள்ள முகவரியுடன்**
**தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை** | **காசோலை**

செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

# திருவைந்தெழுத்தின் சிறப்பு

– **திரு இ. ஜெயந்திரன்** அவர்கள் –

“நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறைமொழிதானே மந்திரம்” (தொல்காப்பியம்) என்பது தொல்காப்பியனார் வாக்காகும். நினைப்பவரைக் காப்பது மந்திரம் என்று கூறப்படுகின்றது மந்திரங்களுக்கெல்லாம் தலையாய மந்திரமாகத் திகழ்வது ஐந்தெழுத்து மந்திரமாகும். இதுவே பிறவிப் பிணிதீர்க்க வல்ல மந்திரமாகும். திருஞானசம்பந்தர் அந்தணர் குலத்தில் அவதரித்தவர். அந்தணர்கள் உபநயனச் சடங்கின்போது வைதிக முறைப்படி காயத்திரி மந்திர உபதேசம் பெறுகின்றனர். அவ்வாறு பெறுவதால் அம்மந்திரமே உயர்வானது எனச் சிலர் மயங்கி நிற்கின்றனர். அத்தகைய மயக்கங்களை நீக்கி, அந்தணர்கள் காலை, நண்பகல், மாலை எனும் மூன்று சந்தியா காலங்களில் ஓதவேண்டியது ஐந்தெழுத்து என்று உபதேசம் செய்தார். இதனை,

“செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
**கந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே**”(மூன்றாம் திருமுறை)

எனும் திருஞானசம்பந்தர் வாக்காலும்,

**மந்திரங்க ளானவெலாம் அருளிச் செய்து மற்றவற்றின் வைதிகநூற் சடங்கின் வந்த**
**சிந்தைமயக் குறும்ஐயந் தெளிய எல்லாஞ் செழுமறையோர்க் கருளியவர் தெருளும் ஆற்றால்**
**முந்தைமுதன் மந்திரங்கள் எல்லாந் தோன்றும் முதலாகும் முதல்வனார் எழுத்தஞ்சென்பார்**
**அந்தியினுள் மந்திரம் அஞ்செழுத்து மேயென் றஞ்செழுத்தின் திருப்பதிகம் அருளிச் செய்தார்.**

(பெரியபுராணம்- திருஞானசம்பந்தர் வரலாறு)

எனும் சேக்கிழார் சுவாமிகள் வாக்கின்மூலமும் அறியலாம். மாணிக்கவாசகர் கூறுகின்ற போது “அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை” (திருச்சதகம்- சுட்டறுத்தல்) என்று கூறுகின்றார். அதாவது பிறவியெனும் பெரு வெள்ளத்தை நீந்தி கரை சேர்வோர்க்குத் தெப்பமாகத் துணை செய்வது ஐந்தெழுத்து எனக் கூறுகிறார். ஐந்தெழுத்தினை ஓதுவோர்க்கு அனைத்து விதமான துன்பங்களும் நீங்கும் என்பதை, “சிவாயநம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை” எனும் ஔவையார் வாக்கு மூலம் தெளியலாம். திருமூலர் கூறுகையில்,

**சிவசிவ என்கிலர் தீவினை யாளர்**
**சிவசிவ என்றிடத் தீவினை மாளும்**
**சிவசிவ என்றிடத் தேவரு மாவர்**
**சிவசிவ என்னச் சிவகதி தானே.**

(திருமந்திரம்)

என்று கூறுவதைக் காணலாம். எனவே ஐந்தெழுத்திற்கு இணையாகச் சொல்வதற்கு பிறிதொரு மந்திரம் இல்லை.

*உழைப்பில் பலர் பங்கெடுத்துக்கொண்டால் வேலை எளிதாகிவிடும்.*

ஐந்தெழுத்தினை உபதேசமாகப் பெற்றவர் நிற்கும் முறை, ஓதுமுறை எனும் இரு தன்மையில் அதனைத் தெளிந்துகொண்டு கடைப்பிடிக்க வேண்டும். நிற்கும்முறை என்பது குரு உபதேசம்மூலம் ஐந்தெழுத்தின் உண்மை உணர்ந்து ஓதிவரச் சாதகன் சிவத்துக்கு அடிமைப்பட்டு நிற்பான். இங்கு நிற்றல் என்பது யகாரம் சிகாரத்துக்கும் வகாரத்துக்கும் நடுவில் நிற்றலாகும். "உடையாள் உந்தன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீ இருத்தி அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதனால்" (கோயில் மூத்த திருப்பதிகம்) என்று மாணிக்கவாசகர் இதனைக் கூறுவார். ஓதுமுறை என்பது பாச எழுத்தான நகாரம் நீக்கி சிகாரத்தை முன்னிறுத்தி ஓதுதலாகும். ஓதுகின்றபோது, ஐந்தெழுத்தின் பதங்களின் பொருளுணர்ந்து ஓதவேண்டும். ஓதுமுறை நிற்குமுறை பற்றி,

எவ்வெக்கோட்படுபொருளும் அஞ்செழுத்தின் அடக்கியவற் றியல்பு காட்டி
மெய்வகைஅஞ்சவத்தையிலும் நிற்குமுறை ஓதுமுறை விளங்கத் தேற்றி
அவ்வெழுத்தின் உள்ளீடும் அறிவித்துச் சிவபோகத் தழுத்தி நாயேன்
செய்வினையும் கைக்கொண்ட வேலப்ப தேசிகன் தாள் சென்னி சேர்ப்பாம்.

(காஞ்சிப்புராணம்)

எனக் காஞ்சிப்புராணத்தில் சிவஞான முனிவர் கூறுகிறார். இங்கு சுத்தாவத்தையில் ஐந்தெழுத்தின் அடைவாய் நிற்கும் முறையினை பஞ்சாக்கரப் ப∴றொடை நூலில் பின் வேலப்பதேசிகர் கூறியுள்ளார். அதனையே சிவஞான முனிவருக்கு உபதேசமாகக் கூறினார். அதனையே மேற்படிப் பஞ்சாக்கரப் ப∴றொடையில் கூறியுள்ளார்.

ஐந்தெழுத்தின் பொருளின் அடைவினைச் சாத்திர நூல்கள் தெளிவாகக் கூறுகின்றன. உண்மை விளக்கம்,

சிவன் அருள் ஆவி திரோதம் மலம் ஐந்தும்
அவன் எழுத்தின் ஐந்தின் அடைவாம் - இவனின்று
நம்முதலா வோதில் அருள் நாடாது
சிம்முதலா வோதுநீ சென்று.

(உண்மை விளக்கம்)

என்று கூறுகின்றது. இங்கு நகராதி பஞ்சாக்கரமான தூலபஞ்சாக்கரம் பிறவியில் அமிழ்த்துவதால் சிகராதி பஞ்சாக்கரமான சூக்கும பஞ்சாக்கரத்தை ஓத வேண்டும் என்று கூறுகிறார். மேற்படி பாடலில் பஞ்சாட்சரப் பொருளாக,

சி- சிவம் வ- அருள் ய- உயிர் ந- திரோதாயி ம- மலம்

என்பவற்றைக் கூறியுள்ளார்.

மேற்படி கருத்தினையே,

திருவெழுத்தைந்தில் லான்மாத் திரோதமா சருள்சி வஞ்சூழ்
தரநடு நின்ற தோன்றாந் தன்மையின் றொன்மை யாகி
வருமந மிகுதியாலே வாசியி லாசை யின்றிக்
கருவழிச் சுழலுமாறுங் காதலாற் கோதலாமே.

(சிவப்பிரகாசம்- 91)

*நற்குணம் உள்ள இடத்தில் வணக்கமும் இன்சொல்லும் இருக்கும்.*

என்று சிவப்பிரகாசமும் கூறுகிறது. இதில் சூக்கும பஞ்சாட்சரப் பொருளும் அதனைக் கேட்பதற்குரியாரும் கூறப்பட்டது. இதில் மருள் நிலையாகிய சகல நிலையில் இறைவனது அருட்சக்தியே நகரமாக (திரோதாயி) நின்று மறைத்தலைச் செய்யினும் அருள் நிலையாகிய சுத்தநிலையில் தன்னை வகரமாக (அருட்சக்தி) மாற்றி அருளலைச் செய்யும். ஐந்தெழுத்தினை ஓதும்போது அதனை எழுத்தாகப் பார்க்காது மேற்படி சொல்லடைவாகக் கண்டு ஓதவேண்டும். தூலபஞ்சாக்கரம் ஓதுவதைத் தவிர்த்து சூக்கும பஞ்சாக்கரம் ஓதவேண்டும் என்பதை,

ஆசுறு திரோத மேவா தகலுமா சிவமுன்னாக
ஓசைகௌதனி னம்மே லொழித்தரு ளோங்கு மீள
வாசியையருளு மாய மற்றது பற்றா வுற்றங்
கீசனிலேக மாகுமிதுதிரு வெழுத்தினீடே.

(சிவப்பிரகாசம்- 92)

எனும் செய்யுளில் காணலாம். இங்கு சாதகன் பாச எழுத்தாகிய நகார மகாரங்களை முன்னிறுத்தி ஓதின் அது அவனை உலகியலில் ஆழ்த்திவிடும். எனவே ஞான எழுத்தாகிய சிகாரத்தை முந்நிறுத்தி ஓதின் நகாரமாகிய திரோதாயி வகாரமாகிய அருளாக மாறி யகாரமாகிய உயிரைச் சிகாரமாகிய சிவத்திடம் சேர்க்கும் என்று கூறுகிறார். எனவே நாம் சமயதீட்சையினைப் பெற்று தூல பஞ்சாக்கரம் ஓதினாலும் அது உலகியலில் ஆழ்த்தும் என்பதை உணர்ந்து விரைவிலே விசேட தீக்கை பெற்று சூக்கும பஞ்சாட்சரம் ஓத நம்மைத் தகுதியாக்கிக்கொள்ள வேண்டும்.

உண்மைநிலையில் அநாதி நித்த முத்த சித்துருவாகி நின்ற முதல்வன் உயிர்களுக்கு அருள்செய்ய இலயம், போகம், அதிகாரம் எனும் மூன்று நிலையில் உருவம், அருவுருவம், அருவம் எனும் திருமேனி தாங்கி பஞ்சகிருத்தியம் செய்கிறான். பஞ்சகிருத்தியம் செய்யும் நிலை முதல்வனது தடத்தநிலையாகும். பஞ்சகிருத்தியம் செய்கையில் முதல்வன் ஐந்தெழுத்தினையே தனது அங்கமாகக் கொண்டு செயல்புரிகிறான். இதனை,

ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
நாடுந்திருவடியி லேநகரம் - கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப்பார்.

(உண்மை விளக்கம் 32)

என்று கூறுவதில் காணலாம். இங்கு முதல்வன் கொள்ளும் திருமேனியில் நகாரம் திருவடியாகவும், மகாரம் உதரமாகவும், சிகாரம் தோளாகவும், வகாரம் திருமுகமாகவும், யகாரம் திருமுடியாகவும் நின்று நடனம் புரிகின்றார். நடனத்திலே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் தூல ஐந்தொழிலாற்றுகிறான். இவ்வைந்தொழிலும் ஐந்தெழுத்தின் அடைவாக நிற்பதனை,

சேர்க்கும் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கிலிறைக்கு
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான். (உண்மைவிளக்கம் 33)

*கடினமான உழைப்பு தெய்வ வழிபாட்டுக்குச் சமம்.*

என்று உண்மை விளக்கம் கூறுகிறது. இதில் சிகாரம் துடியாகவும், வகாரம் வீசுகரமாகவும், யகாரம் அபயகரமாகவும், நகாரம் தீ ஏந்திய கரமாகவும், ஊன்றிய திருவடி நகாரமாகவும் உள்ளது என்று கூறி இவை பஞ்சகிருத்தியத்தைக் குறிப்பது என்பதை "தோற்றம் துடியதனில்" எனவரும் செய்யுளில் கூறுவார். எனவே முதல்வன் பஞ்சாக்கரத்தாலே மேனிகொண்டு பஞ்சாக்கரத்தாலே ஐந்தொழில் செய்வதைக் காணலாம்.

முதல்வன் திருநடனம் புரியும் இடங்களாக பரையாகிய அருளும், உயிர்களது அறிவும், ஆகாசமும் சொல்லப்படும். இவ்விடங்களில் திருநடனம் புரிகையிலும் ஐந்தெழுத்தே முதல்வனுக்கு திருமேனியாகும். உயிரிடமாக ஆடுவதை,

**எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே**<br>
**நட்டம் புதல்வா நவிலக்கேள் - சிட்டன்**<br>
**சிவாயநம் வென்னுந் திருவெழுத்தஞ் சாலே**<br>
**அவாயமற நின்றாடு வான்.**

(உண்மைவிளக்கம் 31)

என்றும், அருளினை இடமாகக் கொண்டு திருநடம் பயில்வதைக் கூறுகையில்,

**பரையிடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்**<br>
**உரை உணர்வுக் கெட்ட ஒருவன் - வரைமகள்தான்**<br>
**காணும் படியே கருணைஉருக் கொண்டாடல்**<br>
**பேணுமவர்க்குண்டோ பிறப்பு.**

(உண்மைவிளக்கம் 38)

எனும் பாடலில் அருளாகிய பரையினை இடமாகக் கொண்டு நடம் பயில்வது கூறப்படுகின்றது. இறைவன் கொள்ளும் திருமேனி அருள்மேனி என்று சாத்திரங்கள் கூறுகின்றன. அப்படியானால் அருள்மேனியும் ஐந்தெழுத்து வடிவில் அமைந்து காணப்படுகின்றது என்று கொள்ள வேண்டும்.

ஐந்தெழுத்து எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகின்றது என்பதை உமாபதி சிவாச்சாரியார் கொடிக்கவியில் அழகாகக் கூறுகிறார்.

**அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்து**<br>
**பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்**<br>
**பேசு மெழுத்துடனே பேசா எழுத்தினையுங்**<br>
**கூசாமற் காட்டக் கொடி.**

(கொடிக்கவி)

என்று கூறுகிறார். இதில் அஞ்செழுத்து- சிவாயநம, எட்டெழுத்து- ஓம் ஆம் ஔம் சிவாயநம, ஆறெழுத்து- ஓம் சிவாயநம, நாலெழுத்து- ஓம் சிவாய, பிஞ்செழுத்து- வ, பெருவெழுத்து- சி, பேசுமெழுத்து- வ, பேசா எழுத்து- சி. இப்பாடலில் பஞ்சாக்கரப் பொருளை உச்சரிக்கின்றபோது அவ்வெழுத்துக்களின் அச்சர சொருபத்தை அறிந்து சக்தி, சிவன் ஆகிய அச்சரத்தை யகரமாகிய உயிர் இதயத்திலே வைத்து உச்சரிக்க வகரமாகிய

சக்தி சிகரமாகிய சிவத்திடம் யகரமாகிய உயிரைக் கூட்டிச்சென்று சேர்ப்பிப்பாள் என்கிறார். சிவஞானசித்தியார் சுபக்கத்திற்கு உரை வரைந்தவர்களில் ஞானப்பிரகாசர் "ஒரு கோட்டன் இருசெவியன் மும்மதத்தன்" எனும் விநாயகர் வாழ்த்துப் பாடலுக்கு விநாய கருக்கு தலைக்குக்கீழ் யானையின் உறுப்பு இல்லை என்பதால் மும்மதம் என்பது இச்சை, ஞானம், கிரியை எனும் சக்திகள் எனக் கொள்ளவேண்டும் என்று உரை எழுத அதனை சிவஞான முனிவர் மறுத்து மும்மதம் என்பது, கன்னமதம், கபோலமதம், பீஜமதம் என்பனவே அது எதுபோலுமெனில் பஞ்சாட்சரம் சி, சிவ, சிவயபோன்று தனித்து நின்று பொருள் விளக் கினும் பஞ்சாக்கரம் என்றே (ஐந்தெழுத்து) அழைப்பதுபோன்று என்று விளக்கம் தருகிறார். இதன்மூலம் ஐந்தெழுத்தில் ஒரு எழுத்து தனித்துவரினும் அது பஞ்சாட்சரம் என்றே அழைக்கப்படும் எனும் உண்மையை விளங் கிக் கொள்ளலாம்.

ஐந்தெழுத்தினை ஓதுவாரது பக்கு வத்திற்கு ஏற்ப ஐந்து வகையாகப் பிரித்துக் கூறுவர். சமய தீக்கை பெறுவோருக்கு குரு நமசிவாய எனும் தூல பஞ்சாக்கரத்தை உப தேசிப்பார். இதில் திரோதானமாகிய நகாரம் உயிரை முன்னின்று நடத்துவதால் இதனை ஓதுவார் உலகியலில் அழுந்தி நிற்பர். உலகியலில் அழுந்தி நிற்கும்போதே திரோ தாயி ஆணவத்தை செயற்படுத்தி மறைக்கும் ஆற்றலை நீங்கும். இச்செயல் மறக் கருணை என்று கூறப்படும். இந்நிலை உயிர்க்கு பந்தமே. இந்நிலை மாறவேண்டும். அதனாலே சைவ சித்தாந்தம் முத்திக்கான மார்க்கத்தை படி முறையில் அமைத்துக் கூறுகின்றது.

அடுத்து விசேட தீக்கை பெற் றோருக்கு குரு சிவாயநம எனும் தூல பஞ்சாக்கரத்தை உபதேசமாகக் கூறுவார். இந்நிலை நிற்போருக்கு உலகியலின்பமும் அதன் முடிவில் முத்தியின்பமும் கிடைக்கும் என்று கூறுவர்.

ஞான தீக்கையான நிர்வாண தீக்கை யின்போது முத்தி பஞ்சாக்கரம் என்று சொல் லப்படும் சிவயவசி எனும் அதிசூக்கும பஞ்சாக்கரம் உபதேசமாகக் கிடைக்கப்பெறும்.

அடுத்து சிவ என்பது காரண பஞ்சாக் கரமாகும். இதில் மகாரம் நகாரத்தில் ஒடுங்க நகாரமும் யகாரமும் வகாரத்தில் ஒடுங்க சிகாரமாகிய முதல்வனும் வகாரமாகிய அவ னது ஆற்றலும் தனித்து நிற்கும்.

அடுத்து சி என்பது மகாகாரண பஞ்சாக்கரம் என்று கூறுவர். திருமூலர் இதனை நாயோட்டு மந்திரம் என்று கூறுவர். இவ்வுலகப் பொருட்கள் அனைத்தும் சத்தி யில் ஒடுங்க சிவம் தனித்து நிற்கும் நிலையை சிகாரம் தனித்துக் குறிக்கிறது.

மந்திர உபதேசம் பெறும் சாதகனது பக்குவம் நோக்கி குருவானவர் பஞ்ஷாட்சர மந்திரத்தினை வித்தெழுத்துடனோ அல்லது வித்தெழுத்து இல்லாமலோ உபதேசிப்பார். வித்தெழுத்தோடு உபதேசம் பெறுவது உத் தமம். மந்திர உபதேசத்தின்போது சாதகன் அதி பக்குவம் பெற்றவனாக இருக்கின் குரு மூவகையான தீக்கையினையும் ஒன்றாகச் செய்து மந்திர உபதேசமும் செய்வார். அவை கள் கேட்பவரது பக்குவம் நோக்கியே நிகழும். மேலும் இல்லறத்தான் தீக்கையினை சந்நியாசம் பேணும் குருவிடமோ அல்லது இல்லறம் பேணும் குருவிடமோ பெறலாம்.

ஆனால் சந்நியாசி சந்நியாசம் பேணும் குரு விடமே தீக்கையும் உபதேசமும் பெறவேண்டும்.

திருஞானசம்பந்தர், “துஞ்சலும் துஞ் சலில்லாத போழ்தினும்” எனத் தொடங்கும் பதிகத்தினையும் “காதலாகிக் கசிந்து கண் ணீர் மல்கி” எனத் தொடங்கும் பதிகத்தினை யும், திருநாவுக்கரசர் “சொற்றுணை வேதியன்” எனத் தொடங்கும் பதிகத்தினையும், சுந்தரர் “மற்றுப்பற்றெனக்கின்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்” எனத் தொடங்கும் பதிகத் தினையும் ஐந்தெழுத்துப் பதிகமாக அருளிச் செய்துள்ளனர். திருஞானசம்பந்தர் பதிகத்தில் வேதத்தின் உட்பொருள் ஐந்தெழுத்து என்பதை “ வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே” என்று கூறுவதில் காணலாம். இறைவன் தந்த உடல் எம்மோடு இருந்து எமக்கு வீட்டின்பம் பெறத் துணை செய்வது எமது கரத்தில் இருக்கும் ஐந்து விரலைக் காணும்போது அது எமக்கு ஐந்தெழுத்தினை நினைப்பிக்கும் என்பதை, “அங்கையில் ஐவிரல் அஞ்செழுத்துமே” என்று திருஞானசம்பந்தர் கூறுகிறார். இப் பதிகங்கள் உயிர்க்கு உறுதி பயப்பிப்பது ஐந்தெழுத்து என்பதை நன்கு தெளிவு படுத்துகிறது. இப்பதிகங்களைத் தினமும் ஓதுவோர் வீடுபேறு பெறுதல் திண்ணம்.

உடலோடு நிட்டைகூடிய சீவன்முத்தர் கள் நிட்டை கலைந்து உலகியலுக்கு வரு கின்றபோது உலகப்பற்று தாக்காது இருத்தல் பொருட்டு முத்தி பஞ்சாட்சரத்தை ஓத வேண்டும். இதனை,

**ஊனக்கண் பாசம் உணராப் பதியை**
**ஞானக் கண்ணினில் சிந்தை நாடி**
**உராத்துணைத் தேர்த்து எனப் பாசம் ஒருவத்**
**தண்ணிண லாம் பதி விதி எண்ணும் அஞ்செழுத்தே.**

(சிவஞானபோதம் - 9ஆம் சூத்திரம்)

எனும் சிவஞானபோத சூத்திரமூலம் காணலாம். மல வாசனை நீங்க மந்திரம், பாவனை, கிரியை, எனும் சாதனங்கள் இன்றியமையாதது. மந்திரம் திருவைந்தெழுத்தாகும், பாவனை சிவோகம் பாவனையாகும், கிரியை அகவழிபாட்டுக் கிரியையாகும். ஆன்மா முதல்வனுக்கு அடிமை. முதல்வன் ஆண்டான். முதல்வனை உயிர்கள் ஐந்தெழுத்தின் துணைகொண்டு வழிபட வேண்டும். திருவைந்தெழுத்தாலே அருச்சனை, ஓமம், தியானம் ஆகியவற்றைச் செய்து வழிபாடு செய்ய வேண்டும். அருச்சனை இதயத்திலும், ஓமத்தை உந்தியிலும், தியானத்தை புருவ நடுவிலும் செய்ய வேண்டும். இக்கருத்துக்களை,

**அஞ்செழுத்தால் உள்ளம் அரன்உடைமைகண்டு அரனை**
**அஞ்செழுத்தால் அர்ச்சித்து இதயத்தில் - அஞ்செழுத்தால்**
**குண்டலியில் செய்து ஓமம் கோதண்டம் தியானிக்கில்**
**அண்டனாம் சேடனாம் அங்கு.**

(சிவஞானபோதம்- எடுத்துக்காட்டு வெண்பா- 9ஆம் சூத்திரம்)

எனச் சிவஞானபோதச் சூத்திரம் தெளிவுபடுத்துகின்றது.

*ஏழ்மை என்ற நோய் அகலவேண்டுமானால் உழைப்பு என்ற மருந்தைக் கொடு.*

**நிறைவுரை:**

சைவசித்தாந்தம் கூறும் முடிந்த முடிநிலையாகிய சாயுச்சிய முத்தியினைப் பெற ஞானமே நேர் சாதனமாக இருக்கின்றபோதும் அந்த ஞானத்தை அடையப் பஞ்சாட்சரம் துணை நிற்கின்றது. மந்திரங்களுக்கெல்லாம் தலைமையானதும், சிவசின்னங்களுள்ளே முதன்மையானதும், பிறவிப் பிணி தீர்க்க வல்லதும், தடத்த நிலையில் முதல்வனுக்கு அங்கமாகவும், அவன் ஐந்தொழில் செய்ய துணையாகவும் ஐந்தெழுத்து காணப்படுவது அதனது தனிச்சிறப்பாகும். சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களும் இவ்வைந்தெழுத்தின் உள்ளடக்கம் என்பதை எழுத்துக்களுக்குக் கூறும் பொருள்விளக்கத்தின் மூலம் தெளிந்து கொள்ளலாம். எனவே ஐந்தெழுத்து மந்திரத்தினை தக்க குருவிடம் முறைப்படிகேட்டு அதனை நியமமாக ஓதிவரின் பிறவிப்பிணி நீங்கி திருவடிப் பேற்றினை அடைதல் திண்ணமாகும்.

*நன்றி: மெய்ப்பொருள்.*

## வல்லிபுரத்து மாயவன்

வல்லிபுரத்து ஆட்சி செய்யும் மாயவனே - எமை
வழிநடத்து வழிநடத்து தூயவனே.

அல்லல்கள் அறுத்தெமைக் காத்திடுவாய்
அனுதினமும் எல்லா நலன்களும் நீ சுரந்திடுவாய்
பொல்லா வினைகளை நீ அறுத்திடுவாய்
பொக்கிசங்கள் எல்லாமே தந்திடுவாய்.

சங்கு சக்கரம் கைக் கொண்டவனே
சக்தியெல்லாம் தந்திடுவாய் எங்களுக்கே
சிங்காரக் கோலமாய் திகழ்பவனே
சிறப்பெல்லாம் சேர்த்திடுவாய் எங்களுக்கே.

இதயத்தில் வீற்றிருக்கும் தெய்வம் நீயே
இயங்குசக்தி தருபவனும் நீயே நீயே
அபயம் அளித்திடும் தெய்வம் நீயே
அன்பர்க்கெல்லாம் அருள் செய்வாய் நீயே நீயே.

-கற்கரைக் கற்பகன்-

(தொடர்ச்சி...

# பல்வேறு நாமங்கள் துலங்கும் யாழ்ப்பாணத்து விநாயகர் ஆலயங்கள்

– **திரு சண்முகலிங்கம் சஜீலன்** அவர்கள் –

## தமிழரசர்களின் பெயர்களால் அறியப்படும் விநாயகராலயங்கள்

ஈழத்தில் அரசாட்சி தோன்றிய தொடக்க காலத்திலிருந்து அதாவது தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்த காலத்திலிருந்து இந்து சமயமும் அதனோடிணைந்த கடவுள் வழிபாடுகளும் மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. மன்னர்கள் இறைவழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்ததுடன் ஆலயங்களை உருவாக்குவதிலும் அதனை தமிழர்களின் கலாசாரப் பண்பாட்டின் இருப்பிடமாகவும், மையமாகவும் விளங்கச் செய்வதிலும் அதிக கரிசனை கொண்டிருந்தார்கள். குளக்கோட்டு மன்னன் திருக்கோணேஸ்வரத்தில் பல திருப்பணி வேலைகளைச் செய்தமையையும் சோழ அரசிளங்குமாரி மாருதப்புரவீகவல்லி ஈழத்தில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலையும் அதற்குப் பக்கத்தில் ஏழு விநாயகராலயங்களையும் ஸ்தாபித்து திருப்பணி செய்ததுடன் வேறு சைவாலயங்கள் பலவற்றின் தோற்றத்திற்கும் உயர்வுக்கும் வழிவகுத்துள்ளமையையும் ஈழத்து வரலாற்று இலக்கியங்களுக்கூடாகவும் கர்ணபரம்பரைக் கதைகளுக்கூடாகவும் அறிய முடிகிறது.

## மாருதப்புரவீகவல்லியால் ஸ்தாபிக்கப்பட்ட ஏழு விநாயகர் ஆலயங்கள்:

கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயம், பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயம், அளவெட்டி அளகொல்லை முத்துவிநாயகராலயம், அளவெட்டி கும்பழாவளை சந்திரசேகர விநாயகர் ஆலயம், அளவெட்டி பெருமாக்கடவை சித்திவிநாயகராலயம், சண்டிலிப்பாய் ஆலங்குழாய் முருகமூர்த்தி ஆலயம் ((முன்னர் பிள்ளையார் ஆலயமாக இருந்தது), சண்டிலிப்பாய் கல்வளை பரமானந்தப் பிள்ளையார் ஆலயம்.

## மாருதப்புரவீகவல்லியால் திருப்பணி செய்யப்பட்ட விநாயகராலயங்கள்:

இளவாலை ஆனைவிழுந்தான் விக்ன விநாயகர் ஆலயம், ஆனைக்கோட்டை களப்பிரான் ஆதி விநாயகர் ஆலயம்.

மேலும் ஆரியச்சக்கரவர்த்திகளான தமிழரசர்கள் ஆட்சிக்காலத்தில் கி.பி 1236 கி.பி 1619 வரையான காலப்பகுதியில் பல அரசர்களும் ஆலயங்களைக் கட்டுவித்துள்ளதுடன் அவ்வாலயத்தில் திருப்பணிகளையும் முன்னின்று நிறைவேற்றியுள்ளனர். இக்காலத்தில் பரராஜசேகர மன்னன் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலையும் செகராஜசேகர மன்னன் இணுவில் செகராஜசேகரப் பிள்ளையார் கோவிலையும் கட்டியுள்ளனர். இதேபோல் இக்காலத்தில் பரராஜசேகர மன்னனின் அமைச்சரவையில் முதல் மந்திரியாகவிருந்த அரசகேசரி

*தூய மனச்சான்று உடையவர்கள்தான் நல்வாழ்வு பெறுவர்.*

நீர்வேலியில் அரசகேசரிப் பிள்ளையார் கோவிலை ஸ்தாபித்துள்ளார். நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த அரசர்கள் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைச்சுற்றி தெற்கே நல்லூர் கைலாசப் பிள்ளையார் கோவிலையும், கிழக்கே நாயன்மார்கட்டு வெயிலுகந்த விநாயகர் கோவிலையும், வடமேற்கே திருநெல்வேலி தலங்காவற்பிள்ளையார் கோவிலையும் ஸ்தாபித்தார்கள். எனவும் வரலாறு கூறுகிறது. இதேபோல் சோழ மன்னர்களின் அரசாட்சிக் காலத்தில் படைத் தளபதிகளாகவும் பிரதானிகளாகவும் விளங்கிய சிற்றரசர்கள் யாழ்ப்பாணத்தில் பல விநாயகராலயங்களைக் கட்டியுள்ளனர். சோழ அரசில் தளபதியாகவும், பிரதானியாகவும் விளங்கிய கருணாகரத் தொண்டைமான் உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோவிலையும், வரராசசிங்கன் எனும் பிரதானி தையிட்டி கணையவிற் பிள்ளையார் கோவிலையும், பெரிய நாட்டுத்தேவன் எனும் பிரதானி மயிலிட்டி பெரியநாட்டுத்தேவன்துறை பிள்ளையார் கோவிலையும் கட்டியுள்ளனர்.

## ஆலயத் தலவிருட்சங்களின் பெயரால் அறியப்படும் விநாயகராலயங்கள்:

ஆதிகாலத்திலிருந்து விருட்சங்கள் (மரம்) தமிழர்களின் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவமுடையதொன்றாகவும் கலாசாரப் பண்பாட்டின் பிரதான அடையாளமாகவும் விளங்கி வருகின்றது. பொதுவாக யாழ்ப்பாணப் பிரதேசத்தில் விருட்சங்களை அடிப்படையாக வைத்து அவற்றிற்கு அருகாமையில் இறை மூர்த்தங்களை ஸ்தாபித்து வழிபடும் மரபும் அவ் விருட்சங்களை புனிதமாகப் பேணிப் பாதுகாத்து வரும் மரபும் காலாதி காலமாகப் பின்பற்றப்பட்டு வருவதை அவதானிக்கலாம். இவ்வாறான மரபு விநாயகர் வழிபாட்டிலும் மிகப் பக்தி சிரத்தையும் பின்பற்றப்படுகிறது. இன்று பல விநாயகர் ஆலயங்களிலும் அவற்றைச் சூழ வளர்ந்திருக்கும் மரங்களும், மூலமூர்த்திக்கு மிக நெருக்கமாக வளர்ந்திருக்கும் விருட்சங்களும் மிகவும் புனிதமாகக் கருதப்பட்டு தலவிருட்சங்களாகப் போற்றி வணங்கப்படுவதை அவதானிக்க முடியும். பொதுவாக விநாயகராலயங்களில் பாரிய விருட்சங்களான ஆல், அரசு, வேம்பு, மருது, மா, அத்தி, இத்தி, புளி, நாவல் ஆகியவையும் அப்பிரதேசத்திற்கேயுரியதும் அப் பிரதேசத்தில் அதிகமாகக் காணப்படுபவையுமான விருட்சங்களும் தலவிருட்சங்களாக உள்ளன. இவற்றுடன் கொன்றை, பனை, பூவரசு, இலந்தை, வில்வம், எருக்கு, புன்னை, மகிழ், வன்னி, ஆத்தி ஆகியனவும் தலவிருட்சங்களாகக் காணப்படுகின்றன. இவ்வாறாகத் தலவிருட்சங்களைக் கொண்டமைந்த விநாயகராலயங்கள் பலவும் அத் தலவிருட்சங்களின் பெயரால் அழைக்கப் படுகின்றன. மேலும் இத் தலவிருட்சங்கள் பலவும் இயற்கை வைத்தியத்தில் பிரதான மூலிகைகளாகவும் விளங்குவது குறிப்பிடத்தக்கது. தலவிருட்சங்களின் பெயரால் அறியப்படும் விநாயகராலயங்களாவன,

### அரசு:

மானிப்பாய் கட்டுடை அரசடி சித்திவிநாயகராலயம், கோண்டாவில் ஆசிமடம் அரசடி சித்திவிநாயகராலயம், யாழ்ப்பாணம் மணிக்கூட்டுவீதி அரசடிப் பிள்ளையார் ஆலயம், நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் ஆலயம், அல்வாய் குருக்கட்டு அரசடி விநாயகர் ஆலயம்.

*குழந்தைகளைக் குறை சொல்வோரைவிட அவர்களுக்கு வழிகாட்டுவோரே அதிகம் தேவை.*

**ஆல்:**

பருத்தித்துறை புலோலி ஆலடிப் பிள்ளையார் ஆலயம், மிருசுவில் ஆலடிப் பிள்ளையார் ஆலயம், கச்சாய் ஆலடிப்பிள்ளையார் ஆலயம், அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் ஆலயம்.

**வேம்பு:**

யாழ்ப்பாணம் கடைத்தெரு வேம்படிப் பிள்ளையார் ஆலயம்.

**மருது:**

மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் ஆலயம், தெல்லிப்பழை வருத்தலைவிளான் மருதடிப் பிள்ளையார் ஆலயம், காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயம், நுணாவில் விளைவேலி மருதடிப் பிள்ளையார் ஆலயம், மட்டுவில் மருதடிப்பிள்ளையார் ஆலயம்.

**மா:**

மீசாலை சப்பச்சி மாவடிப்பிள்ளையார் ஆலயம், மீசாலை கிழக்கு திருநீலகண்ட வெள்ளை மாவடிப்பிள்ளையார் ஆலயம், கல்வயல் சித்தன் மாவடிப்பிள்ளையார் ஆலயம், மிருசுவில் குருக்கள் மாவடிப்பிள்ளையார் ஆலயம்.

**அத்தி:**

ஏழாலை ஆத்தியடி விநாயகர் ஆலயம்

**இத்தி:**

சங்கத்தானை இத்தியடி விநாயகர் ஆலயம்.

**பூவரசு:**

வரணி இடைக்குறிச்சி பூவரசடிப் பிள்ளையார் ஆலயம்.

**இலந்தை:**

வேலணை இலந்தைவனம் சித்திவிநாயகர் ஆலயம்.

**நாவல்:**

சாவகச்சேரி கோயில் குடியிருப்பு நாவலடிப்பிள்ளையார் ஆலயம்.

**இலுப்பை:**

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் ஆலயம், கோப்பாய் வடக்கு இலுப்பையடிப் பிள்ளையார் ஆலயம்.

**ஆத்தி:**

பருத்தித்துறை புலோலி அத்தியடிப் பிள்ளையார் ஆலயம்.

**வெள்ளருக்கு:**

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலயம்.

*மனிதனைப் புரிந்துகொண்டால் அவனே ஒரு புத்தகம் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.*

## புனித நீர்நிலைகளை நாமங்களாகக் கொண்ட விநாயகராலயங்கள்

ஆலயங்களுக்கு புனித நீர்நிலைகள் (தீர்த்தம்) இன்றியமையாதவையாக விளங்கு கின்றன. அவை ஆலயத்திற்குரிய நீர்த்தேவையைப் பூர்த்தி செய்யும் நீர் மூலங்களாகவும் உள்ளன. யாழ்ப்பாணத்தில் நீர்நிலைகளுக்கருகில் ஆலயங்கள் அல்லது ஆலயங்களுக்கருகில் நீர்நிலைகள் அமைந்திருப்பதைக் காணலாம். இந் நீர்நிலைகள் மகோற்சவ காலங்களில் அல்லது விசேட உற்சவ காலங்களில் சுவாமி தீர்த்தமாடும் இடங்களாக அமைவதும் குறிப்பிடத் தக்கது. கீரிமலை (கண்டகி தீர்த்தம்), மாதகல் சம்பில்துறை, வல்வெட்டித்துறை, ஊறணி, பருத்தித்துறை, கற்கோவளம், யாழ்ப்பாணம் வில்லூன்றி, சாட்டி வெள்ளைக்கடற்கரை, தொண்டைமானாறு ஆற்றங்கரை போன்ற பிரதேசங்கள் புனித தீர்த்தக்கரைகளாகப் போற்றப் படுகின்றன. ஆலயங்களுக்கருகில் அமைந்துள்ள குளம், கிணறு, கேணி போன்றவையும் புனித தீர்த்த நிலைகளாகப் போற்றப்படுகின்றன. இவ்வாறே யாழ்ப்பாணத்தில் விநாயகராலயங்கள் பல அவற்றுக்கருகில் அமைந்துள்ள புனித தீர்த்த நீர்நிலைகளை அடிப்படையாக வைத்து வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு வருகிறது.

### தீர்த்தக்கரை:

கீரிமலை தீர்த்தக்கரைப் பிள்ளையார் கோவில், யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயம்.

### குளம்:

மீசாலை தட்டாங்குளம் நீலகண்டப்பிள்ளையார் ஆலயம், நல்லூர் பண்டாரக்குளம் பிள்ளையார் ஆலயம், எழுதுமட்டுவாழ் மருதங்குள விநாயகர் ஆலயம், கொடிகாமம் குளக்கட்டுப் பிள்ளையார் ஆலயம், அரியாலை கொப்பர்குளம் பிள்ளையார் கோயில், அராலி அகாயக்குளம் பிள்ளையார் கோயில்.

### கிணறு:

அளவெட்டி கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடிப்பிள்ளையார் ஆலயம், திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயம், பொலிகண்டி உப்புக்கிணற்றடி (இருப்பைமூலை) சித்திவிநாயகர் ஆலயம், அரியாலை கிழக்கு கொட்டுக்கிணற்றடி விநாயகர் ஆலயம்.

## ஆலயம் அமைந்திருக்கும் இடத்தின் பெயரால் அறியப்படும் விநாயகராலயங்கள்

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சில விநாயகர் ஆலயங்கள் அவை அமைந்துள்ள இடத்தின் பெயரால் அறியப்படுபவை. அதாவது அவ்வாலயம் அமைந்துள்ள காணி, நிலம் ஆகியவற்றின் பெயரில் அழைக்கப்படும். இக்காணி அல்லது நிலம் அவ்வாலய ஸ்தாபகர்களாலோ, ஆலய தர்மகர்த்தாக்கள், ஆதீனகர்த்தாக்கள் ஆகியோராலோ அல்லது அவ்வூர் மக்களாலோ ஆலயத்தின் வளர்ச்சி, மேம்பாடு கருதி தர்மசாதனமாக அல்லது

அறுதியாக ஆலயத்திற்கு வழங்கப்பட்டவையாகும். இவை பெரும்பாலும் குறிச்சி, கலட்டி, தோட்டம், வளவு, புலம் என அழைக்கப்படும். இவ்வாலயங்களாவன:

மல்லாகம் நீலியம்பனைப் பிள்ளையார் ஆலயம், புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலயம், தம்பசிட்டி மாயக்கைப் பிள்ளையார் ஆலயம், கரம்பான் வீரகத்தி விநாயகர் ஆலயம், நெடுந்தீவு நடுக்குறிச்சிப் பிள்ளையார் கோயில், வல்வெட்டித்துறை சமரபாகு தேவன்குறிச்சி கற்பகப் பிள்ளையார் கோயில், வட்டுக்கோட்டை பிரமணாட்சி தோட்டம் கற்பகப் பிள்ளையார் ஆலயம், கரவெட்டி கிழவிதோட்டம் விநாயகர் ஆலயம், புங்குடுதீவு கலட்டி வரசித்திவிநாயகர் ஆலயம், கரணவாய் துர்க்கப்புலம் கலட்டிப்பிள்ளையார் கோயில், தொல்புரம் துரையன் வளவுப்பிள்ளையார் ஆலயம், பருத்தித்துறை கனகராவளவுப் பிள்ளையார் கோயில், சாவகச்சேரி நுணாவில் கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகர் ஆலயம், கரவெட்டி கிராய்ப்பிள்ளையார் கோயில், புங்குடுதீவு அரியநாயகன்புலம் வீரகத்தி விநாயகர் ஆலயம், புங்குடுதீவு பெருங்காடு மூத்தநயினார்புலம் வரசித்தி விநாயகர் ஆலயம், விடத்தற்பளை சம்பாவெளிப் பிள்ளையார் ஆலயம், புங்குடுதீவு மடத்து வெளிப்பிள்ளையார் ஆலயம், உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார் ஆலயம்.

மேலும் இற்றைக்கு இருநூறு, முந்நூறு வருடங்களுக்கு முன் பாரத தேசத்தின் காசி, சிதம்பரம், வேதாரணியம், ராமேஸ்வரம் ஆகிய புனித தலங்களுக்கு தலயாத்திரை மேற்கொண்ட விநாயக அடியார்கள் ஊர் திரும்பும்போது தம்முடன் விநாயகர் விக்கிரகத்தை அல்லது திருவுருவை எடுத்து வந்து தமது ஊரில் ஸ்தாபித்து வழிபட்டனர். அவ்வாறு வழி படப்பட்ட விநாயகர் ஆலயங்கள் அப்புனிதத் தலங்களின் பெயரில் அழைக்கப்படுகின்றன.

**காசி:**

தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலயம்.

**வேதாரணியம் (திருவெண்காடு):**

கல்வயல் வேதவனப் பிள்ளையார் ஆலயம், மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயம், தாவடி வேத அம்பலவாண விநாயகர் ஆலயம்.

**சிதம்பரம்:**

துன்னாலை சிதம்பரவிநாயகர் (புளியங்கியான்) ஆலயம் சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயம்.

மானிப்பாய் புக்கைதின்னிப் பிள்ளையார் ஆலயம், வேலணை தவிடுதின்னிப் பிள்ளையார் ஆலயம், மூளாய் பிட்டுத்தின்னி ஆலடிப் பிள்ளையார் ஆலயம் என்பன சற்று வித்தியாசமான பெயரில் அமைந்த விநாயகர் ஆலயங்களாகும். இவை காரணப் பெயராகவே உள்ளது. மானிப்பாய் புக்கைதின்னிப் பிள்ளையார் ஆலயம் முன்பு மடாலயமாக இருந்தது. இங்கு ஏராளமான பக்தர்கள் பொங்கிப் படைப்பது வழக்கம். இப் பொங்கலை பிள்ளையார் விருப்புடன்

*ஆயிரம் வீண் வார்த்தைகளைவிட பயனுள்ள இதமான ஒரு நல்ல வார்த்தை சிறந்தது.*

ஏற்று உண்டு மகிழ்வார் என்ற நம்பிக்கை அடியார்களிடம் ஏற்பட்டதால் புக்கைதின்னிப் பிள்ளையார் என அன்பாக அழைத்தனர்.

வேலணை தவிடுதின்னிப் பிள்ளையார் ஆலயத்தில் அப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ள நிலம் "தவிடுதின்னி" என அழைக்கப்படுகிறது. இதனால் இப் பிள்ளையார் தவிடுதின்னிப் பிள்ளையார் என அழைக்கப்படுகிறார்.

மூளாயில் பிட்டுத்தின்னி ஆலடிப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ள பகுதி முற்காலத்தில் மக்கள் கால்நடையாகப் பிரயாணம் செய்யும் பிரதான வீதியாகக் காணப்படுவதால் மக்கள் இவ்விடத்தில் தங்கி தாம் கொண்டுவரும் உணவை (பிட்டு) உண்டு நீர் அருந்தி களைப்பாறிச் செல்வர். இதனால் இவ்விடத்தில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்திற்கு பிட்டுத்தின்னி ஆலடிப்பிள்ளையார் என பெயர் வந்தது. இன்றும் இவ்விடத்தில் கேணி, சுமைதாங்கி, ஆவுரஞ்சிக்கல் என்பன இருப்பதை அவதானிக்கலாம்.

மேலும் என்றுமுள்ள பழைமையான பரம்பொருளாக விநாயகர் இருப்பதாலும், பழங்களை விரும்பியுண்ணும் தெய்வமாக விளங்குவதாலும் மல்லாகத்தில் பழம் பிள்ளையார் எனவும் மிக மேம்பாடுடைய உத்தமமான தெய்வமாக விளங்குபவர் என்பதால் ஆனைக்கோட்டையில் உத்துங்க விநாயகர் எனவும் அழைக்கப்படுகிறார். மழை பெய்யும் நேரத்தில் நெல் அறுவடைக்காக வெய்யிலை வழங்கியதால் நாயன்மார்கட்டில் வெய்யிலுகந்த விநாயகர் எனவும் கொக்குவிலில் சூடுகந்த விநாயகர் எனவும் அழைக்கப்படுகிறார்.

வடமராட்சியில் துன்னாலை, கரவெட்டி, புலோலி தெற்கு ஆகிய மூன்று அயற் கிராமங்களில் கோயிற்கடவை சித்தி விநாயகராலயம், வெலிக்கம் தோட்டப் பிள்ளையார் ஆலயம், குடவத்தைப் பிள்ளையார் ஆலயம், வல்லியானந்தப் பிள்ளையார் ஆலயம், கொட்டிக்குளிப்பான் பிள்ளையார் ஆலயம், குருக்கட்டுப் பிள்ளையார் ஆலயம், புளியங்கியான் பிள்ளையார் ஆலயம், நுணுவில் குளக்கட்டுப் பிள்ளையார் ஆலயம், முறாவிற் பிள்ளையார் ஆலயம் என ஒன்பது விநாயகர் ஆலயங்கள் அமைந்துள்ளன. இவை மிகவும் பிரசித்தி பெற்றவையாகவும் தொன்மையானவையாகவும் இருப்பதுடன் அற்புதங்கள் பலவும் நிறைந்த ஆலயங்கள் ஆகும். இவ்வாலயங்கள் இப்பிரதேச மக்களின் கலாசாரப் பண்பாட்டில் மிக முக்கியத்துவம் உடையவையாக விளங்குகின்றன.

இவ்வாறாக ஏக பரம்பொருளாக விளங்கும் விநாயகரும் அவரது உறைவிடமான ஆலயங்களும் பல்வேறு நாமங்களில் வழங்கப்பட்டு வருவது யாழ்ப்பாணத்திற்கேயுரிய தனிச் சிறப்புக்களிலொன்றெனலாம்.

(முற்றும்)

**எதுவும் இல்லை**

"குருவே, இன்று என்ன செய்யப்போகிறீர்கள்?" என்று கேட்டார் மாணவர். "எதுவும் இல்லை" என்றார் குரு.

"ஆனால், நேற்றும் நீங்கள் அதைத்தான் செய்தீர்கள்" என்றார் மாணவர். "ஆமாம், அதை நான் முழுமையாகச் செய்து முடிக்கவில்லை" என்றார் குரு.

*பண்புடனும் மரியாதையுடனும் இருப்பவன் உலகில் எதையும் சாதித்து விடுவான்.*

# காவலனாக வந்து காத்தருள வேண்டுமையா!

– **திரு கி. குலசேகரன்** அவர்கள் –

கலை, கலாசாரம், பண்பைக்
கட்டிக் காத்தே வளர்க்கும்,
நிலையிலே உயர்ந்து, அன்பு
நெறியிலே வாழ்ந்த நம்மோர்,
நிலை தடுமாறி, இன்று,
நிற்கதிக் குள்ளாகி நிற்கும்
நிலையினை மாற்ற இங்கு
நீ வரவேண்டும் வேலா!

போதைக்கு அடிமையாகிப்
பொழுதெல்லாம் எமது மண்ணில்
வேதனையை வளர்க்கும்
வீணர்களின் கொடிய,
பாதகச் செயல்கள் தம்மை
பார்த்துமே இருக்கலாமோ?
சோதனை மிகுந்த வாழ்வில்
சுகம் பெற வழி செய்வாயோ?

வன் புணர்வாலே, நாட்டில்
வளர்கின்ற சிறுவர்தம்மைக்,
கொன்றிடும் கொடுமைகண்டு
கொதிக்கு தெம் மனங்கள் ஐயா!
என்றுமில்லாத வாறு,
எம் மண்ணில் நடக்கும் இந்த
துன்பியல் தொடராவண்ணம்
துணை வரவேண்டும் ஐயா!

*கர்வம் கொண்டிருப்பவனைக் கண்டு வெற்றித் திருமகள் விலகி விடுவாள்.*

வழியிலே செல்வதற்கும்
"வழிப்பயம்" தடுக்குதையா!
வாள் வெட்டுக் காரராலே,
வரும் துயர் பெருகுதையா!
விழிகளில் கண்ணீர் வெள்ளம்
வழிகின்ற நிலையைப் பாராய்!
அழிவினிலிருந்தே காக்க
ஆண்டவா! வருகை தாராய்!

கொள்ளையும், கொலை, களவும்,
கொடுமையும், நிறையும் நாட்டிவ்
வள்ளலே! எமது வாழ்வு
வளம்பெறல் ஏது? எங்கள்
உள்ளக் குமுறல்கண்டு,
உதவிட வாராய்! துன்ப
வெள்ளத்தில் மாளும் எம்மை
விரைந்துமே காக்க வாராய்!

கற்றவராய் இருந்தும்,
காசுக்காய், பதவிகட்காய்
மற்றவர்க் கடிமையாகும்,
மன நிலை கொண்டோராலே,
பற்பலவும் இழந்து
பாரெங்கும் "அகதி" யாக
நிற்கின்ற நிலையை மாற்ற
நீ வரவேண்டுமையா!

தேவர்கள் குறைகள் தீர்த்த
தேவனே! தினமுமிங்கு
பாவங்கள் புரிவோராலே
படுந்துயர் போதுமையா!
சாவா? வாழ்வா? என்று
சஞ்சலம் அடையும் எம்மை
காவலனாக வந்தே
காத்தருள வேண்டுமையா!

துயரம் வந்தால் அதைத் தொடர்ந்து வெற்றி வருமென எதிர்பார்ப்பவன் புத்திசாலி.

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| திருமதி நவமணி திருநாவுக்கரசு | பண்டத்தரிப்பு | |
| (சமூகப்பணிக்காகவும், கொரோனா நிவாரணப்பணிக்காகவும்) | | 150000. 00 |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| இ. மனோகரன், ம. செந்தில்ராஜ், ம. குமரராஜ் | கொம்மந்தறை (கனடா) | 6000. 00 |
| P. கவிதா | வல்வெட்டி (U.K) | 15000. 00 |
| பொ. சூரியகுமாரன் | மல்லாகம் | 15000. 00 |
| பா. அன்னஞானம் | சுழிபுரம் | 1000. 00 |
| ஜெ. இராஜகோபால் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| கோகுலன் நிருஷா | இணுவில் | 2000. 00 |
| முரளிராஜ் பிறேமராணி | இணுவில் | 5000. 00 |
| S. தனுஷ் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| Dr T. கோணேஸ்வரன் | வவுனியா | 5000. 00 |
| ச. கவிசேஷன் | ஆத்தியடி பருத்தித்துறை (கல்விப்பணிக்காக) | 10000. 00 |
| ஜெ. ரிஷிகேஷன் | நெல்லியடி | 2மூடை அரிசி |
| நாகநாதர் கந்தசாமி | தெல்லிப்பழை | 500. 00 |
| திரு சிவகுரு குடும்பம் | ஜேர்மன் | 10000. 00 |
| சி. சந்திரகாந்தா | அச்சுவேலி | 10000. 00 |
| ர. யதுஷிகன் | கொடிகாமம் | 5000. 00 |
| நா. இளஞ்செழியன் | கொக்குவில் | 5000. 00 |
| S. ராகுலன் | கொழும்பு | 25000. 00 |
| M. சுப்பிரமணியம் | அச்சுவேலி | 1000. 00 |
| கி. லக்ஷாயினி | சுழிபுரம் | 1000. 00 |
| K. துஷாரா | நீர்வேலி | 500. 00 |
| திரு தர்மேந்திரா குடும்பம் | லண்டன் | 1000. 00 |
| சச்சிதானந்தம் விமலாதேவி | உடுப்பிட்டி | 1000. 00 |
| சி. சண்முகலிங்கம் | கனடா | 5000. 00 |
| சாந்தரூபன் கிருஜா | பருத்தித்துறை | 5000. 00 |
| சி. வினோ | சுன்னாகம் மரக்கறி | 1மூடை அரிசி |
| க. மயூரன் | சுதுமலை | 2000. 00 |

*துன்பத்தைக் கண்டு இரங்குவது மனித இயல்பு, அதை நீக்குவது தெய்வீகப் பண்பு.*

| | | |
|---|---|---|
| M. கஸ்மீரா<br>M. சமுருந்<br>M. மயூரதன் | வவுனியா | 5000. 00 |
| திரு சிதம்பரநாதன் | புத்தூர் | 3500. 00 |
| மணியம் இன்பெக்ஸ் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| கனகசுந்தரம் லக்ஷ்மிப்பிள்ளை | கனடா | 5000. 00 |
| S. சுந்தரலிங்கம் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| மாலினி சிவசோதி | கொழும்பு | 5000. 00 |
| க. சிவகுமார் | இளவாலை | 1000. 00 |
| ந. சிவராசா | கோண்டாவில் | 1000. 00 |
| ந. ராஜ்குகன்மூலம் சு. இரத்தினவடிவேல் நினைவாக | கொழும்பு | 5000. 00 |
| க. சிவயோகம் | உடுவில் மரக்கறி | 1மூடை அரிசி |
| ஜெ. சங்கீதா | நவாலி | 2000. 00 |
| ஸ்ரீ. அபிலஷா | பிரான்ஸ் | 10000. 00 |
| ஜெனிதா, ருக்மணிதேவி | நெல்லியடி | 5000. 00 |
| க. பிரணவன் | வெள்ளவத்தை | 5000. 00 |
| தே. பீமா | நவிண்டில் | 1000. 00 |
| ந. கிருஸ்ணராஜா | மானிப்பாய் | 5000. 00 |
| கோ. ராகுலன் | சுன்னாகம் | 1000. 00 |
| கௌதமன் அகலிகா | மல்லாகம் | 3000. 00 |
| செ. வாகீசன் | இணுவில் | 5000. 00 |
| பா. கபில்ரமணன் | இணுவில் | 1000. 00 |
| சி. பாலமயூரன் | லண்டன் | 10000. 00 |
| திருமதி கஜானுதன் | கொக்குவில் | 5000. 00 |
| திருமதி R. பொன்னுராசா வட்டுக்கோட்டை | (வலது குறைந்தோருக்காக) | 6000. 00 |
| சி. சிவலோகசுந்தரம் | இடைக்காடு | 5000. 00 |
| செ. கமலாதேவி (முதியோர் இல்லம்) | சுழிபுரம் | 1000. 00 |
| S. சஷ்டிபிரியா | கொழும்பு | 5000. 00 |
| திருமதி நல்லம்மாமூலம் மு. வடிவேலு நினைவாக | லண்டன் | 5000. 00 |
| K. தனுஷன் | சங்கானை | 20k அரிசி |
| S. ஓவியா | கொம்மந்தறை | 1000. 00 |
| சு. சர்மிலன் | லண்டன் | 10000. 00 |
| சு. அபிசன் | லண்டன் | 10000. 00 |
| செ. சுந்தரராஜா | ஆவரங்கால் | 5000. 00 |
| க. நிதின் | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| ஆ. ஆனந்தராஜன் குடும்பம் | தம்பசிட்டி | 20000. 00 |

(தொடரும்...

*தீர்மானிக்க மனம், வழிவகுக்க அறிவு, செய்து முடிக்க கை.*

# பக்தி வலையில் பெண்மணிகள்

– **திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு** அவர்கள் –

பெண் - பெண் என்றால் கிணற்றுள் போடப்பட்ட கல்போல் பேசாமல் அடங்கிக் கிடப்பாள் என்று எண்ணிவிடக்கூடாது. பெண் என்பவள் அமைதியாகத் தோன்றும், ஆனால் ஆற்றல்மிக்க, உணர்ச்சிகளின் குவியல் என்று கூறலாம். பெண் நினைத்தால் எதையும் சாதித்துவிடுவாள். ஆனால், நினைப்பதை நியாயமாக நினைத்தால் சரிதான். இல்லையா!

அடுக்களையிலிருந்து ஆத்மீகத்தின் உச்சிவரை பெண் காணப்படுகின்றாள். அதிகம் போவானேன். இந்து மதத்தில் அம்மை அப்பனாக எம்பெருமானின் அர்த்தநாரீஸ்வர வடிவத்தில் சரி பாதியாக இருக்கும் சக்தி யார்? பெண்தானே. சிவனுக்கோர் உமையாள், தேவேந்திரனுக்கோர் இந்திராணி, பிரம்மனுக்கோர் சரஸ்வதி, காஞ்சியில் காமாட்சி, காசியில் விசாலாட்சி, மதுரையில் மீனாட்சி என பெண்ணின் பெருமை வீறுகொண்டுள்ளது.

## பெண்களும் ஆத்மீகமும்

கிறிஸ்தவர்களுக்கு ஓர் அன்னை மேரி என நோக்கின் இந்துமத ஆத்மீகத் துறையில் அன்றிலிருந்து இன்றுவரை பெண்களின் பங்கு அளப்பரியது. உபநிடத காலத்தில் மைத்ரேயிலிருந்து ஆரம்பித்து, காரைக்கால் அம்மையார், பாண்டிமாதேவியார், மங்கையர்க்கரசியார், மற்றும் மெய்யடியார்களான நாயன்மார்களின் பத்தினிமார்களாக அமைந்த பெண்பாலார், இராமகிருஷ்ண பரமஹம்சருக்கு அமைந்த அன்னை சாரதா தேவியார் எனத் தொடர்ந்து இன்று எமது நாட்டின் வடக்கே தெல்லிப்பழையில் சமய வாழ்வே தனது வாழ்வென, சமயத்திற்கே தன்னை அர்ப்பணித்து அங்குள்ள மக்களை அறநெறியில் அணைத்துச் சென்ற துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அம்மையார் வரை பெண் ஆன்மீகவாதிகளாகக் குறிப்பிடலாம். பாண்டிமாதேவியின் சமய ஈடுபாடு பாண்டியனை வெப்பு நோயிலிருந்து காப்பாற்றியது. ஞானக் குழந்தையாம், ஞானசம்பந்தரை "மந்திரமாவது நீறு" எனப் பாடவைத்து, சமய இலக்கியத்துக்கு ஒரு திருநீற்றுப் பதிகத்தைத் தந்தது. பாண்டிய மன்னனையும், மக்களையும் மீண்டும் சைவ சமயத்தின் புனித எல்லைக்குள் நுழைய வைத்தது. இஃது பாண்டிமாதேவியின் ஆன்மீக ஈடுபாட்டுக்கோர் எடுத்துக்காட்டு.

இனி, பெரியபுராணத்துக்கு வருவோம். சிறுத்தொண்டரின் பக்தியை உலகத்தோர்க்கு எடுத்துக்காட்ட விழைகின்றார் ஈசன். சிவனடியாராக எழுந்தருளி சிறுத்தொண்டரிடம் பிள்ளைக் கறியமுது கேட்டு நிற்கின்றார். பிள்ளைக் கறி அமுது வேண்டும் என்ற வாக்கில், பிள்ளைக் கனி அமுதையே கேட்டால் பெற்றோர்க்கு எப்படியிருக்கும்! அதிலும் அப்பிள்ளையைப் பெற்றெடுத்த அன்னையின் மனோநிலையை எண்ணிப் பார்க்கவே வேண்டாம். ஆனால் அந்த அன்னையும் தந்தையோடு இணைந்து வாளால் மகவரிந்து எம்பிரானுக்கு அமுதூட்ட முன்வந்தாள் என்றால் அவளது பக்தியை, பண்பை, ஒழுக்காற்றலை, இறைத் தொண்டின் மேன்மையை, இறை நம்பிக்கையை, ஆத்மீக ஈடுபாட்டை என்னவென்று சொல்வது! இவை இடம்பெற்றது அன்று. இன்றைய நிலைக்கு வருவோம்.

*நாணயமாக நடப்பவர்கள் ஒளிக்கும் இருளுக்கும் அஞ்சவேண்டியதில்லை.*

பெண்கள் சகல துறைகளிலும் முன்னேறிக் கொடிகட்டிப் பறக்கும் காலம் இது. கலையா, கணனியா, இலக்கியமா, கற்பித்தலா, சட்டமா, வைத்தியமா, ஏன் காவல் துறையா எங்குமே பெண்கள்! பெண்கள்! பெண்கள்!

இருப்பினும், ஒரு இல்லத்தின் தலைவியாக, மணிமகுடமாக, சுயநலமற்ற தியாகியாக விளங்கும் பெண்ணுக்கு சமய அறிவும், பக்தியும், சமய ஈடுபாடும் இருந்தால்த்தான் அந்தக் குடும்பம் சிறப்புறும். அதன் வழி அந்த சமுதாயமே நேர்மையானதோர் நிம்மதி நிறைந்த சமுதாயமாக உருவாகும். எந்த மதமாக இருப்பினும் சரி, அதற்கு பெண்ணின் சமய ஈடுபாடு மிக அவசியம். வீட்டில் அம்மா கும்பிடுவதைப் பார்த்துத்தான் குழந்தையும் "அப்புசாமி" என்று மழலை பேசிக் கைகூப்பும். வீட்டிலிருந்துதான் பக்திநெறி நாட்டுக்குப் பரவ வேண்டும். அதுவே இயல்பு முறையும்கூட. வேலைகளின் பழுவின் காரணமாக வீட்டில் அன்னையின் ஆன்மீக ஈடுபாடு பெரிதளவு அமைய முடியாவிட்டாலும் தினமும் பிரார்த்தனை சிறிது நேரம் தன்னும் இல்லத்தில் ஒழுங்கானதாக, புனிதமானதாக, தூய்மையானதாக, கிரமமானதாக அமைய வேண்டும். சிறிது நேரம் தன்னும் இல்லம் ஒரு அறநெறிக்கூடமாக அமைய வேண்டும். அன்னை இறை நம்பிக்கையைப் பேணினால் குழந்தை அதனைப் பின்பற்ற முடியும். இஃது பக்தியின் அடிப்படை. மனோபலத்திற்கு ஒரு மார்க்கம். எந்த மதமாக இருப்பினும் இல்லத்தில் சமய வழிபாடு அற்ற வாழ்வு ஆதாரமற்றது, பலமற்றது, அடித்தளமற்றது. எனவே, இன்று நாம் கொண்டுள்ள சமய ஈடுபாட்டோடு எமது எதிர்கால பரம்பரையையும் மேலும் நல்ல மனம் படைத்த, புரிந்துணர்வு கொண்டதோர் சமுதாயமாக்க தாய்க்குலம்தான் மனம் வைக்க வேண்டும். குழந்தையும் அன்னையின் கரங்களிலேதான். அவர்களின் எதிர்காலமும் அவளின் கையிலேதான். இது அன்னையர்க்கு ஓர் அன்பான வேண்டுகோள், சமர்ப்பணமும் கூட.

## உறுதியான மாற்றத்துக்கு...

குரு தன் சீடர்கள் தன்னிடம் முழுமையாக சரணடைய வேண்டும் என நினைத்து, தான் எதைச் சொன்னாலும் சீடர்கள் பின்பற்றவேண்டும் என்று கட்டளையிடுவார். ஒரு குறிப்பிட்ட பயிற்சியை கூறுவார். அதைச் செய்துகொண்டிருக்கும்போதே "நிறுத்து!" என்பார். உடனே சீடர்கள் நிறுத்திவிட வேண்டும். ஒருநாள் காலை கால்வாயில் இறங்கி நடக்கிறபோது அவர் "நிறுத்து" என்று சொல்லிவிட்டு, தன் கூடாரத்துக்குப் போய்விட்டார். நான்கு சீடர்களும் கால்வாயில் அப்படியே நின்றுவிட்டனர். யாரோ தண்ணீரை திறந்துவிட, தண்ணீர் பெருக்கெடுத்து ஓடி வந்தது. குரு உள்ளே போய்விட்டார். ஆனாலும் சீடர்கள் குரு வருவார் எனக் காத்திருந்தனர். கழுத்துவரை தண்ணீர் வந்துவிட்டது. ஒருவன் கரைக்கு ஓடிவிட்டான். "இதுவே ரொம்ப அதிகம்..." என்றான். மற்ற இரண்டு சீடர்களும் மூக்குவரை தண்ணீர் வந்ததும் வெளியேறி விட்டனர். ஆனால், ஒரு சீடன் மட்டும் அப்படியே நின்றான். தண்ணீர் அவன் தலையைத் தொட்டு ஓடிக்கொண்டிருந்தது. அவன் மூழ்கிக்கொண்டிருந்தான். தன் அறையை விட்டு பாய்ந்து வந்த குரு தண்ணீரில் குதித்து அவனைக் காப்பாற்றி இழுத்து வந்தார். மரணத்தைத் தொட்டு மீண்டுவந்த சீடன் கண்களைத் திறக்கும்போது புதிய மனிதனாக இருந்தான். அவனுக்குள் மாற்றம் நிகழ்ந்திருந்தது. அந்தப் பழைய மனிதன் இறந்து அவன் புதிதாகப் பிறப்பெடுத்திருந்தான். அந்த சீடன் குருவை முழுமையாக ஏற்றுக்கொண்டான். தன் மனதையும் அதன் கணக்குகளையும் அவன் நிராகரித்தான். தன் வாழ்வின்மீதான பற்றை நிராகரித்து, உயிராசையைத் துறந்தான். அதனால்த்தான் அவனை எதுவும் நகர்த்திவிடவில்லை.

*உன் எண்ணம்தான் உனது வாழ்க்கை. உனது வாழ்க்கைதான் உனது எண்ணம்.*

(தொடர் -31)

# சமய வாழ்வு

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

மனித வாழ்க்கை என்பதே கடமை ஆற்றுவதுதான். பூமியில் குழந்தையாகப் பிறந்து, தன் காலிலே தானே நிற்கின்ற நிலைமை வருகின்றவரை. ஒவ்வொருவரும் பெரிதாகக் கடமை ஆற்றவேண்டிய அவசியம் இல்லாமல் இருக்கலாம். அந்தக் காலத்தில் அவனுக்காக மற்றவர்கள் கடமை ஆற்றுகிறார் கள். அப்போதும்கூட அவனுக்கென்றே சில கடமைகள் இருக்கவே செய்கின்றன.

பிறப்பதிலிருந்து இறக்கும்வரை கடமை ஆற்றாமல் எவரும் இருக்கமுடியாது. இந்தக் கடமைகளை ஒழுங்குபடுத்தி சொல்லி இருப்பதில்தான் இந்துமதத்தின் அழகே இருக் கிறது.

ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்தால் உலகத்தில் போராட்டமே இருக்காது. அமைதி நிலவும். வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும்.

இந்தக் கடமைகள் குடும்பத்திலிருந்து தான் ஆரம்பமாகின்றன என்று இந்துமதம் சொல்லுகிறது. குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு வரின் கடமையினையும் இந்துமதம் தெளி வாக வரையறுத்துச் சொல்லி இருக்கிறது.

கடமைகள் முரண்படவேண்டிய அவ சியமே இல்லை. கடமைகளைச் செய்கின்ற போதுதான் உரிமைகளுக்கு நீ தகுதி படைத் தவன் ஆகிறாய் என்று இந்துமதம் சொல் கிறது.

குடும்பத்தில் பிரச்சினைகள் தோன்று கின்றபோது அனைவரும் அமர்ந்து விவாதித்து முடிவு காண்பதை இந்துமதம் ஒரு வழக்க மாக்கி வைத்திருக்கிறது.

குடும்ப வாழ்க்கையாயினும் அரச வாழ்க்கையாயினும் நியாய உணர்வுதான் அடித்தளமாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது.

இந்து சமுதாயத்தில் வாழ்க்கை மதிப்பீடுகள் மிக உயர்ந்த நிலையிலேயே இருந்தன. எல்லா உறவுகளையும் தர்ம நியாயங் களே நிர்ணயித்தன. இதனால் குடும்ப வாழ்க் கையிலிருந்து அரசாட்சிவரை எல்லாமே ஒரு கட்டுப்பாட்டுக்குள் செய்யப்பட்டன. தெய்வ நீதிக்கு அனைவரும் பயந்தார்கள்.

இந்துமதம் ஒழுக்கம் என்ற உள் உணர்வின்மூலம் மனித நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த முயன்றது.

கணவனுக்குப் பிறகு மனைவி தூங்கி, கணவனுக்கு முன்னாள் எழுந்துவிட வேண் டும் என்று சொன்னார்கள். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

அந்தக் காலத்தில் வெளியே சென்று உழைக்கிறவன் கணவனாகவும், வீட்டைப் பராமரிக்கின்றவள் மனைவியாகவும் இருந் தார்கள்.

களைத்து வந்த கணவன் முதலில் உறங்கி நேரங்கழித்து எழுவது தேவை என்று கருதினார்கள். ஒவ்வொரு கணவனும் மனை வியை லட்சுமியின் வடிவமாகவே கண்டான். தூங்குமுன் அவளைத் தரிசித்து தூங்குவதும், கண் விழிக்கும்போது அவளுடைய முகத்தில் விழிப்பதும் அவனுக்கு நன்மை விளைவிக்கக்

*ஏமாற்றி வாழலாம் என எண்ணாதே, வாழ்க்கை உன்னை ஏமாற்றிவிடும்.*

கூடியவை என்றும் கருதப்பட்டது. காலையில் கணவன் கண் விழிக்கும்போது மனைவி குளித்து நெற்றியில் திலகமிட்டு அவன் முன் நிற்பதே ஒரு மங்கலகரமான காட்சி. இந்தக் கருத்தில்தான் இது சொல்லப்பட்டதே தவிர, பெண் ஆணுக்கு அடிமை என்கிற கருத்தில் சொல்லப்படவில்லை. சோம்பேறி ஆண்கள் இதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார்கள் என்பது வேண்டுமானால் உண்மையாக இருக்கலாம்.

பிற்காலத்தில் ஆணும் பெண்ணும் வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற நிலை வந்த பின்னர் மேற்குறிப்பிட்ட விடயங்கள் பொருந்தாத நிலைக்கு வந்துவிட்டது. அது மட்டுமன்றி உண்மையான விடயங்களை ஆய்வின்றி "பெண்ணிலைவாதம்" என்று "வாதம்" செய்பவர்கள் அடிமை என்ற நிலைப்பாட்டைக் கூறிவருகிறார்கள். இதனால் குடும்பங்களின் ஒற்றுமை.....!

விதவைகள் தங்களுடைய கோலத்தை கவர்ச்சியற்றதாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்பதெல்லாம் இந்து சமுதாயத்தில் பிற்காலத்தில் ஏற்பட்ட பழக்கம். ஆண் மேலாதிக்க உணர்வு இந்து சமுதாயத்தில் இடைக் காலத்தில் வளர்ந்தபோது, ஆணின் போகப் பொருளாக பெண் கருதப்பட்டாள் என்பது உண்மை.

கணவனை இழந்தவள் வாழ்க்கையை இழந்தவள் என்கிற கருத்து புகுத்தப்பட்டது. அப்போது அவள் பொட்டு வைத்துக்கொள்ளக் கூடாது, நல்ல ஆடைகளை அணியக் கூடாது போன்ற கோட்பாடுகள் உருவாக்கப் பட்டன.

விதவைகள் மறுமணம் செய்து கொள்ளலாம் என்பதற்கான அங்கீகாரம் "அதர்வண வேதத்தில்" இருப்பதாக சுவாமி சிவானந்த சரஸ்வதி தமது கட்டுரை ஒன்றில் எழுதி இருக்கிறார். இவற்றை எல்லாம் அடிப் படையாகக்கொண்டு "பாரதி", விதவைகள் மறுமணம் செய்ய வேண்டும் என வற்புறுத்தி இருக்கின்றான். விதவைகள் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்கிற தடை எந்த சாஸ் திரத்தில் இருக்கிறது என்று இதுவரை எவரும் சொன்னதில்லை. இடைக்காலத்தில் புகுந்து விட்ட பழக்கவழக்கங்கள் எல்லாம் இந்துமதக் கோட்பாடு ஆகிவிடாது. அவ்வாறு ஏற்பட்டு விட்ட தீமைகளுக்கும் அநீதிகளுக்கும் சப்பைக் கட்டு கட்டிக்கொண்டிருப்பதிலும் அர்த்தம் இல்லை.

இந்து மதத்தின் மிகப்பெரிய பலமே சமுதாய வளர்ச்சியில் தோன்றக்கூடிய நன்மை களையெல்லாம் தன்னுடையதாக ஜீரணித்துக் கொண்டதுதான். இந்து மத வரலாற்றைப் படித்தால் எத்தனையோ புதிய எண்ணங் களை அது ஏற்றுக்கொண்டிருப்பதைக் காண லாம். சமுதாய நன்மைக்கு ஏற்ற மாற்றங் களை தாராளமாக ஏற்றுக் கொண்டிருக்கிறது.

ஒரு காலத்தில் செங்கல்லும் சாந்தும் வைத்துத்தான் கோயில் கட்டினார்கள். சோழர் கள், பல்லவர்கள் காலத்தில்தான் கற்களால் கோயில் கட்டும் பழக்கம் ஏற்பட்டது. பழங் காலத்தில் கற்களால் ஆன கோயில்கள் இல்லை என்பதற்காக செங்கற்களினால் கோயில் கட்டிக் கொண்டிருக்கவில்லை.

கோயில்களில் மின்சார விளக்குகள் எரியவிடுவதற்குக்கூட ஒரு காலத்தில் எதிர்ப்பு இருந்தது. இதெல்லாம் அர்த்தமற்ற எதிர்ப் புக்கள், மின்சாரசக்தி என்பது இறைவன் நமக்கு அளித்த ஒன்று என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

ஆதிகால இந்துக்கள் விஞ்ஞான நுணுக்கங்களை பயன்படுத்திக் கொண்டது மட்டுமல்ல, மிகச் சிறந்த விஞ்ஞானிகளாகவும் இருந்தார்கள்.

*எனக்கு வேண்டும் என்பது ஆசை. எனக்கு மட்டும் வேண்டும் என்பது பேராசை.*

இந்து மதத்தின் அடிப்படை அணுகு முறை சரியாகவே இருந்து வந்திருக்கிறது. விஞ்ஞான வளர்ச்சியை மதத்திற்கு முரணான விடயம் என்று இந்துமதம் ஒருபோதும் கருதிய தில்லை. சமுதாய வளர்ச்சியின்போது ஏற்படு கின்ற மாற்றங்களை ஏற்றுக்கொள்ளுகின்ற தன்மை இந்துமதத்திற்கு எப்போதும் இருந்து வந்திருக்கிறது.

ஒரு இந்து நடை உடை பாவனை களில் மேல்நாட்டுப் பழக்கவழக்கங்களை மேற்கொண்டாலும், மன உணர்வில் அவன் இந்துவாகவேதான் இருக்கிறான்.

ஒரு உண்மையான இந்து மற்றவர் களை வெறுக்கமாட்டான். ஏனைய மதக் கோட்பாடுகளை ஒருபோதும் கேலி செய்யவும் மாட்டான். காரணம், இந்துமதம் எல்லா வழி களிலும் இறைவனை நோக்கிச் செல்லுவ தாகக் கருதுகின்றது. இறைவனை எந்த வழி யில் ஒருவன் வழிபட்டாலும், அந்த வழிபாடு ஆத்மார்த்தமானதாக இருக்குமானால், அவன் இறைவனை அடைவான் என்று ஏற்றுக்கொள் கிறது.

எனவேதான் வேறு மதக் கோட்பாடு களை வேறானதாகக் கருதுவதில்லை. இந்த சகிப்புத் தன்மைதான் இந்து மதத்தின் பெரிய பலம்.

ஏனைய மதங்களில் மத மாற்றம் செய்வது ஒரு முக்கிய பணியாகக் கருதப்படு கிறது. மதமாற்றம் செய்வதற்கான ஏற்பாடு இந்து மதத்தில் இல்லவே இல்லை. என் மதத்திற்கு வந்தால்த்தான் உனக்குத் தெய்வ அனுக்கிரகம் கிடைக்கும் என்று இந்துமதம் சொல்லியதில்லை. அதனால்த்தான் இந்து மக்களிடையே கூட சைவம், வைணவம் என் கின்ற பிரிவுகள் சாத்தியமாயின.

மனிதனுடைய சிந்தனைச் சுதந்திரத் துக்கு தடை விதிக்காத ஒரே மதம் இந்துமதம் தான். சிந்தனை மனிதனுக்கு இறைவனால் அளிக்கப்பட்ட ஒன்று. அப்படிப்பட்ட ஒரு வரப் பிரசாதத்தை மனிதன் முழுமையாக பயன் படுத்தக்கூடாது எனத் தடை விதிப்பது அவனுடைய பரிணாம வளர்ச்சியை கட்டுப் படுத்துவதாகும்.

மனித இயல்பினை ஆதாரமாகக் கொண்டு உருவானது இந்துமதம். மனித இயல்பின் தன்மைகளே இந்துமதத்தின் ஆதார சுருதி.

இந்துப் புராணக் கதைகளைப் படித் தாலே இந்த உண்மையினை உணர முடியும்.

விசுவாமித்திரர் கடுந்தவம் புரிகிறார். மேனகையின் நடனத்தைக் கண்டு, அவள் அழகில் மோகம் கொள்ளுகிறார். விளைவாக தவத்தின் வலிமைகளை இழக்கிறார். சகுந் தலை எனும் குழந்தையும் பிறக்கிறது. இந்தக் குழந்தை கண்வரின் ஆசிரமத்தில் வளர்கிறது. பெரிய தவ சிரேஷ்டரான விசுவாமித்திரரும், ஏதோ ஒரு கட்டத்தில் பெண்ணாசைக்கு சபலப் பட்டுப் போகிறார் என்பது கதை.

ரிஷி பத்தினி அகலிகை, வந்திருப் பவன் இந்திரன் எனத் தெரியவந்த பின்னரும் அவனுடைய இச்சைக்கு இணங்குவதாகத் தான் வால்மீகி இராமாயணம் கூறுகிறது. விசுவாமித்திரர் மேனகையைக் கண்டு மயங் கியதும், அகலிகை இந்திரனுக்கு இடம் கொடுத்ததும் மனித பலகீனங்களின் அடை யாளங்கள். இந்தச் சம்பவங்களின் மையமாக அமைவது மனித பலகீனம். உறுதியான உள்ளம் படைத்தவர்களும் சில சந்தர்ப்பங் களில் இப்படிப் பலியாகிப் போவதுண்டு என் பதை இந்தக் கதைகள் எடுத்துக்காட்டுகின்றன.

விசுவாமித்திரருக்கு பிறந்த குழந்தை சகுந்தலை, அந்தச் சகுந்தலை துஷ்யந் தனைக் காதலிக்கிறாள். அவர்களுக்குப் பிறக் கும் குழந்தை பரதன், அந்த பரதனின்

பெயரால்தான் இந்தியா பரதகண்டம் என்கிற பெயரைப் பெறுகிறது.

அகலிகை தவறாக நடந்து சாபம் பெற்றாலும் அவளுக்கு சாப விமோசனம் கிடைக்கிறது. அவளுடைய கணவர் கௌதமர் அவளை மன்னித்து மனைவியாக ஏற்றுக் கொள்ளுகிறார்.

இந்து புராணக் கதைகள் வாழ்க்கையின் மிக நுணுக்கமான பல விடயங்களுக்கு பதில் சொல்லுகின்றன. ஏதோ ஒரு கணநேர சபலத்துக்குப் பலியாகிப்போன அகலிகையை கௌதமர் தண்டித்தாலும், அவள் மனம் வருந்தி தண்டனையை அனுபவித்த பிறகு, அவளை மனைவியாக ஏற்றுக்கொள்ள தயக்கம் காட்டுவதில்லை.

"பாவமன்னிப்பு" கிறிஸ்துவ மதத்துக்கு மட்டுமே உரிய ஒன்று என்று நாம் எண்ண வேண்டியதில்லை. இந்து புராணக் கதைகளை ஊன்றிப் படித்தால் தவறு செய்கின்றவர்களுக்கு பிராயச்சித்தமும் உண்டு என்பதை புரிந்துகொள்ள முடியும்.

கைலாயத்தில் இறைவனுக்குப் பணிவிடை செய்துவந்த ஆலால சுந்தரர் உமாதேவியாரின் பணிப் பெண்களான கமலினி, அநிந்திதை ஆகிய இரு பெண்களைக் கண்டு மோகம் கொள்ளுகிறார். அந்தப் பெண்களும் அவர்மீது காதல் கொள்ளுகிறார்கள். ஆலால சுந்தரர் அது பெரிய தவறு என்பதை பின்னர் உணர்கிறார். தான் செய்த தவறினை இறைவனிடம் ஒப்புக்கொள்கிறார். இறைவன், ஆலால சுந்தரர் பூமியில் பிறந்து, அவரைப் போலவே பூமியில் பிறக்கின்ற அந்த இரண்டு பெண்களையும் திருமணம் செய்து, பிறகு கைலாயத்துக்கு திரும்பும்படி ஆணையிடுகிறார்.

ஆலால சுந்தரரும், அந்தப் பெண்களும் காதல் கொண்டதை இறைவன், இயற்கை உணர்வாக ஏற்று, பூமிக்கு அவர்களை அனுப்பி, அவர்கள் காதலை நிறைவேறச் செய்கிறார் என்பதுதான் கதை.

எந்த இடத்திலும் மனித இயல்புகளை புறக்கணித்து இந்து மதம் நீதிகளைச் சொல்லவில்லை. ஆகவே வாழ்க்கையில் நடைமுறை உணர்ச்சிகளை புறக்கணித்து வாழ வேண்டிய அவசியம் இல்லை. இறைவன் அளித்துள்ள அறிவினையும் உணர்ச்சிகளையும் முழுமையாகப் பயன்படுத்தி, நல்லவைகளைச் செய்ய நமக்கு வழிகாட்டுவதே இந்துமதம்.

(தொடரும்...

## இயல்பாக இருங்கள்!

ஒரு குழந்தை நாள் முழுக்கக் கீழே விழுந்தாலும், இயல்பாகவே எழுந்துவிடும். அது கீழே விழுந்ததைப் பற்றியே நினைக்காது. ஆனால் அதைப்போல நீங்கள் விழுந்தால், உங்களை மருத்துவமனையில்தான் சந்திக்கவேண்டிவரும். ஏன்? ஒரு குழந்தை கீழே விழும்போது அது இயல்பாகவே விழுகிறது. விழுதலில் இருந்து சண்டைபோட்டு தப்பிக்க நினைப்பதில்லை. அது அதன் போக்கிலேயே விழுகிறது. புவி ஈர்ப்புடன் போராடுவது இல்லை. ஒரு தலையணை எப்படி வெறுமே தரையில் விழுமோ, அப்படியே அது விழுகிறது. ஆனால் நீங்கள் விழும்போது ஆரம்பத்திலேயே எதிர்க்கிறீர்கள். உங்களுடைய எல்லாத் தசைகளும், ஏன், உங்கள் எலும்புகள்கூட இறுக்கம் அடைகின்றன. இப்படி இறுக்கமான தசைகள், நரம்புகள் மற்றும் எலும்புகள் கூட்டாக விழும்போது விரும்பத்தகாத பல உடைவுகள் உங்கள் உடலில் ஏற்படுகின்றன. அதேபோல, ஒரு குடிகாரன் கீழே விழும்போது பார்த்திருக்கிறீர்களா? அவன் எந்தவிதப் போராட்டமும் இல்லாமல், முழுமையாக விழுவான். அவனுக்கும் ஒன்றும் ஆகியிருக்காது. முக்கியமாக அவன் போராடும் மனநிலையில் இல்லை. இதுதான் காரணம். காலையில் அவன் மிக இயல்பாக, சாதாரணமாக எழுந்து நடப்பான். அவன் உடலில் உடைவோ வலியோ இருக்காது.

# தவப்பயன், மேலுலக இன்பம், முத்தி, வீடு, சுவர்க்க வாழ்வு அரசவாழ்வு தந்து உம்மைப் புகழும் அன்பையும், ஆற்றலையும் அருள்புரிவீரோ!

– திரு க.கு.க. சிவபாலன் அவர்கள் –

குமரா சிவன்சேய் குறக் கன்னி நாதா
குகா கந்தா சேனாப தீசக்தி பாணி
எமரர் வப்பர்போ தார காரி மயூரா
இனாதீவு வாய் திக்கரையான் அஞ்சலென்ன...

குமாரக் கடவுளே, பரமசிவன் மகனே, குகனே, கந்தப் பெருமானே! தேவர்களின் சேனைத் தலைவனே, வேலேந்தியவனே, மயில்வாகனனே, வள்ளிபதியே, அடியவர் களின் துயரைக் களைபவனே, பிரபுவே, தாரகனை அழித்தவனே, திக்கரை முருகனே! எம்மை எப்போதும் காத்தருள வேண்டும்.

19ஆம் நூற்றாண்டில் காரைநகர் வாழ்ந்த கார்த்திகேயப் புலவர் நல்லை நகர் ஆறுமுகநாவலர் காலத்தவர். இருவரும் இரு பாலை சேனாதிராய முதலியாரிடம் கல்வி பயின்றவர்கள். புலவர் திரிபுர அந்தாதி, திக்கரை அந்தாதி, போச்சுட்டி அந்தாதி, தன்னை அந்தாதி பாடிய பெரும் புலவர். அந்தணர் குலத்தில் பிறந்த இவர் 19ஆம் நூற்றாண்டு நடுப் பகுதியில் திக்கரைக் குறிச் சியில் இருந்து திக்கரை முருகனுக்கு நித்திய பூசை செய்த பெருந்தகை. அதேபோன்று காரை நகர் சிவன் கோவில் (ஈழத்துச் சிதம்பரம்) 64 ஆண்டுகள் பிரதம குருவாக இருந்தவரும், அகில இலங்கை பிராமணர் சங்கத் தலை வராகப் பல ஆண்டுகள் இருந்தவரும் உத்தர கோச மங்கையில் இருந்து வந்த அந்தணர் குலத்தில் அவதரித்தவருமான, சிவஸ்ரீ கணபதீஸ்வரக்குருக்கள் ஐயா அவர்கள் ஆலய மகோற்சவ குருவாக விளங்கியவர். இவர்கள் இருவரும் திக்கரை முருகனுக்கு தாம் பூசை செய்யக் கிடைத்தது பெரும்பேறு எனக் கருதித் தொண்டாற்றிய பெருந்தகைகள். இவர்கள் காலத்தில் பூசை, மகோற்சவங்களைப் பார்த்த அடியார்களாகிய நம் முன்னோர்கள் பெரும் பேறு உடையவர்கள்.

50 காலங்களில் திக்கரை முருக மூர்த்தி கோவில் மகோற்சவ குருவாக சிவஸ்ரீ கணபதீஸ்வரக்குருக்கள் இருந்த காலத்தில், இரவுத் திருவிழாவின்போது சாமி வெளிவீதி உலா வந்து அக்காலங்களில் சின்னமேளம் என்று சொல்லுகின்ற சதுர்க்கச்சேரி நிகழ்ந்த வேளை, ஆலய உள்வீதியில் குருக்கள் சிறிது கண் அயர்ந்து போனார். எம் பெருமான் குருக்கள் கனவில் சிவன் கோவிலில் திருடர் கள் உட்புகுந்து விட்டார்கள் என்று அறிந்து, சிவன் கோவில் நினைவில் இருந்த குருக்கள் ஐயா, ஓர் அடியாரை அழைத்து, சிவன் கோவிலில் திருடர்களாம் கனாக் கண்டேன் எனவும் உடன் சென்று பார்த்து வரும்படி அனுப்பினார். அந்த அடியார் சிவன் ஆலயம் சென்று பார்த்தபொழுது அங்கு திருடர்கள்

ஒடு கழட்ட முயற்சி செய்தவர்கள், அங்கு ஒரு பாம்பைக் கண்டு, உளியையும் தவறவிட்டு ஓடி மறைந்ததாக பார்த்து வந்த அடியார் ஐயாவிடம் அன்புடன் கூறினர். இவ்வாறு பல அதிசய, அற்புதங்கள் நிறைந்த முருகன் ஆறாம் நாள் திருவிழா, காமம் முதலிய உட் பகை ஆறும், கலை முதலிய அத்துவா ஆறும், இருத்தல் முதலிய கன்ம மல குணங்கள் ஆறும், பிரம சாலோகம் முதலிய ஆறும் நீக்குதல். ஆகவே திருக்கோயிலில் நிகழும் ஆண்டு விழாக்களைத் தரிசிக்கச் செல்லுவோர் விழாக்களின் உண்மைப் பொருளையுணர்ந்து ஆசார சீலராய் விரதம் இருந்து இயன்றளவு நிவேதனப் பொருட் களுடன் சென்று ஆசாரியாரைக் குருவாக எண்ணி வழிபட்டு அவர் செய்யும் தம்ப, விம்ப, கும்ப பூசைகளை மெய்யன்போடு தரிசித்தல் வேண்டும்.

சிவஞானமயமான திருநீற்றினை அணிந்து கொள்வோர்க்கு நோயும் பேயும் விலகி எல்லா நலன்களும், சர்வ மங்கலங் களும் பெருகும். சிவஞான நூல்களை ஓது கின்றதில் விருப்பம் கொண்டுள்ள அன்பர்கள் பூசுகின்ற உண்மைத் திருநீறானது உண்மைப் பதவியான இறைவன் திருவடிகளை அடி யேனுக்குக் கிட்டுமாறு அருள்புரிவீராக என,

"அருணகிரிநாதர் திருப்புகழில்,

பூரணச்சிவ ஞான காவியும்
ஓது தற்புணர்வான நேயர்கள்
பூசு மெய்த்திரு நீறிடா இருவினையேனைப்
பூசி மெய்ப்பதமான சேவடி
காண வைத்தருள் ஞான மாகிய
போத கத்தினை யேயு மாறருள் புரிவாயே.

எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

திருமுறைகளை ஓதுகின்ற ஓதுவார் மூர்த்திகள் பயபக்தியுடன், பூசிக் கொள்கின்ற "சின்னம்" திருநீறு எனப்படும். பக்தியோடு வழிபடும் முறையில் தொன்மையான இலக் கியம் இருக்கு வேதத்திலேயே இறைவனைத் தோத்திரம் மூலம் வழிபடும் மரபு காணப்படு கின்றது. திருநீறு வேதத்திலே உள்ள சின்னம். ஏனைய சின்னங்களை வேதம் கூறவில்லை. பஸ்மஜாபாவம் என்ற உபநிடதம் திருநீற்றைப் பற்றி இனிது கூறுகிறது. பல பிறவிகளில் தவம் செய்திருந்தால் தான் திருநீற்றைப் புனையும் பெருவாய்ப்பு உண்டாகும் திருநீறு சிவஞான சாதனமாகும். முருகா என உருகு பவர்க்கருள்பவரே! சூரசங்காரா! சுடர் வேலவா! சிவகுமாரரே! திருமால் மருகரே! காரைநகர் களபூமி திக்கரை வாழ்தேவா! பிறவிக்கடலில் அடியேன் வீழ்ந்து வருந்தாமுன்னம் "முருகா, குமரா, கந்தா" என்று உருகி ஓதி, இவ் உலகினிலிருந்து பூத உடல் நீங்கிச் செல்லும் காலத்தில் நரகம் என்னும் தரும் துயருள் ஆழ்ந்தமுன்னம், சுற்றத்தினரும் ஏளனம் செய்யும் தன்மையில் துன்பத்தை அடைவதன் முன்னம், முருகப் பெருமானே! ஆறுமுகக் கடவுளே! சிறியேனுக்குத் தகுதியில்லை ஆயினும், குருமூர்த்தி சகிதமாக, நீரே வந்து உபநிடதங்களின் உண்மைகளை உபதேசித்து உய்விப்பீராக. காரைநகர் களபூமி திக்கரை யில் வீற்றிருக்கும் வள்ளி, தெய்வானை சமேத

*எந்த நிலைக்கு உயர்ந்தாலும் வந்த நிலையை மறவாதே.*

சுப்பிரமணியப் பெருமானே சிவக் கடலில் சேரவும், சிவானந்தப் பெருவாழ்வையும் அடி யேற்கு திருவருள் புரிவீராக.

எங்கும் நிறைந்த உமது இக, பர, சுப போகங்களைத் தரும் திருவடியைத் தமிழினால் பாடவும், அன்பர்கள் மகிழவும், உடல் அவமே அழியாமல் எழும்போது வேலும் மயிலும் என்பேன் தொழுதே உருகி அழும்போதும் வேலும் மயிலும் என்பேன். அடியேன் உடலம் விழும்போதும் வேலும் மயிலும் என்பேன் களபூமி திக்கரை முரு கனே, கந்தனே, குமரனே, ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று ஓம் சரவண பவ ஓம் சண்முகா சரணம் ஓம் நமசிவாய.

## போர் முடிவு

மஹாபாரதப் போர் நடந்துகொண்டிருந்தது. ஒரு வீரன் போர்க்களத்துக்குள் வந்து கொண்டிருந்ததை கிருஷ்ணர் கவனித்தார். அவனுடைய நேர்ப் பார்வையும், நிமிர்த்திய நெஞ்சும், வீர நடையும் கிருஷ்ணரை ஈர்த்தது. தன் உருவை மாற்றிக்கொண்டு அவனை அணுகி, "வீரனே எங்கு வந்தாய்?" என்று கேட்டார். "நான் போரில் பங்கேற்க வந்தேன்!" என்றான் அவன். "உனக்கு என்னப்பா தகுதியிருக்கிறது?" என்றார் கிருஷ்ணர்.

அவன் தன்னிடம் இருக்கும் வில்லையும் மூன்று அம்புகளையும் காட்டி, "இதில் ஒன்றால் பாண்டவர்களையும், மற்றொன்றால் கௌரவர்களையும், மூன்றாவதால் அந்தக் கிருஷ்ணனையும் கொல்லும் திறமை படைத்தவன் நான்" என்றான். "எப்படி உன்னை நம்புவது?" என்றார் கிருஷ்ணர். அவன் அவரை மேலும் கீழும் பார்த்துவிட்டு தூரத்தில் உள்ள மரத்தைக் காட்டி, அதில் இருக்கும் இலைகள் அனைத்தையும் ஒரே அம்பில் வீழ்த்திக் காட்டுவதாகக் கூறினான். விளையாடிப் பார்த்துவிடுவது என்று முடிவு செய்த கிருஷ்ணர், "சரி செய் பார்க்கலாம்" என்றார்.

அவர் கடவுளல்லவா? அவனுக்குத் தெரியாமல் மரத்தின் ஐந்து இலைகளை முதலில் தன் காலடியின் கீழே மறைத்துக்கொண்டார். வீரன் நாண் ஏற்றி அம்பை எய்தான். அவன் சொன்னதுபோலவே மரத்தில் அனைத்து இலைகளும் ஒரே அம்பின் தாக்குதலில் கீழே விழுந்துவிட்டன. அத்தோடில்லாமல் அம்பு திரும்பவும் வந்து, ஐந்துமுறை கிருஷ்ணரின் காலைத் துளைத்தது.

வீரன் கிருஷ்ணரைத் தெரிந்துகொண்டு வணங்கினான். கிருஷ்ணரும் அவனது திறமையைப் பாராட்டினர். பின் "சரி, யாருக்காகப் போராடப் போவதாக உத்தேசம்?" என்று கேட்டார். வீரன் "என் திறமைக்கு சவாலாக நான் எப்போதுமே தோற்கும் கட்சிக்கு ஆதரவாகவே போரிடுவேன்" என்றான். "இவன் போரிட்டால் இவன் பக்கம் உள்ள கட்சி ஜெயிக்க ஆரம்பிக்கும். உடனே இவன் எதிர்க்கட்சிக்குப் போய்விடுவான் பிறகு அது ஜெயிக்க ஆரம்பிக்கும். இது முடியவே முடியாதே. போருக்கு ஒரு முடிவு ஏற்படாமல் போய்விடுமே" என்று கிருஷ்ணர் யோசித்தார். "வீரனே, எனக்கு ஓர் உதவி உன்னிடமிருந்து ஆகவேண்டியிருக்கிறது" என்று அவனிடம் சொன்னார். அவனும் செய்யக் காத்திருப்பதாகத் தலைவணங்கினான். "இந்தப் போரின் முடிவைப் பாதிக்கும் சக்தியுள்ள ஒருவன் இருக்கிறான் அவன் தலை எனக்கு வேண்டும்" என்றார் கிருஷ்ணர். "யார் அவன்? சொல்லுங்கள் இப்போதே கொய்து வருகிறேன்" என்றான் வீரன். கிருஷ்ணர் "வீரனே, போரின் முடிவுக்காக உழைக்க எண்ணாமல், உன் திறமைக்குச் சவாலாகப் போரில் பங்கேற்க விழையும் நீதான் அந்த ஆள்" என்று அவன் தலையைக் கேட்டுவிட்டார். உடனே அவனும் கொடுக்க ஒப்புக்கொண்டான்.

கிருஷ்ணர் அவன் பக்தியை மெச்சி, அவனுக்கு வரம் ஒன்று கொடுத்தார். அவன் "தான் இறந்தாலும் மஹாபாரதப் போரைத் தன் கண்ணால் பார்க்கவேண்டும்" என வரம் கேட்டான். வரத்தை அருளிவிட்டு தலையை வாங்கிக்கொண்டார், கிருஷ்ணர்.

*நல்ல நடத்தையை இழந்தால் அதைப் பெறுவது கடினம்.*

# ஊரடங்கு வேளையிலும் தொடர்ந்த ஆச்சிரம அன்னப் பணி

– தொகுப்பு: வல்வையூர் அப்பாண்ணா –

**கோவிற் சூழல்:**

தொடர்ச்சியான ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுவிட்டது. எப்போதும் பரபரப்பாக இருக்கும் சந்நிதிச் சூழல் மக்கள் நடமாட்டம் எதுவுமின்றி அமைதியாகிவிட்டது. சந்நிதி வீதியில் சுற்றி வரவுள்ள மர நிழல்களில் தரித்து நிற்கும் வாகனங்களும் உந்துருளிகளும் எதுவுமில்லை. பத்துப் பதினைந்து நிமிடத்திற்கொருமுறை சந்நிதியானைச் சுற்றிவரும் இ.போ.ச பேருந்துகளும்-தனியார் பேருந்துகளும் இல்லாததால் இரைச்சல் சத்தம் எதுவுமில்லை. கோவிலின் மேற்காக ஆற்றினில் நீச்சலடித்து மகிழும் ஐந்து பத்து இளவட்டங்களின் ஆரவாரம் எதுவுமின்றி ஆற்றங்கரை உறங்கிக் கிடக்கிறது. கொளுத்தும் வெய்யில்..... சுடுமணல்..... பெரு மரங்களின் கீழே இரண்டு மூன்று பேராக அமர்ந்திருந்து கதைகள் பேசும் "கோவிலடி ஆட்கள்" தவிர வேறு எவ்வித சன நடமாட்டமும் இன்றி சந்நிதிச் சுற்றாடல் வெறிச்சோடிக் கிடக்கிறது. கோவிற் சுற்றாடலில் உள்ள கடைகள் அனைத்தும் பூட்டப்பட்டிருப்பதால் பணம் கொடுத்தேனும் எங்கும் எதுவும் வாங்க முடியாத சூழல். "ஊரடங்கு வேளையிலும் மூன்றுவேளை உணவு கிடைக்குமா? தேனீர் கிடைக்குமா? ஏக்கம்..... தவிப்பு..... "எப்படியும் முருகன் வழிசமைப்பான்" என்கிற ஆறுதல். இதுவே கோவிலடி ஆட்களின் பேசு பொருளானது.

அந்தந்தப் பூசை வேளைகளில் முருகன் சந்நிதி திறக்கப்படுகிறது. ஆரவாரம் எதுவுமின்றி பூசைகள் அமைதியாக நடைபெறுகின்றன. பூசை நிறைவுற்றதும் பூசகரால் வழங்கப்படும் பிரசாதத்தைக்கூட முண்டியடித்து வாங்கிக்கொள்ள ஆளில்லை. "கோவிலடி ஆட்கள்" மட்டுமே ஓடிச் சென்று பிரசாதத்தைத் தாராளமாகப் பெற்றுவந்து உண்டு மகிழ்கின்றனர். கோவிற் பிரசாதமும் - கோவிற் சுற்றாடற் கிணறுகளின் குடிநீர் தவிர வேறு எதுவும் எங்கும் பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலையை ஊரடங்கு ஏற்படுத்திவிட்டது.

## "கோவிலடி ஆட்கள்" எனப்படுவோர் யார்?

ஆதரவற்று, முருகன் காலடியே தஞ்சமென வந்து - நிரந்தரமாக கோயிற் சுற்றாடல் மடங்களிலேயே தங்கியிருந்து ஆறுதல் பெறும் ஐம்பதுக்கும் அதிகமான மக்களையே நாம் "கோவிலடி ஆட்கள்" என அழைக்கின்றோம். இவர்களுக்கு எப்பொழுதும் ஆறுதலும் அபயமும் கொடுத்து அரவணைத்து வருவது "சந்நிதியான் ஆச்சிரமம்" மட்டுமே. கோவிலுக்குத் தெற்காக

*தோல்விகளைக் கண்டு நீ பயந்தால் வெற்றி உன்னைக் கண்டு பயப்படும்.*

ஆற்றங்கரை ஓரமாக தென்னைமர நிழலிடத்தில் வணக்கத்திற்குரிய மயில்வாகனம் சுவாமிகளால் "ஆனந்தாச்சிரமம்" எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட அன்னப் பணியானது "சந்நிதியான் ஆச்சிரமம்" எனும் பெயரோடு இன்றுவரை தொடர்கிறது. "நித்திய அன்னப்பணியே" சந்நிதியான் ஆச்சிரமத்தின் உயிர் மூச்சாகும்.

## நித்திய அன்னப்பணி தொடர்கிறது

வழமையான கோவிலடி ஆட்களைவிட ஊரடங்கு காலத்தில் அவர்களது எண்ணிக்கை பதினைந்து இருபது பேர் வரை அதிகரித்துக் காணப்பட்டது. இந்த அதிகரிப்பு எப்படி வந்தது? குடாநாட்டின் வெவ்வேறு கோவில்களில் தங்கியிருந்த ஒரு சிலரும், தனித்தனியே வீடுகளில் தங்கியிருந்த சில வயோதிபர்களும் ஊரடங்கு பல வாரம் தொடரப் போவதை அறிந்து சந்நிதியானைத் தஞ்சமடைந்தனர். அவர்கள் அத்தனை பேருக்கும் தொடர் ஊரடங்கு காலத்தில் ஆச்சிரமம் பசி போக்கியது.

சரியாக 12 மணிக்கு, ஆச்சிரம மைய மண்டபத்தில் அமைந்துள்ள கருவறையில் வீற்றிருக்கும் முருகப்பெருமானுக்குரிய பூசை நிறைவெய்தியதும் கோவிலடி ஆட்கள் மதிய உணவிற்காக உள்ளே அழைக்கப்படுகிறார்கள். இவர்களில் மூன்று வகையினர் உளர். ஒன்று: மண்டபத்தில் அமர்ந்திருந்து உணவு உட்கொள்வோர். இரண்டு: கால்களை மடக்கி பந்தியில் அமரமுடியாமல் அச்சுக்கூட வாசல் வாங்குகளில் - கைகளில் தட்டுக்களுடன் அமர்ந்திருப்போர். மூன்று: சந்நிதிச் சுற்றாடல் மடங்களில் ஆங்காங்கே தங்கியிருந்தபோதும்- நடந்து ஆச்சிரமம் வரமுடியாமல் உள்ள ஏறக்குறைய 10பேர் வரையிலான இவர்களது சாப்பாட்டுத் தட்டுகள் மற்றையவர்கள் மூலமாக அச்சுக்கூட வாங்கிற்கு வந்து சேரும். மண்டபத்தில் பந்தி நடைபெற்றுக்கொண்டிருக்கும் சம வேளையிலேயே, இரண்டாம் - மூன்றாம் திறத்தாரின் தட்டுகள் சேகரிக்கப்பட்டு - உள்ளே வரிசையாக வைத்து உணவு பரிமாறப்பட்டு மீண்டும் வாசல் வாங்குகளுக்கு உணவுத் தட்டுகள் வந்து சேருகிறது. தத்தமக்குரிய தட்டுகளை அவரவரே எடுத்துச் செல்கின்றனர்.

காலையில் பால் தேநீரும் - மாலையில் வெறும் தேநீரும் வழங்கப்படுகிறது. காலை வேளைகளில் இடியப்பம், நூடில்ஸ், உப்புமா, தோசை, அப்பம், இட்லி முதலான மாற்று உணவுகள் வாரத்தில் குறிப்பிட்ட அந்தந்த நாட்களில் வழங்கப்பட்டு வருகின்றன. மாலையில் அநேகமாக பாணும் பருப்பும் அல்லது சாம்பாரும் இவர்களுக்குக் கிடைக்கிறது. காலையும்-மாலையும் ஆச்சிரமம் வரமுடியாதவர்களுக்கான உணவுத் தட்டுகளை ஏனையவர்கள் எடுத்துச் செல்வர்.

## ஊரடங்கு காலத்தினை சுவாமிகள் எவ்வாறு வெற்றி கொண்டார்?

ஊரடங்கிற்கான அறிவித்தல் வெளியானதும் ஆச்சிரம சுவாமிகளின் சிந்தனை முழுவதும் நித்திய அன்னப்பணி பற்றியதாகவே இருந்தது. சிந்தனையின் முடிவில் "எல்லாவற்றிற்கும் முருகன் வழி திறப்பான்" என்கிற முடிவுடன் தனது வழமையான பணிகளை ஆற்றிக்கொண்டிருந்தார் சுவாமிகள். ஊரடங்கு நடைமுறைக்கு வந்துவிட்டது. கோவிலடி

ஆட்களுக்கான காலைத் தேநீருடன் வழமையான அன்னப்பணிக்கான ஆயத்தங்கள் நடை பெற்றன. மதியம் பந்தியும் தொடர்ந்தது.

ஊரடங்கு காலத்தினை மிகக் கடுமையாக நடைமுறைப்படுத்திய அரசாங்கம், கமக்காரர் தோட்டங்களில் நடமாடவும் உற்பத்திப் பொருட்களை இடம்மாற்றவும் - கொண்டு செல்லவும் எவ்விதத் தடையும் விதிக்காமல் இலகுவாக நடந்துகொண்டமை ஆச்சிரம அன்னப்பணிக்கு அனுகூலமாக அமைந்தது. பொலிசாரின் அனுமதிப் பத்திரத்துடன், ஏற்கனவே ஆச்சிரமத்துடன் தொடர்பில் உள்ள தோட்டச் செய்கையாளர்களிடம் (குறிப்பாக: இராசவீதி- ஊரெழு, உரும்பராய், குப்பிளான், ஈவினை போன்ற பகுதிகள்) சுவாமிகள் நேரடியாகச் சென்று காய்கறிகள் பெற்று வந்தமையால் - ஊரடங்கு வேளையிலும் நான்கைந்து கறி வகைகளுடன் அன்னம் பரிமாற முடிந்தது. ஆச்சிரமத்தில் கடமைபுரியும் வேலையாட்கள் மிகக் குறைவானவர்களாகக் காணப் பட்டபோதிலும், அவர்கள் கூடுதல் சிரமங்களைப் பொருட்படுத்தாமல் இந்தத் தொடர் ஊரடங்கு வேளையிலும் தத்தம் கடமைகளைச் செவ்வனே ஆற்றினர்.

நெருக்கடியான ஊரடங்கு வேளையில் ஆச்சிரம சுவாமிகளால் நிதி நிலவரங்களை எவ்வாறு சமாளிக்க முடிந்தது? வழமையாக அன்னப்பணிக்காக உதவிபுரியும் அன்பு நெஞ்சங்கள் நிலைமையை உத்தேசித்துத் தாராளமாக உதவி செய்தனர். இதைவிட ஊரடங்குகால நித்திய அன்னப்பணிக்காகவும், ஆச்சிரமம் சார்பாகத் திட்டமிடப்பட்ட உலர் உணவுப் பொதிகள் வழங்கல் போன்ற பல்வேறு திட்டப் பணிகளுக்காகவும் விசேடமாகப் பெரும் பொருளுதவி புரிந்தோர் பலருளர். (அவர்களது உதவிகளும், பணிகளும் வேறொரு இடத்தில் பட்டியல் இடப்பட்டுள்ளது.)

### "கோவிலடி ஆட்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றினார்களா?

கோவிலடி ஆட்களுக்கு கொறோனாவுக்கான சுகாதார நடைமுறைகள்பற்றி ஆச்சிர மத்தில் அறிவுறுத்தப்பட்டு, முகக் கவசங்களும் வழங்கப்பட்டன. ஆனாலும் எழுபது பேர் வரையிலானவர்கள் ஊரடங்கு வேளையில் வருகை தரும் இவ்விடத்தில் இரண்டொருவர் மட்டுமே முகக்கவசம் அணிந்தபடி வந்தார்கள். இன்னும் இரண்டொருவரது கழுத்தினை முகக்கவசம் அலங்கரிப்பதையும் காணமுடிந்தது. நயமாகவும் - பயமாகவும் பலமுறை எடுத் துச் சொல்லியும் மொத்தமாக எந்த ஒரு சுகாதார நடைமுறையினையும் முழுமையாகக் கடைப்பிடிக்கத் தவறும் இவர்கள் கொரோனா கிருமியின் நோய்த்தாக்கம் பற்றிய தீவிரத்தன்மை எதுவும் புரியாதவர்களாகவே உள்ளனர்.

### நிறைவாக:

ஊரடங்கு காலத்திலும் இடையீடின்றித் தொடர்ந்த நித்திய பணியானது இன்றுவரை தொடர்கிறது. சந்நிதி முருகனின் திருக்கருணையும், ஆச்சிரம சுவாமிகளின் அயரா முயற்சியும், அன்பு உள்ளங்கொண்ட ஆச்சிரம ஆர்வலர்களின் உதவியும் ஆச்சிரமத்தின் அனைத்துப் பணிகளையும் துரிதப்படுத்தும் - விரைவுபடுத்தும் அப்பணிகள் அனைத்தும் இனிமேலும் தொடரும்.

*பிறர் எதைச் சொன்னாலும் கேட்டுக்கொள், உனக்கு சரி எனத் தெரிவதைச் செய்.*

## கொரோனா நிவாரணப் பணிக்காக உதவி புரிந்தோர்
(20.03.2020 தொடக்கம் 30.04.2020 வரை உள்ள விபரம்)

| | | |
|---|---|---|
| M. இந்துசேகரம் | அவுஸ்திரேலியா | 200000. 00 |
| சைவநெறிக்கூடம் - அருள்மிகு ஞானலிங்கேஸ்வரர் திருக்கோவில் | பேர்ன், சுவிஸ் | 101341. 76 |
| பொ. அருட்செல்வம் (பபாசுவாமி) | இணுவில் | 100000. 00 |
| குமாரவேல் சிவக்கொழுந்து | சுவிஸ் | 92500. 00 |
| Dr. அ. செந்தில்குமரன் | நெல்லியடி | 50000. 00 |
| திருமதி R. ரேணுகாதேவி | கனடா | 50000. 00 |
| S. சுந்தரலிங்கம் (செல்வம் பற்றிக் கடை) | யாழ்ப்பாணம் | 30000. 00 |
| ம. ஸ்ரீகாந்தன் | அச்சுவேலி | 25000. 00 |
| ந. சண்முகநாதன் (குட்டி மாஸ்ரர்) | வல்வெட்டித்துறை | 20000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் | ஆத்தியடி பருத்தித்துறை | 20000. 00 |
| து. சண்முகவரதன் | அவுஸ்திரேலியா | 15000. 00 |
| நிவேதா புனிதராசா | கனடா | 15000. 00 |
| பொ. கஜேந்திரகுமார் | யாழ்ப்பாணம் | 100001. 00 |
| செல்வி அ. கந்தையா | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| முருகேசு கௌரிகாந்தன் | | 5000. 00 |
| க. சோமசேகரம்மூலம் (வியாவில் ஐயனார் தேவஸ்தானம், காரைநகர்) | | 5மூடை அரிசி |
| சண்முகம் சிவா அண்ணன் | | 100kg பருப்பு, 10மூடை அரிசி |
| K. மயூரன் | ஏழாலை | பருப்பு, தேயிலை, சீனி, 2 புட்டி அரிசி |
| அன்னை நாகா பூட்சிற்றி | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| வே. கிரிதரன் | சுவிஸ் | 50 சுவிஸ் பிராங் |
| வே. பிரபாகரன் | சுவிஸ் | 100000. 00 (இருவருக்கும்) |
| K. விஜயசுரேஸ் | சுவிஸ் | |
| மோ. கண்ணன்மூலம் | U.K 177 பவுன்ஸ் | 177600. 00 (ஐவருக்கும்) |
| சுபாஜினி சிவகுமார் | U.K 50 பவுன்ஸ் | |
| கலியுகன் வைரவமூர்த்தி | U.K 100 பவுன்ஸ் | |
| வாசுகி ஜெயராசா | U.K 50 பவுன்ஸ் | |
| தவச்செல்வி விவேகானந்தராசா | U.K 25 பவுன்ஸ் | |
| திருமதி தவனேசன் ஜெயிதா | சுவிஸ் | 100000. 00 |
| பிரபாகரன் வத்சாங்கன் | இணுவில் | 5புட்டி மா, 1மூடை சீனி |
| திருமதி விஜயகலா மகேஸ்வரன் | கொழும்பு | 2மூடை அரிசி, 2புட்டி பருப்பு, 1புட்டி மா, 1மூடை சீனி, 40l தேங்காய் எண்ணெய். |

*வென்ற பிறகும் சமாதானம் பேசுபவனே உண்மையான வீரனாகிறான்.*

**கட்டம் கட்டமாக உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்ட விபரம் கீழே உள்ளது**

*31.03.2020* - 1ஆம் கட்டம்:
தொண்டைமானாறு - சந்நிதி வீதியைச் சேர்ந்த 35 குடும்பங்கள்.

*07.04.2020* - 2ஆம் கட்டம்:
தொண்டைமானாறு வல்லை வீதியைச் சேர்ந்த 40 குடும்பங்கள்.

*08.04.2020* - 3ஆம் கட்டம்:
தொண்டைமானாறு 3ஆம் சந்தி கொத்தியகாடு 75 குடும்பங்கள்.

*11.04.2020* - 4ஆம் கட்டம்:
கஜன் மூலமாக தெல்லிப்பழை - அளவெட்டியைச் சேர்ந்த 26 குடும்பங்கள்.

*13.04.2020* - 5ஆம் கட்டம்:
சாந்தை, பண்டத்தரிப்பைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்கு அரிசி, மா, சீனி, பருப்பு முதலானவை வழங்கப்பட்டது.

*18.04.2020* - 6ஆம் கட்டம்:
விடத்தற்பளை - கெற்பேலியில் வசிக்கும் 61 குடும்பங்களுக்கு அரிசி, மா, பருப்பு, சீனி, சோயா, தேயிலை முதலானவை சுவாமிகளால் நேரில் சென்று வழங்கப்பட்டது.

*24.04.2020* - 7ஆம் கட்டம்:
இராஜகிராமம் - கரவெட்டி மேற்கு - கரவெட்டியில் வசிக்கும் 52 குடும்பங்களுக்கு உரிய நிவாரணப் பொருட்கள் ஆச்சிரம வாகனத்தில் நேரில் சென்று வழங்கப்பட்டது.

*26.04.2020* - 8ஆம் கட்டம்:
வேம்பொடுகேணி, இந்திராபுரம் கிராமத்தில் வசித்து வருகின்ற 131 குடும்பங்களுக்கு அரிசி, மா, சீனி, பருப்பு, தேயிலை, பிஸ்கற், சவர்க்காரம், ரின்சோ என்பன ஆச்சிரம வாகனத்தில் நேரில் சென்று வழங்கப்பட்டது.

*29.04.2020* - 9ஆம் கட்டம்:
சேனைக்குடியிருப்பு, செபஸ்தியன் குனிபுர, அபயராம மாவத்தை எனும் கிராமங்களை உள்ளடக்கிய நாகேஸ்வரி ஆலயம் - அபயபுரம் - புத்தளத்தில் வசித்து வருகின்ற 54 குடும்பங்களின் நிவாரணப் பணிக்காக ரூபா 50000. 00 ஆலய பொருளாளர் திரு S. மகேந்திரன் அவர்களின் இலங்கை வங்கிக் கணக்கில் இடப்பட்டது.

***உன் பொறாமையால் மற்றவர்கள் தாழ்வதில்லை, நீதான் தாழ்வாய்.***

*03.05.2020 - 10ஆம் கட்டம்:*

வெருங்குளம் - நேகம - ஆலயடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினரின் வேண்டுகோளிற்கு அமைவாக, அவர்களது வங்கிக் கணக்கில் ரூபா 60000. 00 வைப்பிலிடப்பட்டது. குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றபடி 19 குடும்பங்களுக்கு (ரூபா 1500. 00 முதல் 4000. 00 வரையிலாக) பகிர்ந்தளிக்கப்பட்டது.

*04.05.2020 - 11ஆம் கட்டம்:*

கன்பொல்லை - கரவெட்டி மேற்கு - கரவெட்டியில் அமைந்துள்ள நாடகத்திலகம் K.V. நற்குணம் கலைமன்றத்தினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க 55 குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது. அரிசி, மா, சீனி, பருப்பு, சவர்க்காரம், ரின்சோ, தேயிலை ஆகியன பொதியாக்கப்பட்டு - ஆச்சிரம வாசலில் அவர்களது வாகனத்தில் ஏற்றி அனுப்பி வைக்கப்பட்டது.

*26-05-2020 - 12ஆம் கட்டம்:*

ஆனைவிழுந்தான்குளம் பிரதேசத்தில் உள்ள 150 குடும்பங்களுக்குரிய உலர் உணவுப் பொதிகள் ஆச்சிரமத்தில் பொதிசெய்யப்பட்டு சுவாமிகளால் நேரில் சென்று கையளிக்கப்பட்டது.

*06.06.2020 - 13ஆம் கட்டம்:*

மன்னார் - நானாட்டான் பிரதேசத்தில் உள்ள அச்சங்குளம், உமனகரி எனும் கிராமத்தில் வசிக்கும் 70 குடும்பங்களுக்காக பொதியாக்கப்பட்ட உலர் உணவுப் பொருட்கள் நேரில் சென்று வழங்கப்பட்டது.

17.06.2020 - *14ஆம் கட்டம்:*

இரணைமடு, கிளிநொச்சி என்னும் இடத்தில் அமைந்துள்ள செஞ்சோலை சிறுவர் இல்லத்திற்கு ரூபா 55000. 00 பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

**ஜபம், தியானம் மற்றும் அவை போன்ற வழிபாட்டு முறைகளின் முக்கிய நோக்கம் இறைவனின் அருளுக்குப் பாத்திரமாகும் விதத்தில் மனதைத் தூய்மைப்படுத்திக்கொள்வதுதான். அப்படிப்பட்ட மனநிலை ஏற்பட்டால் உலகியல் விஷயங்களிலும், வம்பு, தும்புகளிலும் இருக்கும் நாட்டமும் குறையும். எவ்வளவுக்கு எவ்வளவு மனம் தூய்மை அடைகிறதோ அத்தனைக்கு அத்தனை அதற்கு ஜபம், தியானம் முதலியவற்றில் விருப்பம் அதிகரிக்கும். ஆன்மிக சாதனைகளைத் தொடர்ந்து செய்து உங்கள் மனம் தூய்மை அடையும்போது, உங்கள் ஆன்மாவை உணரும் பக்குவம் உங்களுக்கு ஏற்படும். கடவுளை ஒருபோதும் மறவாதீர்கள். உங்களது அன்றாட அலுவல்களின் நெருக்கடியில் இறைவனை நினைத்துக்கொண்டேயிருங்கள். உங்கள் விருப்பு - வெறுப்புக்கள், ஆசைகள் அலைபாயும் வீணான எண்ணங்கள் ஆகியவற்றைக் குறைத்து, உங்கள் மனம் இறைவனின் சிந்தனையில் எவ்வளவு மகிழ்ச்சி கொள்கிறது என்பதைப் பாருங்கள்.**

*எதிரியை வெல்வதைவிட அவனைப் புரிந்துகொள்வதே மேல்.*

# கதிர்காம யாத்திரை -எனது அனுபவம்- (தொடர்ச்சி...)

– செல்வி சி. நிலா அவர்கள் –

எப்போது உகந்தையை அடைவோம் என்ற எதிர்பார்ப்புடனும் ஒருவித பயத்துடனும் அதாவது எமது பயணம் காட்டுப் பகுதியினூடாக இரவுப் பிரயாணமாக இருந்த காரணத்தாலும் கண்ணை மூடியபடியே பேருந்தில் இருந்த ஐயா உட்பட ஒரு சிலரைத் தவிர மற்றவர் அனைவரும் உகந்தைமலை முருகனை மனதில் நினைத்தபடி அமர்ந்திருந்தோம். வழியில் எவ்வித இடர்பாடுகளுமின்றி நாம் அனைவரும் இரவு 11 மணியளவில் உகந்தையை அடைந்தோம்.

கதிர்காம உற்சவத்தையொட்டியே உகந்தையிலும் உற்சவம் ஆரம்பமாவதால் ஆலயச் சூழல் மின் ஒளிகளாலும் வர்த்தக நிலையங்களில் கூடியுள்ள மக்களின் கூட்டத்தினாலும் கதிர்காம பாத யாத்திரைக் குழுக்களாலும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. இவற்றைக் கண்டதும் நாமும் அச் சூழலுக்குள் உள்வாங்கப்பட்டோம்.

பேருந்தைவிட்டு இறங்கியதும் அங்குள்ள கிணறுகளில் கை, கால் முகங்களைக் கழுவி ஆலயத்தை அடைந்து முருகனை வணங்கி நாம் கொண்டுவந்த இரவு உணவை



உண்டபின், பெண்கள் அனைவரும் ஆலய உள் மண்டபத்திலும், ஆண்கள் அனைவரும் ஆலய வெளிவீதியில் உறங்கினார்கள். விடிந்தபின் ஆலயச் சூழலைப் பார்த்தபொழுது அதனைச் சூழவுள்ள பகுதிகளில் காவியுடை தரித்த அடியார்களைக் காணக்கூடியதாக இருந்தது. காலை எழுந்ததும் நாங்கள் எல்லோரும் சேர்ந்து தேநீர் குடிப்பதற்காக தண்ணீரைக் கொதிக்க வைத்துக்கொண்டிருந்தோம். அந்த நேரத்தில் ஒருவர் வந்து நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? யாருடன் வந்தீர்கள் என வினவ, நாங்களும் ஐயாவைக் காட்டி இவருடன்தான் வந்தோம் என்று கூற அந்த அடியவர் உடனே சாமி நான் சோறு சமைத்துத் தருகின்றேன். சாப்பிட்டுவிட்டுத்தான் நீங்கள் போகவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஐயாவும் நாம் இன்று கதிர்காமம் செல்ல வேண்டும். நீங்கள் கேட்கின்ற காரணத்தால் உணவு உண்டபின் எமது பயணத்தை ஆரம்பிக்கின்றோம். நீங்கள் உணவைத் தயாரியுங்கள். நான் இவர்களோடு ஆலய சுற்றாடலைப் பார்வையிட்டு கடற்கரை வரை போய் வருகின்றோம் என்று கூறிவிட்டு எம் அனைவரையும் கடற்கரையை நோக்கி அழைத்துச் சென்றார்.


செல்லும்போது இங்கே இடம்பெற்ற நிகழ்வுகளைப் பார்ப்பதற்கு யாராவது தெரிந்தவர்கள் வந்தால்த்தான் தெரியும். எனக்கும் பெரிதாகத் தெரியாது. யாராவது வருவார்கள் தானே எதற்கும் கடற்கரை வரை போய்ப் பார்ப்போம் என்று ஐயா கூறியபடி சிறு சிறு பற்றைக்காடுகள் சூழ்ந்த வழியே கடற்கரையை அண்மித்தபோது பின்னால் ஒரு குரல் கேட்கின்றது. திரும்பிப் பார்த்தேன். ஒரு காவி உடை தரித்த 60 வயது மதிக்கத்தக்க அம்மா ஒருவர், சாமியார் மோகன் சாமியார் நான் வருகின்றேன், உங்களைக் கூட்டிக்கொண்டு போகின்றேன் எனக் கூறி எங்கள் எல்லோரையும் அழைத்துக்கொண்டு சென்றார். கதிர்காம பாத யாத்திரைக் குழுவினர் அனைவரும் சிறியவர் பெரியவர் என்ற பேதம் பாராது யாத்திரையில் கலந்துகொள்ளும் அனைவரையும் சாமி என்று அழைப்பது வழமை. அந்தவகையில் நாம் அனைவரும் சாமிதான். எமக்கு வழிகாட்டி கூட்டிக்கொண்டு போவதற்கு உகந்தை மலையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் வள்ளியம்மன்தான் வயோதிப மாது வடிவில் வந்திருக்க வேண்டும் என்ற மன எண்ணத்துடன் அவர் பின்னே நாம் அனைவரும் சென்றோம்.

கடற்கரையில் அலை அடித்துக்கொண்டிருக்கின்றது. அந்த நேரத்தில் எம்மை அழைத்து வந்த அம்மா கரையோரமாக சென்று மண்பிட்டியில் ஏறி நின்றபடி அங்கே பாருங்கள் இரண்டு பெரிய தோணிகள் கவிழ்ந்தபடி இருக்கின்றது. தெரிகிறதா? என்று கேட்டார். எமக்கு



*உங்கள் மனம் பிழை என்று சொல்வதை ஒருபோதும் செய்யாதீர்கள்.*

அது பெரிய தோணி உருவில் கல்லாலான உருவ அமைப்புடன் இரண்டு ஒன்றோடு ஒன்று இணைந்தபடி கிடப்பதைக் காண முடிந்தது. உடனே அந்த அம்மாவும் இது என்ன தெரியுமா? முருகன் வள்ளியைக் கடல் மார்க்கமாக இந்தக் தோணியில்த்தான் ஏற்றிக்கொண்டுவந்து இங்கே காவலர்களுடன் தங்கினாராம். முருகனையும் வள்ளியையும் தேடி வந்தவர்களைக் கண்டதும் முருகன் இந்த இரு தோணிகளையும் கருங்கல்லாக்கிவிட்டு வள்ளியுடன் பற்றைக்குள் மறைந்திருந்தார் எனவும், இவ்விரு தோணிகளுக் கிடையில் பெரிய நீளமான பாதம் ஒன்று உள்ளது எனவும், அத்துடன் முருகன் வந்த தோணியானது ஒன்று பொன்னாகவும் மற்றது வெள்ளியாகவும் இருந்தது என்று எம்மை அழைத்துவந்த அம்மையார் கூறினார். இந்தக் காட்சியை இப்போதும் போய்ப் பார்க்கலாம். நாம் போனபொழுதுகூட இவ்விடத்தில் பலர் கூடிநின்று பார்வையிடுவதைப் பார்த்து எமது குழுவினரும் அதன்மேல் ஏறி அம்மையார் கூறி யது உண்மையாக இருக்குமோ என்ற தமது ஐயத்தைத் தீர்த்துக் கொண்டார்கள். என் மன திலும் இவ் விடயம் உண்மைதான் ஏனெனில் தூரத்தில் இருந்து பார்த்தபொழுது இரு கருங்கல் பிட்டிபோல் தோன்றியது. சமீபமாகச் சென்ற போது இரு பெரிய தோணி ஒன்றோடொன்று இணைந்தபடியும் இரண்டுக்கும் இடையே உள்ள பிளவில் கடல் அலை அடிக்கும்போது, அந்தப் பிளவினூடாக கடல் நீர் வந்து போகும் காட்சி யும், அந்த இடத்தைச் சூழவுள்ள இயற்கைச் சூழலையும் பார்த்துக்கொண்டே இருக்கலாம். ஆனாலும் நாம் போன சமயம் காலைப் பொழு தாக இருந்த காரணத்தால் வெயில் ஏறுவதன் முன் அடுத்த இடங்களையும் பார்க்க வேண்டும் என்று அந்த அம்மா அவரசரப்படுத்த ஐயாவும் சரி இங்கே பார்த்தது போதும் மற்ற இடங்களையும் பார்ப்போம் என்று கூறியதற்கிணங்க நாங்களனைவரும் கல்லாலான தோணியில் இருந்து இறங்கினோம். கரைக்கு வந்ததும் அம்மையார் எம்மைப் பார்த்து நன்றாகப் பார்த்தீர்களா. இது என்ன இன்னும் பல விடயங்களை உங்களுக்கு நான் காட்டப் போகின்றேன். இன்று நான் வந்தது நல்லதாகப் போய்விட்டது. உங்களோடு நானும் பார்ப்பதற்கு வசதியாகப் போய்விட்டது. சரி வாருங்கள் போவோம் என்று கூறியதும் எமது குழுவினரும் போவதற்கு ஆயத்தமானோம். வாசகர்களாகிய நீங்களும் வருகின்றீர்களா....




(தொடரும்...

*ஏமாற்றி பெறுகின்ற எல்லாம் பெற்றவரையே ஏமாற்றிப் போய்விடும்.*

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமை காரணமாக சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வுகள் கடந்த சில மாதங்களாக நடைபெறவில்லை. சூழ்நிலைகள் சீரானதும் வாராந்த நிகழ்வுகள் அனைத்தும் வழமைபோல நடைபெறும்.

இன்றைய சூழல் விரைவில் மாற்றம்பெற்று, அனைத்து மக்களுக்கும் இலகுவான பழைய நடைமுறைகளுடன் கூடிய சமூக வாழ்க்கையும் கிடைக்க எல்லாம் வல்ல செல்வச்சந்நிதி முருகன் அருள்புரிய வேண்டுகின்றோம்.



"ஞானச்சுடர்" வாசகர்கள் அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு (சார்வரி வருடம்) வாழ்த்துக்களும் நல்லாசிகளும் உரித்தாகுக.

பதிவு இல: QD/78/NEWS/2020

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

